ஜோதி

சித்திர சகிதமான மாதப் பத்திரிகை

சுடர் 4

கதிர் 7-12

1941ஆ பிப்ரவரிமீ முதல்
1941ஆ ஜூலைமீ வரை

ஆசிரியர்

வெ. சாமிநாத சர்மா

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்,

நெ. 47, 31வது வீதி,

இரங்கூன்.

1941

வந்தே மாதரம் :

"ஜோதி"

நான்காவது சுடர் இரண்டாவது பகுதி

பொருள் அடக்கம்

அரசியல்

		கதிர்.—பக்கம்
அமெரிக்காவும் சென்ற மகாயுத்தமும்	....	11 – 53
இத்தலியும் இஸ்லாமும்	....	11 – 40
இந்தியாவும் பிரிட்டிஷாருடைய கட்சியும்	....	7 – 16
இந்தோ—சைனாவைப்பற்றி	....	8 – 24
ஈரான்	....	11 – 31
உயர்ந்த மலைகள்	....	12 – 42
உலகத்துப் பெரிய நகரங்களில் சில	....	12 – 32
ஐரோப்பிய அரசியலில் ஸ்பெயினின் முக்கியத்துவம்	....	10 – 61
கிரீசைப் பற்றி	....	9 – 60
கிரேடே தீவு	....	11 – 29
சமுதாய ஒப்பந்தம்	....	7 – 42
சிரியா	....	11 – 30
சூயஸ் கால்வாய்	....	10 – 56
சையாமைப் பற்றி	....	8 – 23
தற்கால யுத்தமுறைகள்	....	12 – 38
நிறப் பாகுபாடு	....	12 – 20
பிரான்சின் வீழ்ச்சிக்குக் காரணம்	....	7 – 21
மத்திய தரைக்கடல்	....	11 – 33
யுத்தம் எத்தனை வகை?	....	7 – 25
யுத்தம் வேண்டாம்	....	10 – 58
யூகோ ஸ்லேவியாவைப்பற்றி	....	9 – 58
ருஷ்யாவைப் பற்றி	....	12 – 59
ஜெர்மனியின் பலக்குறைவு	....	9 – 21

அன்றாட உலகம்

தினசரி நிகழ்ச்சிகள் 7 – 6, 8 – 18, 9 – 10, 10 – 8, 11 – 65, 12 – 8.

இலக்கியம்

அன்பினால் வெற்றிகொள்	....	12 – 56
இந்தியா அடிமைப் பட்டதற்கு புத்த மதம் காரணமா? இல்லை யென்கிற கட்சி	....	12 – 45
இரக்கங் கொள்	....	8 – 53
இன்றைய இலக்கியத்திற்குத் தேவை எது?	....	11 – 72
இன்றைய தேவை யென்ன?	....	10 – 20
ஒரு பெரிய மனிதனாயிரு	....	11 – 50
கீதை யருளிய கிருஷ்ணன் யார்?	....	11 – 43
சமாதானத்திற்கு வழி யென்ன?	....	12 – 25
சிலப்பதிகாரம்	8 – 26, 10 – 25,	12 – 50
தன் கையே தனக்குதவி	....	9 – 56
திருக்குறளும் விவிலியமும்	....	9 – 16
நாட்டிற்குப் புகழ்தந்த நாவலன்	....	8 – 51
பண்டைக் காலத்திய தண்டனைகள்	....	12 – 33
பீஷ்மன்	8 – 45, 9 – 28,	10 – 32
போர் வீரனாயிரு	....	7 – 39
மதமும் தேசமும்	....	8 – 36
மானிட ஜாதி திருந்துவ தெப்படி?	....	9 – 45
விருந்தும் வாழ்க்கையும்	....	12 – 37
விழுமிய செல்வம்	....	10 – 43

சரித்திரம்

ஆங்கிலோ—பர்மிய யுத்தங்கள்	....	7 – 46
கார்ல் மார்க்ஸ்	....	7 – 12
காரிபால்டி	....	10 – 16
கெயடே	....	11 – 27
சுபாஷ் சந்திரபோஸ்	....	10 – 52
தக்ஷிணேசுவரச் சுடர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்	....	7 – 29
தாமஸ் எடிஸன்	....	8 – 17
பண்டித ஜவஹர்லால் நேரு	....	9 – 51
பத்மினி	....	8 – 34
ராஜேந்திர பிரசாத்	....	8 – 56
வல்லபபாயி ஜவேர்பாயி படேல்	....	7 – 56
ஸ்டாலின்	....	12 – 43

சிறு கதைகள்

உஜ்வலினி		10 - 46, 11 - 34
கலை யெடுப்பு	....	7 - 60
காதலர்களின் சந்நியாசம்	....	11 - 59
தேவ தூதன்	....	10 - 44

துலாக்கோல்

அசலா	....	10 - 16
இந்திரா	....	7 - 15
சரித்திர தீபம்	....	12 - 15
திருஅருட் பிரகாச வள்ளலார்	....	11 - 26
நிர்மல குமாரி	....	7 - 14
பாபூ அல்லது நானறிந்த காந்தி	....	12 - 15
மகாத்மா காந்தி	....	11 - 20
மடாம் நிலாய்	....	7 - 14
ரவீந்திரநாத் தாகூர்	....	10 - 16
வின்ஸ்டன் சர்ச்சில்	....	7 - 15
விஷு வருஷ பஞ்சாங்கம்	....	10 - 7

நமது நியாய சபை

தலையங்கம்	ஒவ்வொரு கதிரின் முதற் பக்கத்திலும்

பாடல்கள்

அம்மா!	....	8 - 33
என்னை ஏன் காதலிக்கிறாய்?	....	10 - 24
தண் கதிர்	....	12 - 18
தமையனின் கடிதம்	....	10 - 41

பொருளாதாரம்

இந்தியாவில் கல்வி அபிவிருத்தி	....	12 - 14
இந்தியாவும் மோட்டார் தொழிலும்	....	7 - 51
இந்தோ—பர்மா பிரச்னை	....	9 - 33
நம்முடைய கிராமங்கள் எப்படியிருந்தன?	....	8 - 25
மனிதர்களின் சராசரி வயது	....	7 - 13

விஞ்ஞானம்

சூரிய மண்டலம்	....	10 - 37

ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 4 விக்கிரம௵ தைமீ கதிர் 7

பிப்ரவரி-1941

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—		1
அன்றாட உலகம்	—		6
கார்ல் மார்க்ஸ்-அபேதவாதத்தின் தந்தை			12
துலாக் கோல்	—		14
இந்தியாவும் பிரிட்டிஷாருடைய கட்சியும்		ஸர். ஆல்ப்ரெட் வாட்ஸன்	16
பிரான்சின் வீழ்ச்சிக்குக் காரணம்	—	ஐ. சாரங்கராஜன்	21
யுத்தம் எத்தனை வகை?	—	அ. பொன்னம்பல முதலியார்	25
தக்ஷிணேசுவரச்சுடர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்		"ஆசிரமவாசி"	29
போர் வீரனாயிரு	—	பார்த்தசாரதி	39
சமுதாய ஒப்பந்தம்	—	வெ. சா.	42
ஆங்கிலோ-பர்மிய யுத்தங்கள்	—	சி நாகையா	46
இந்தியாவும் மோட்டார் தொழிலும்		"நாராயண சிவன்"	51
வல்லபபாயி ஜவேர்பாயி பட்டேல்		"ஒரு காங்கிரஸ்வாதி"	56
துணையெடுப்பு (சிறுகதை)		"தேசிகன்"	60

ஓம்

நோய்கள் தீர வேண்டுமானால்!

தி ஸதானந்த ஆயுர்வேதிக் மெடிஸன்ஸ் & ஸோப்ஸ் லிமிடெட் கம்பெனியாரால்

தலைவர் சுவாமி ஆத்மானந்த பாரதி அவர்களின் மேற் பார்வையில் பதில் மருந்துகள் சேராமல் விதிப்படியுள்ள மருந்துகள் மட்டும் கிடைக்குமிடங்களிலிருந்து தருவித்து, தயார் செய்யப்பட்ட தைலம், மருந்து, சோப் முதலியவைகளை வாங்கி உபயோகியுங்கள்.

நாட்டரசங்கோட்டை பிரேஞ்சு ஆபீஸில் சிகிச்சைக்கு வருபவர்களுக்கு இலவசமாய்ப் பரீக்ஷை செய்து வியாதிகளுக்குத் தகுந்த சிகிச்சை செய்ய வைத்தியர்களும் வைத்திருக்கிறோம். வியாதியஸ்தர்களிடம் மருந்துக்கிரயமட்டிலும் வாங்கப்படும்.

தி ஸதானந்த ஆயுர்வேதிக் மெடிஸன்ஸ்
& சோப்ஸ் லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—சதானந்தபுரம் (திருவாங்கூர்)

பிரேஞ்சு ஆபீஸ்:—நாட்டரசங்கோட்டை (கோட்டயம்)

"கல்வி"

புதிய தமிழுலகைத் தோற்றுவிக்க
பர்மாவிலிருந்து வெளிவரும் மாத சஞ்சிகை

பர்மாவுக்கு வருஷ சந்தா ரூ. 1
இதர நாடுகளுக்கு ரூ. 1-8-0

விலாசம்:—

"கல்வி" நிலையம்,
251, மங்கமாரி வீதி,
இரங்கூன்.

ஜோதி

சுடர் 4 — பிப்ரவரி 1941 — கதிர் 7

சுதந்திரம்

பிரதி வருஷமும் ஜனவரி மாதம் இருபத்தாறாந் தேதியைச் சுதந்திர தினமாக நாம் கொண்டாடி வருகிறோம். இந்தக் கொண்டாட்டத்தை நாம் கொண்டாட ஆரம்பித்து ஏறக்குறைய பன்னிரண்டு வருஷங்களுக்கு மேலாகின்றன. சுதந்திரத்தை ஏற்கனவே பெற்று அதனைப் பந்தோபஸ்தாக வைத்துப் பாதுகாத்து அநுபவிக்கிறவர்கள் தாங்கள் எந்த நாளில் அடிமைத்தனத்தினின்று விடுதலை பெற்றார்களோ அந்த நாளைச் சுதந்திர நாளாகக் கொண்டாடி வருவதுதான் உலகத்திலுள்ள எல்லா நாட்டாரும் அநுஷ்டிக்கிற முறை. உதாரணமாக, அமெரிக்கர்கள், ஜூலை மாதம் நான்காந் தேதியைச் சுதந்திர தினமாகக் கொண்டாடுகிறார்கள். அதாவது 1776-ம் வருஷம் ஜூலை மாதம் நான்காந் தேதி அமெரிக்கா சுதந்திரம் பெற்ற நாள். அன்றுதான், அமெரிக்காவின் உரிமைச் சாஸனமும் பகிரங்கப்படுத்தப்பட்டது. இதே மாதிரி ஒவ்வொரு நாட்டாரும் கொண்டாடி வருகிறார்கள். ஆனால், இந்தியாவில், நாம், சுதந்திரம் பெறவேண்டுமென்கிற நமது சங்கல்பத்தைத் தெரிவித்துக்கொள்கிற நாளையே சுதந்திர நாளாகக் கொண்டாடுகிறோம். இந்த நாளில் நாம், நமது மனோவாக்கு காயங்களினால், சுதந்திரம் பெறவேண்டுமென்கிற நமது உறுதியை ஊர்ஜிதப்படுத்திக்கொள்கிறோம். எனவே, சுதந்திரப் பிரதிக்ஞை என்பதை யாருமே சொல்லடுக்குகள் நிறைந்த வாக்கியக் கோவை என்றோ, நமது மதச் சடங்குகளில் அர்த்தம் தெரியாமல் ஓதப்படுகிற மந்திரங்கள் போலவோ எண்ணிவிடக் கூடாது. இப்படிப்பட்ட மனோ உறுதியுடன்தான் இந்த வருஷத்துச் சுதந்திர தினத்தை எல்லோரும் கொண்டாடியிருப்பார்களென்று நம்புகிறோம்.

பிரெஞ்சு அறிஞராகிய ரூஸோ "சமூகாய ஒப்பந்தம்" என்ற நூலை, "மனிதன் சுதந்திரத்தோடு பிறக்கிறான்; ஆனால் எங்கும் கட்டுண்டு கிடக்கிறான்" என்ற வாக்கியத்தோடு தொடங்குகிறான். அதாவது மனிதன் பிறக்கிறபோதே, அவனுடன் சில உரிமைகளும் பிறக்கின்றன. அந்த உரிமைகளை அரசியல் காரணங்களி

னாலும், பொருளாதார காரணங்களினாலும் நாளாவட்டத்தில் அவன் இழந்துவிடுகிறான். இழந்துவிட்டதை மீண்டும் பெற அவன் முயற்சி செய்கிறானே, அதைத்தான் சுதந்திர முயற்சி என்றும், சுதந்திரப்போராட்டம் என்றும், சுதந்திரப் புரட்சி என்றும் பல பெயரிட்டு அழைக்கிறோம். சுதந்திரமில்லாமலிருப்பது இயற்கைக்கு விரோதமான நிலை. சுதந்திரத்தோடு இருப்பதுதான் இயற்கை நிலை. மனிதன் இயற்கை வாழ்வு வாழ வேண்டுமென்று சொன்னால், சுதந்திர வாழ்வை அவன் நடத்த வேண்டுமென்பதுதான் அர்த்தம். உலக மேதாவிகளில் ஒருவரும் தத்துவ சாஸ்திர நிபுணருமான ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் சுதந்திரம் என்பதற்குப் பின்வருமாறு வியாக்கியானம் செய்கிறார்:— "மனிதனுடைய சுபாவத்தை சில நிர்ப்பந்தங்கள் உள்ளும் புறமுமாக மூடிக்கொண்டிருக்கின்றன. அந்த நிர்ப்பந்தங்களினின்று அவனை அப்புறப்படுத்திவிடுவதுதான் சுதந்திரத்தின் நோக்கம்." இதனால் என்ன தெரிகிறதென்றால் அடிமையாயிருப்பது மனித சுபாவத்திற்கு விரோதம். அப்படிச் சில செயற்கை நிர்ப்பந்தங்கள் அவனை அந்த அடிமைத்தனத்தில் அழுத்தி வைத்திருக்குமானால், அதினின்று மீள முயற்சி செய்வது அவன் கடமை. இந்தக் கடமையை மறந்து, விதி, கர்மம் என்ற சொற்களில் தஞ்சம் புகுந்துகொள்ளப் பார்க்கிறானே அவன் கானல் நீரிலே ஸ்நானம் செய்கிறவன்; உளுத்துப்போன மரத்திலிருந்து தன் வாகனத்திற்கு அச்சாணி செய்ய முயலுகிறவன்.

அடிமைத்தனமாகிய செயற்கை நிலையிலிருந்து சுதந்திரமாகிய இயற்கை நிலைக்குச் செல்வது பிரதி மனிதனுடைய கடமைமட்டுமல்ல; தருமமுங்கூட. சுதந்திரத்திற்காகப் பாடுபடுவதுதான் தருமம்; அப்படிப் பாடுபடாமலிருப்பதுதான் அதருமம். யுத்தத்திலேகூட தரும யுத்தம் என்றும், அதரும யுத்தம் என்றும் இரண்டுவிதமுண்டு. தற்காப்பு நிமித்தம், அதாவது தன் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்கிற நிமித்தம் ஒரு ஜாதியோ, ஒரு தேசமோ யுத்தம் செய்யுமானால் அது தரும யுத்தம்; ஆனால் பிறநாடுகளை ஆக்ரமித்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கோடு அதாவது மற்றவர்களை அடிமைப்படுத்தி ஆளவேண்டுமென்ற நோக்கோடு செய்யப்படுகிற யுத்தம் அதரும யுத்தம். இதைப்போல் சுதந்திரத்திற்காகப் போராட்டம் நடத்துவது தருமம்; அப்படி நடத்தாமல், அடிமை வாழ்க்கையின் இன்பத்தில் திருப்தியடைவது அதருமம். ஆனால் இதில் ஆச்சரியப்படத்தக்க தென்னவென்றால், இந்த அதருமமே நமக்குச் சில சமயங்களில் தருமமாகக் காண்பிக்கப்படுவதுதான். அடிமை வாழ்க்கை யென்னும் பாத்திரத்தில் இன்பமாகிய தேனை நிறைய ஊற்றி வைத்து, அதனைப் பருகி மயங்கிக் கொண்டிருக்குமாறு நம்மை பலவந்தப்படுத்துகிறார்களே அவர்கள் எப்பொழுதுமே நமது நன்மைக்குத்தான் அந்தமாதிரி செய்துகொண்டிருப்பதாகச் சொல்வார்கள். இலக்கிய பண்டிதனும், அரசியல் ஞானியுமான லார்ட் மார்லி, ஒரு சமயம் கூறியமாதிரி "பிறருக்குத் தீமை செய்துகொண்டிருக்கிறவர்கள், அவர்களுக்கு நன்மையைச் செய்வதாகச் சொல்லிக்கொண்டே செய்வார்கள்."

ஆனால் இதற்கு நாம் மயங்கிவிடக் கூடாது. இந்த மயக்கத்திற்கு அடிமைப்படாமலிருப்பதே ஒரு பெரிய பிரயத்தனம். அடிமைத்தனம் என்கிற வலையை, பதவி, பட்டம் என்கிற இரண்டுவித ஆகாரங்களை உள்ளே வைத்து, நம்மீது வீசுகிறார்கள். ஆகாரத்தின்மீது ஆவல்கொண்டு நாம் அந்த வலையில் விழுந்துவிடுகிறோம். ஆகாரம் கிடைக்கிறது. ஆனால் ஆத்மாவை இழந்துவிடுகிறோம். அப்படிப் பட்டவர்களுக்கு விமோசனம் ஏது?

நாம் சுதந்திரத்திற்காக முயற்சி செய்வது ஒரு பக்கம் இருக்கட்டும். நம்மில் எத்தனைபேர் நம் நாடு சுதந்திரமில்லாத நாடு என்பதை உணர்ந்திருக்கிறார்கள்? நமது வாழ்க்கை ஒரு சிலருக்குப் பகட்டாகவும், ஆடம்பரமாகவும் இருந்தபோதிலும், பெரும்பாலோருக்குக் கசப்பாயிருக்கிறதென்பதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி எத்தனைபேர் சிந்தித்துப் பார்த்திருக்கிறார்கள்? நாம் எந்த நிமிஷத்தில் இயற்கைக்கு விரோதமான நிலையில் இருக்கிறோமென்பதை உணர்ந்துவிடுகிறோமோ, அதாவது சுதந்திரமில்லாமல் இருப்பதாக உணருகிறோமோ அந்த நிமிஷத்திலேயே அந்த நிலையிலிருந்து வெளியேறிவிட முயலுவோம். உணர்ச்சியை அடிப்படையாகக்கொண்ட எந்த முயற்சியையும் யாராலும் தடைசெய்ய முடியாது. ஒரு ஜாதி சிந்திக்கத் தொடங்காதவரையில், அது உயிரில்லாத ஒரு பிண்டம் மாதிரி. சிந்தனை என்கிற ஜீவ தாது அந்தப் பிண்டத்திற்குள் புகுந்த கணத்திலேயே அது துடிக்க ஆரம்பித்துவிடுகிறது. அந்தத் துடிப்பின் வேகத்தை எந்த அதிகார சக்தியும் அடக்கவே முடியாது. இதனால்தான் நாம் அடிக்கடி நமக்கு சிந்தனை வேண்டும் என்று கூறுகிறோம்.

சுதந்திர ஆவலானது மனிதனுக்கு மட்டுமல்ல; எல்லா ஜீவராசிகளுக்கும் சுபாவத்திலேயே இருக்கிறது. வானத்திலே பறக்கிற பட்சியைக் கூட்டிலே சிறிது நேரம் அடைத்துவைத்துப் பாருங்கள். அது எவ்வளவு வேகமாகத் தன் சிறகுகளை அடித்துக்கொள்கிறது! ஏன்? தான் விடுதலையடைய வேண்டுமென்பதில் அவ்வளவு ஆவல். பொன்னினால் கூடு கட்டி, அதில் பஞ்சணை போட்டு அதனை இருத்தி வைத்துப் பாருங்கள்; அதற்கு நீங்கள் பாலும் சோறும் ஊட்டலாம்; பட்டினால் அதனைப் போர்த்தி வைக்கலாம்; இருந்தாலும் இவைகளின்மீது அது இச்சை கொள்வதேயில்லை. தன் இஷ்டம்போல ஆகாயத்திலே பறக்கவும், விருப்பமுள்ள சமயத்திலே தேவையான உணவைச் சாப்பிடவுமே அது விரும்புகிறது. பொற் கம்பிகளின் கட்டுப்பாட்டிற்கு அது தன் தலையை வணங்கிக் கொடுக்க மறுக்கிறது. ஆனால், எல்லையே இல்லாத அதாவது எவ்விதக் கட்டுப்பாடுமில்லாத ஆகாயத்தில் இஷ்டப்படிச் சஞ்சரிக்கவே அது முயலுகிறது. "காட்டு ராஜன்" என்ற பெயர் தாங்கிக்கொண்டு கம்பீரமாகத் திரியும் சிங்கத்தை ஒரு கூட்டிலே அடைத்துவிட்டதும், அது தன்னைச் சுற்றிப் போடப்பட்டிருக்கும் இரும்புக் கம்பிகளைத் தன் பாதங்களால் எவ்வளவு உக்கிரமாக அறைகிறது! தனக்கு வேண்டிய ஆகாராதிகள் தன்னுடைய சிரமம் எதுவும் இல்லாமல் அந்தக் கூட்டிலேயே

கிடைத்துவிட்டபோதிலும்கூட அதனை இன்பத்தோடு உண்ண அது மறுக்கிறது, இதனால், அடிமைத்தனத்திலே இருக்கிற இன்பத்தைக் காட்டிலும் சுதந்திரத்திலே இருக்கும் துன்பத்தைத்தான் பிராணி வர்க்கங்கள் கூட விழைகின்றன என்பது தெரிகிறது. பகுத்தறிவு இல்லாத பிராணிகள், சுதந்திரத்தில் இவ்வளவு வேட்கையுடையனவாய் இருக்குமானால், பகுத்தறிவுள்ள மனிதனுடைய நிலைமை என்ன? கடமை என்ன?

லோகமான்ய திலகர், அடிக்கடி "சுதந்திரம் எனது பிறப்புரிமை" என்று கூறுவார். இதன் உட்பொருளை அந்தக் காலத்தில் எத்தனை பேர் அறிந்திருந்தார்களோ நமக்குத் தெரியாது. ஆனால், எந்த மனிதனுடைய சுதந்திரத்தையும் பறிக்க யாருக்கும் உரிமையில்லையென்பதையும், அடிமையாயிருக்க மனிதன் உரிமை பெறவில்லையென்பதையும் மேற்கண்ட ஒரு வாக்கியம் தெள்ளிதின் விளக்குகிறது. அமெரிக்காவின் சுதந்திர சாஸனத்திலுள்ள சில வாக்கியங்கள் ஈண்டுக் கவனிக்கற்பாலது.

"மனிதர்கள், பிறக்கிறபோதே, ஆண்டவனால், அளிக்கப்பட்டிருக்கிற பராதீனப் படுத்த முடியாத சில உரிமைகளுடன் பிறக்கிறார்கள். இந்த உரிமைகளிற் சில, உயிர்வாழும் உரிமை, சுதந்திரமாயிருக்க உரிமை, சந்தோஷத்தை அநுபவிக்கிற உரிமை முதலியனவாம். இந்த உரிமைகளை மனிதர்கள் அநுபவிக்குமாறு செய்யவே, மனிதர்களிடையில் அரசாங்கங்கள் நிறுவப்படுகின்றன. இந்த அரசாங்கங்கள் செலுத்துகிற நியாயமான அதிகாரங்கள், ஆளப்படுவோரிடமிருந்து—அதாவது ஜனங்களிடமிருந்து—கிடைப்பவை. இந்த மாதிரி நிறுவப்படுகிற அரசாங்கங்கள் மேலே சொன்ன உரிமைகளை அழிக்க முற்படுமானால், மேற்படி அரசாங்கங்களை மாற்றவும் அழிக்கவும் ஜனங்களுக்கு உரிமையுண்டு. அப்படி மாற்றியோ அழித்தோ ஆன பிறகு, தங்களுக்குப் பாதுகாப்பையும் சந்தோஷத்தையும் அளிக்கக்கூடிய ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்த அவர்களுக்கு உரிமையுண்டு."

இதனால் தெரிவதென்ன? மனிதன், எந்த உரிமைகளோடு பிறக்கிறானோ, அந்த உரிமைகளை அவன் வைத்துப் பாதுகாக்க வேண்டும்; அப்படிப் பாதுகாக்கும் முயற்சியில் அவன் தடைப்படுத்தப் படுவானாகில், அந்தத் தடைகளை அகற்றிச் செல்வது அவனது கடமை. ஒரு மனிதன், மற்றொரு மனிதனை ஆள உரிமை கிடையாது. இதே மாதிரி தேசமும். இந்தக் கருத்தை, அப்ரஹாம் லிங்கன் பின் வருமாறு அழகாக விஸ்தரிக்கிறான் :—

"எந்த மனிதனும் மற்றொரு மனிதனை ஆளக்கூடியவனல்ல. அப்படியே, ஒரு ஜாதி மற்றொரு ஜாதியை ஆளக்கூடியதல்ல. ஒரு மனிதன், தன்னைத்தானே ஆண்டு கொள்வானாகில் அதுதான் சுதந்திரம்; அப்படியே, ஒரு ஜாதி தன்னைத்தான் ஆண்டு கொள்ளுமானால் அதுதான் சுதந்திரம். ஒரு ஜாதியை மற்றொரு ஜாதி ஆள்வது கொடுமை. ஒரு தேசம், மற்றொரு தேசத்தின் சுதந்திரத்தை அப

கரிக்குமானால், அது—அபகரித்துக் கொள்கிற தேசம்—சுதந்திரத்தோடு இருக்க லாயக்கில்லை."

சென்ற 1914ம் வருஷ மகா யுத்தத்தின் போது, அந்த யுத்தத்தின் நோக்கங்களை விஸ்தரித்து பிரசிடெண்ட் வில்ஸன், சொல்லிக் கொண்டு போகையில் பின்வருமாறு குறிப்பிட்டான் :—

"உலகத்திலுள்ள எல்லா ஜனங்களுடைய விடுதலைக்காகவும் நாம் போராடுகிறோம். சிறியதும், பெரியதுமான எல்லாத் தேசங்களினுடைய சுதந்திரத்திற்காகவும் போராடுகிறோம். எல்லா ஜனங்களும், அவரவர் இஷ்டப்படி வாழ்க்கையை நடத்தக் கூடிய விதமான உரிமைகளை அடையவும் நாம் போராடுகிறோம்."

எனவே, சுதந்திர மென்பது, மனிதனிடமிருந்து பிரிக்க முடியாததொன்றென்பது பெறப் படுகிறது. அப்படிப் பிரிக்க முடியாத தொன்றை—பிறருக்குப் பராதீனப் படுத்த முடியாத ஒன்றை—பிரித்துக் கொடுத்தோ, பராதீனப் படுத்தியோ விடுவானாகில், அவன்—அந்த மனிதன்—எப்படி மனிதன் என்று அழைக்கப்படுதற்குரியன்? இதனை நண்பர்கள் சிந்திக்க வேண்டுகிறோம்.

சுதந்திர உணர்ச்சி என்பது இன்று நேற்று தோன்றியதல்ல. மனிதன் எப்பொழுது தனிச் சொத்து பாத்தியதை கொண்டாட ஆரம்பித்தானோ அன்றிலிருந்தே அவனுடைய எதிரில் இந்தச் சுதந்திர உணர்ச்சி உதயமாயிற்றென்பதுவே அறிஞருடைய அபிப்பிராயம். ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முந்தியிருந்த அறிவாளிகள் கூட, சுதந்திரம் என்றால் என்னவென்பதை நிர்ணயித்து வைத்துப் போயிருக்கிறார்களென்று சொன்னால், அதைக்குறித்து இப்பொழுது நாம் ஆச்சரியமேபட வேண்டியிருக்கிறது. உதாரணமாக சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னர் கிரீஸ்தேசத்தில் எபிக்டேடஸ் என்ற ஓர் அறிஞன் இருந்தான். அவன் சுதந்திரத்தைப்பற்றி எவ்வாறு வருணிக்கிறான் பாருங்கள்:—

"எவனொருவன் தன்னிஷ்டப்படி வாழ்க்கையை நடத்துகிறானோ, எவன் கட்டாயத்திற்கும், நிர்ப்பந்தத்திற்கும், பலாத்காரத்திற்கும் உட்படுத்தப்படாம லிருக்கிறானோ, எவனுடைய போக்குகள் தடைப் படுத்தப்படாம லிருக்கின்றனவோ எவனுடைய ஆசைகள் பூர்த்தியடைகின்றனவோ, எவனுடைய துவேஷங்கள் சேகரிக்கப்பட ஏதுவில்லாமற் போகிறதோ அவன் தான் சுதந்திர புருஷன்."

பிறருக்கு எவ்விதத்திலும் துன்பம் ஏற்படாதவாறு பிரதி மனிதனும் அவனவன் இச்சைப்படி எண்ணவும், எழுதவும், பேசவும், நடக்கவும் உரிமையுடையவனாயிருக்க வேண்டும். இது தான் உண்மையான சுதந்திரம்; பரிபூர்ண சுதந்திரம்.

இப்படிப்பட்டதொரு சுதந்திரத்திற்காக பாடுபடுவதுதான் ஒவ்வொரு மனிதனுடைய கடமையுமாகும்.



1940

டிசம்பர்

28 இன்று மதுரையில் 22வது ஹிந்து மகா சபைக் கூட்டம் ஸ்ரீ விநாயக தாமோதர சவர்க்கார் தலைமையில் கூடியது.

கல்கத்தாவில், இந்திய மிதவாதிகளின் 28வது மகாநாடு ஸ்ரீ வி. என். சக்ரவர்க்கார் தலைமையில் இன்று கூடியிருக்கிறது.

அகில இந்தியப் பொருளாதார அரசியல் சாஸ்திர மகா நாடு ஸ்ரீமான் டி. ஆர். கட்ஜில் தலைமையில் மைசூரில் நடைபெற்றது.

விவசாயப் பொருள்களையும் கைத்தொழில் பொருள்களையும் சேமித்து வைப்போருக்கும் மூலப் பொருள்களை அழிப்பவர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்படுமென இத்தாலியில் புதிய உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. ராணுவத் தேவைகளே முதலில் கவனிக்கப் படுமாம்.

29 சயாமுக்கும் இந்தோ சைனாவுக்கும் மீண்டும் யுத்தம் தொடங்கிவிட்டிருப்பதாக சயாம் ராணுவ அறிக்கை கூறுகிறது.

ஸ்ரீமான் ஜெயப்பிரகாஷ் நாராயண் இன்று வார்தாவுக்கு மகாத்மாவை கண்டு பேச வந்திருக்கிறார்.

யுத்தம் முடிந்து ஒரு வருஷத்துக்குள் இந்தியாவுக்கு குடியேற்ற நாட்டந்தஸ்து வழங்கப்படுமென்று 1941-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31ந் தேதிக்குள் பிரிட்டிஷ் சர்க்கார் தெரிவிக்கத் தவறினால் தீவிரப் போராட்டத்தில் இறங்குவதற்கு யோசிக்கவேண்டி நேரிடுமென்று ஹிந்து மகாசபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

தமிழ் மாகாண 42வது அரசியல் மகாநாடு இன்று தஞ்சையில், ஜனாப் வி. எம். உபயதுல்லா சாகேப் தலைமையில் நடைபெற்றது.

பிரிட்டனுக்கும், இத்தாலிக்குமிடையில் ராஜிப் பேச்சு நடக்கக்கூடுமென அமெரிக்காவில் பேசப்படும் யோசனையைப் பற்றி, போப்போ லோ டி ரோமா என்ற இத்தாலிப் பத்திரிகை எழுதுகையில் இத்தகைய சமாதானப் பேச்சுகளில் அச்சு நாடுகள் நம்பிக்கை வைக்கமுடியாது. வில்சன் ஏற்படுத்திய சமாதானத்தினால்தான் தற்காலப் போராட்டம் நடைபெறுகிறது. இந்த யுத்தம் பரஸ்பரம் முரண்பட்ட இரண்டு உலகங்களுக்கிடையில் நடக்கும் யுத்தம் என எழுதுகிறது.

30 வங்கப் பிரதம மந்திரி கனம் பஸ்லுல் ஹக், இன்று முஸ்லீம் லீக்குக்கும் காங்கிரசுக்கும் சமரசம் ஏற்பட வேண்டுமென்பதாய்த் தான் ஏற்கனவே விட்டிருந்த அறிக்கைகள் பற்றி கிளம்பியிருக்கும் சந்தேகங்களுக்குப் பதில் கூறி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

ஹிந்து மகா சபையின் பொதுக் காரியதரிசியாக ஸ்ரீமான் வரத ராஜுலு நாயுடு தெரிந் தெடுக்கப் பட்டிருக்கிறார்.

இந்திய மிதவாதிகள் சம்மேளனம், யுத்தம் சம்பந்தமாய் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருப்பதில், இந்தியா விஷயத்தில் சர்க்கார் அனுஷ்டித்து வரும் கொள்கை மாறினாலன்றி இந்திய மகா ஜனங்களிடமிருந்து போதிய ஆதரவு கிடைக்காதெனக் கருதுவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

அஹ்ரார் கட்சிக் காரியதரிசி, மௌலானா தாவுத் கஸ்னவி, வெளியிட்டிருக்கும் அறிக்கையில், இறுதியான சுதந்திரப் போராட்டத்தில் எல்லோரும் கலந்துழைக்க வேண்டிய காலம் வந்துவிட்டதாடம், ஆதலால் தானும் தன் நண்பர்களும் காங்கிரசில் சேர்வதாகவும் கூறியிருக்கிறார்.

இந்தியா மீது அந்நியர் படையெடுத்தால், என் நாட்டைப் பாதுகாக்க வேறு வழியில்லாதிருப்பின் ஆயுதந் தாங்கிப் போராடச் சற்றும் தயங்க மாட்டேன். மகாத்மாவைப் போல் அஹிம்சைக் கொள்கையைப் பூரணமாக நான் அனுஷ்டிக்க முடியாது என்று மௌலானா அபுல்கலாம் ஆசாத் தெரிவித்தார்.

இன்று அமெரிக்கப் பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் ரேடியோவில் பேசுகையில், பிரிட்டன் தோல்வியுறுமாயின், ஐரோப்பா ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய கண்டங்களும் எல்லாக்கடல்களும் சர்வாதிகார நாடுகளின் வசமாகி விடும். அப்படியானால் பொருளாதாரத் துறையிலும் நாம் தாக்கப் படுவோம் என்று கூறினார்.

குமாரி இந்திரா நேரு எங்கிருக்கிறாரென்பது குறித்து அலகாபாதகில் மிகுந்த கவலையேற்பட்டிருப்பதாய் ஒரு செய்தி கூறுகிறது.

31 இந்தியர் பிரச்னையைத் தீர்க்கப் புதுவழி கையாளப்பட வேண்டுமென்று 23 பிரபல ஸ்திரீகள் லண்டன் டைம்ஸ் மூலம் ஒரு வேண்டுகோள் வெளியிட்டிருக்கிறார்கள்.

பிரபல தேசிய நடிகரான ஸ்ரீமான், எஸ். எஸ். விஸ்வநாத தாஸ் இன்று சென்னை ராயல் தியேட்டர் நாடக மேடையில் நடித்துக் கொண்டிருக்கும் போதே மரணமானார்.

1941ம் ஆண்டில் ஜெர்மனிக்கு வெற்றி கிடைத்து விடும் என்று ஹிட்லர் தமது ராணுவத்திற்கு விடுத்த புது வருஷச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரி ஜெர்மனி மக்களுக்கு ரேடியோ மூலம் விடுத்த செய்தியில், யுத்தத்தை ஜெயித்து விட்டதாக உங்களுடைய தலைவர் கூறுகிறார்; ஆனால் யுத்தம் இப்போதுதான் ஆரம்பமாகியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

1941

ஜனவரி

1 ஸ்டாலின் எழுதிய வியாசத்தை இன்று மாஸ்கோ ரேடியோ ஒலி பரப்புகையில், ருஷ்யாவுக்கு அபாயம் அதிகரித்திருக்கிறது; தேச மக்கள் அனைவரும் யுத்த சன்னத்தமாயிருக்க வேண்டும் என்று எழுதியிருப்பதாய்க் கூறியது.

பிரிட்டிஷாரால் கைதியாக்கப்பட்ட இத்தாலியக் கைதிகள் 627 பேரும், தளகர்த்தர்கள் உள்பட 300 அதிகாரிகளும் இன்று கப்பல்மூலம் பம்பாய்க்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டனர்.

பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும் அரிசி மணங்கு ஒன்றுக்கு 2 அணா 3 பை வீதம் பர்மா சர்க்கார் வரி விதித்திருக்கிறது.

இன்று காசி ஹிந்து சர்வகலாசாலையில் 28வது இந்திய விஞ்ஞானக் காங்கிரஸ் கூடியது. இதில் சர் எஸ். ராதாகிருஷ்ணன் பேசுகையில், அக்கிரமச் செயல்கள் நடப்பதற்கு விஞ்ஞான வளர்ச்சியைச் சிலபேர் சுட்டிக் காட்டுகின்றனர்; பொருளாதார வாழ்வில் குழப்பமேற்பட்டிருப்பதற்கு விஞ்ஞானம் பொறுப்பாளியல்ல என்று குறிப்பிட்டார்.

3 காங்கிரஸ் மகா சபைத் தலைவர் மௌலானா அபுல்கலாம் ஆசாத் இன்று காலை அலகாபாத் ஸ்டேஷனில் கைது செய்யப்பட்டார்.

4 தேவகோட்டை ஸ்ரீமான் டி. ஆர். அருணாசலம் செட்டியார், சத்தியாக்கிரகம் செல்வது பற்றிய சில விஷயங்களை மகாத்மாவுக்கு எழுதிக் கேட்டிருந்ததற்கு பாதுகாப்புச் சட்டப்படி சத்தியாக்கிரகிக்கு அபராதம் விதிக்கப்பட்டு செலுத்த விரும்பினால் அவர் அதைச் செலுத்தலாம்; காங்கிரசின் கட்டளைப்படி ஒரு எம். எல். ஏ. தாமாகவே சத்தியாக்கிரகம் செய்யாவிட்டால் அவருக்குப் பதிலாக வேறு யாரையும் சத்தியாக்கிரகம் செய்யும்படி செய்வது கூடாது என்று மகாத்மா பதில் எழுதி யிருக்கிறார்.

5 ஸ்ரீமதி இந்திராநேரு லண்டனுக்கு வந்து சேர்ந்து சுகமாயிருப்பதாக ஒரு தந்திச் செய்தி கூறுகிறது.

அமெரிக்கா, பிரிட்டனுக்கு அதிகமான உதவியைச் செய்துவருவதுபற்றிக் கண்டித்து ஜப்பான் பத்திரிகைகள் எழுதுவதாய்த் தெரிகிறது.

6 பார்டியா நகரம் பிரிட்டிஷார் வசமாயிற்று.

அமெரிக்கக் காங்கிரசின் 78வது கூட்டம் இன்று நடந்ததில் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் பேசும்போது ஜனநாயக சுதந்திரத்தைக் காப்பாற்றுபவர்கள் எங்கிருப்பினும் அவர்களை ஆதரிக்கும் முயற்சியில் அமெரிக்கா அஞ்சப்போவதில்லை என்று குறிப்பிட்டார்.

காங்கிரஸ் பொதுக்காரியதரிசி வெளியிட்டிருக்கும் அறிக்கையில், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தின் ஒரு பாகம் ஜனவரி 8ந் தேதி முதல் சேவாக்கிராமத்துக்கு மாற்றப்படும் எனத் தெரிவித்திருக்கிறார்.

7 ராமநாதபுரம் ஜில்லா போர்ட் உப தலைவர் ஸ்ரீமான் ஆர். வி. சுவாமிநாதன் இன்று கைது செய்யப் பட்டார்.

ருமேனியாவில் உள் நாட்டுக் கலகம் மிகவும் பலம் பெற்றிருப்பதாய் ஒரு செய்தி கூறுகிறது.

8 காங்கிரஸ் மகா சபைத் தலைவர் மௌலானா அபுல் கலாம் ஆசாத் 18 மாத வெறுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

சென்னை, ஸ்ரீமதி பாலம்மாளுக்கு 3 மாத வெறுங் காவல் தண்டனையும் 250 ரூபாய் அபராதமும், தவறினால் மேற்கொண்டு மூன்று மாத வெறுங் காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

சென்னை ராஜாங்க சபை காங்கிரஸ் அங்கத்தினர் தேவகோட்டை ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்கார் இன்று மதுரையில் காலமானார்.

சாரணை இயக்கத் தலைவர் லார்ட் பேடன் பவல் இன்று காலமானார்.

ஹிந்துஸ்தான் ஏர் கிராப்ட் லிமிடெட் என்ற பெயரால் நாலு கோடி ரூபா மூலதனத்துடன் பெங்களூரில் ஒரு புதிய கம்பெனி ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இது ஆகாய விமானங்களை உற்பத்தி செய்யும்.

9 பஞ்சாப் பிரதம மந்திரி, சர் சிக்கந்தர் ஹயத்கானின் புதல்வர் இத்தாலியரால் கைதி செய்யப்பட்டிருப்பதாக ரோம் ரேடியோ அறிவிக்கிறது.

இந்தியா சட்டசபையின் காங்கிரஸ் அங்கத்தினரான ஸ்ரீமான் ஸ்ரீபிரகாசா (காசி) இன்று கைதி செய்யப்பட்டார்.

10 இன்று, ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் பொருளாதார ஒப்பந்தம் ஒன்றும், சோவியத்—ஜெர்மன் எல்லைப் புற ஒப்பந்தம் ஒன்றும் மாஸ்கோவில் கையெழுத்திடப் பெற்றது.

ஜன நாயக நாடுகளுக்கு உதவு முகத்தான் அமெரிக்கத் தலைவர் ரூஸ் வெல்ட் தயாரித்துள்ள மசோதா இன்று பிரதிநிதிகள் சபையிலும் செனேட்டிலும் பிரேரேபிக்கப் பட்டது.

ஸ்ரீமான்கள், ராமலிங்கம், நாஸா ரெட்டி இந்த இரண்டு பேரும் சத்தியாக்கிரகம் செய்தது சம்பந்தமாய் கூடூர் ஜாயின்ட் மாஜிஸ்திரேட் மிஸ்டர் ஆர். கெல்லட்டி (ஐ. ஸி. எஸ்.) சத்தியாக்கிரகம் பற்றியும், நூல் நூற்பது பற்றியும், பேச்சுரிமையைப் பற்றியும் சில கேள்விகள் கேட்டுவிட்டு, எதிரியின் செயலால் யுத்த முயற்சிக்குத் தடை யேற்பட்டு விடவில்லையெனக் கூறி விடுதலை செய்தார். இவருடைய தீர்ப்பை சென்னை சர்க்கார் பரி

சீவித்துக் கொண்டிருப்பதாய்ச் சொல்லப் படுகிறது.

12 லோகமான்ய திலகரின் குமாரர், தமது தந்தை வைத்துச்சென்ற நிதியின் நிர்வாகிகள் காங்கிரஸினிடம் ஒப்படைக்காவிட்டால் தாம் உண்ணாவிரதமிருக்கப்போவதாகத் தெரிவித்திருந்தபடி இன்று உண்ணாவிரதம் ஆரம்பித்துவிட்டார்.

14 கிரீசுக்குச் சென்ற பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களை மத்தியதரைக் கடலில், இத்தாலிய விமானங்களும் ஜெர்மன் விமானங்களும் தாக்கியதாக பிரிட்டன் கடற்படை மந்திரி காரியாலய அறிக்கை கூறுகிறது.

ஜனநாயக நாடுகளுக்கு உதவுவதுபற்றிய மசோதா விஷயமாய், "இம் மசோதாவில் அமெரிக்கக் குழந்தைகளில் கால்பாகம் பலியாகிவிடும்" என ஒருவர் எழுதியிருந்ததை அமெரிக்கப் பிரிஸிடெண்ட் ரூஸ்வெல்ட் இன்று பலமாகக் கண்டித்தார்.

இன்று ஜப்பான் பிரதம மந்திரி பல தலைவர்களடங்கிய கூட்டத்தில் பேசுகையில், தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியில் உலக முழுவதுமே கொந்தளிப்பு ஏற்படும் இத்தகைய நிலைக்குக் காரணம் அமெரிக்கா, பிரிட்டனுக்கும், சீன சர்க்காருக்கும் உதவிபுரிந்து ஜப்பானை வரவர அதிகமாக நிர்ப்பந்தித்து வருவதேயாகும் எனக் குறிப்பிட்டார்.

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் மாஜி பிரதம மந்திரியான டாக்டர் கான் சாஹிப், இரண்டாம் தடவை சத்தியாக்கிரகம் செய்தார். ஆனால் கைதுசெய்யப்படவில்லை.

15 மகாத்மாவால் தெரிந்தெடுக்கப்பட்ட முதல் சத்தியாக்கிரஹியான ஸ்ரீமான் வினோபா இன்று விடுதலையடைந்தார்.

அபிசீனியாவில் உள்நாட்டுக் குழப்பம் வலுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

இப்படியே அல்பேனியாவிலும் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது.

16 ஜப்பானிலுள்ள ராணுவ தலைவர்களும், கடற்படை அதிகாரிகளும், இன்று அரசாங்க மந்திரிகளைக் கண்டு பேசினர். உலகப் பிரச்னைகளைப் பற்றிப் பேசியதாகச் சொல்லப்படுகிறது.

17 இங்கிலாந்தின் வியாபாரக்கப்பல் நஷ்டம் மிக அதிகமென்று பிரிட்டிஷ் கடற்படை மந்திரி கூறினார்.

ஸ்ரீ வின்ஸ்டன் சர்ச்சில் க்ளாஸ்கோ நகரத்தில் பேசுகிறபோது, இந்த யுத்தத்தில் பிரிட்டனுடைய வெற்றி நிச்சயமென்று கூறினார்.

18 பிரிட்டிஷ் ஆகாயவிமானங்கள், டச்சு துறைமுகப் பிரதேசத்தைத் தாக்கின.

19 சூடான் பிரதேசத்திலுள்ள கஸ்ஸாலா என்ற இடத்தை பிரிட்டிஷ் துருப்புகள் மீண்டும் ஆக்ரமித்துக் கொண்டுவிட்டன.

பாலஸ்தீனத்தின் தெற்குப் பிரதேசத்தில் ஆகாயவிமானங்கள் குண்டுகளை எறிந்து சேதத்தை உண்டு பண்ணின. ஆகாய விமானங்கள் யாருடையதென்று தெரியவில்லை.

மால்டா தீவு இன்று ஜெர்மன் ஆகாய விமானங்களால் பலமாகத் தாக்கப்பட்டன.

சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினம் இன்று இந்தியாவின் பல இடங்களிலும் கொண்டாடப் பட்டது.

20 ஹிட்லரும் முசோலினியும் இன்று சந்தித்துப் பேசினார்கள். எங்கே என்ன பேசினார்களென்பது தெரியவில்லை.

ஸ்ரீ ரூஸ்வெல்ட், இன்று பிரஸிடெண்டு பதவியை சம்பிரதாயமாக ஏற்றுக்கொண்டார்.

ருமேனியாவுக்கும் பல்கேரியாவுக்கும் சச்சரவு ஏற்பட்டதன் பயனாக, ஜெர்மன் படைகளுக்கு அதிக சேதமென்று சொல்லப்படுகிறது.

•

இத்தாலிய நீர்மூழ்கிக் கப்பலொன்றை, கிரேக்கர்கள் மூழ்கடித்துவிட்டார்களென்று சொல்லப்படுகிறது.

21 ஆப்பிரிக்காவில் இத்தாலியர் வசமிருக்கும் டோப்ருக் நகரத்தைப் பிரிட்டிஷ் துருப்புகள் பலமாகத் தாக்கின.

ஹிட்லர்-முஸோலினி சந்திப்பின் விளைவாக மத்தியதரைக் கடலுக்கு அதிகமான ஜெர்மன் ஆகாய விமானங்கள் அனுப்பப்படுமென்று சொல்லப்படுகிறது.

இங்கிலாந்தில் வெளியாகும் பொதுவுடைமைக் கட்சிப் பத்திரிகையாகிய 'டெய்லி ஒர்க்கர்'' என்ற பத்திரிகை அரசாங்கத்தாரால் நிறுத்தப்பட்டுவிட்டது.

இத்தாலியிலுள்ள பிரிண்டிஸி என்ற நகரத்தை கிரேக்க ஆகாயவிமானங்கள் தாக்கின.

22 டோப்ருக் என்ற நகரம் பிரிட்டிஷாரிடம் சரணடைந்து விட்டது.

பிரிட்டனைப் பாதுகாக்க நாற்பது லட்சம் துருப்புகள் ஆயுதபாணிகளாக எப்பொழுதும் தயாராயிருப்பதாகத் தெரிவித்தார்கள்.

பர்மாவில் வசிக்கும் இந்தியர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க இந்தியா அரசாங்கத்தார் எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து வருவதாக, இந்தியா அரசாங்க அங்கத்தினரான ஸர் கிரிஜா சங்கர பாஜ்பாய் கூறினார்.

23 பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் பிரதிநிதியாக தளபதி டோனோவன், பல்கேரியா-யூகோஸ்லேவியா எல்லைப் புறத்தைத் தாண்டுகிறபோது, அவருடைய தஸ்தவேஜூப் பெட்டி காணாமற் போய் விட்டது.

ருமேனியாவில் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முக்கியமான கட்டிடங்களை ஜெர்மன் துருப்புகள் ஆக்ரமித்துக் கொண்டிருக்கின்றன.

சீனாவில் நடைபெறும் யுத்த நிலைமையைப் பற்றி ஆலோசிக்க, ஜப்பானிய மந்திரிச் சபைக் கூட்டம் ஒன்று கூடியது.

மைசூர் மன்னர், ஆறு லட்சம் ரூபாய் யுத்த நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார்.

மால்டா மீது மீண்டும் ஜெர்மன் ஆகாய விமானங்கள் குண்டுகள் போட்டன.

24 அபிஸீனியாவின் மாஜி மன்னரான ஹெயிலி செலாஸி, ஜனவரி மாதம் 15ந் தேதியன்றே அபிசீனியாவுக்குள் நுழைந்து விட்டார் என்று ஒரு செய்தி கூறுகிறது.

அல்பேனியாவில் நடைபெறுகிற யுத்தத்தில் 250 இத்தாலியர்களை கிரேக்கர்கள் கைதுசெய்துவிட்டார்கள்.

அமெரிக்காவில் ஸ்ரீ ரூஸ்வெல்ட்டுக்குப் போட்டியாக நின்ற வில்லிக்கி என்பவர் இங்கிலாந்துக்கு வந்தார்.

முதன்முதலாக சத்தியாக்கிரகம் செய்த விநோபாபாவே என்பவர் இன்று இரண்டாவது முறை சத்தியாக்கிரகம் செய்ததற்காக ஆறு மாத வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

• ருமேனியாவில், ராணுவ ஆட்சி முறை ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது.

25 டோப்ருக் நகரத்தைக் கைப்பற்றின 48 மணி நேரத்திற்குள், பிரிட்டிஷ் படைகள் நூறு மைலுக்குமேல் முன்னேறியிருக்கின்றனவென்று ஒரு செய்தி கூறுகிறது,

சுதந்திர தினத்தன்று பெண்கள்மட்டுந் தான் சத்தியாக்கிரகம் செய்யலாமென்று பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டியார் ஓர் அறிக்கை விடுத்திருக்கின்றனர்,

26 ஏராளமான ஜெர்மன் துருப்புகள் இத்தலியின் தெற்குப் பிரதேசத்தில் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன வென்று ஒரு செய்தி கூறுகிறது.

பசிபிக் பிரதேசத்தில், ஜப்பானுடைய ஆதிக்கம் அதிகமாயிருக்கிற தென்று, அமெரிக்கா கூறியதை, ஜப்பானிய அந்நிய நாட்டு மந்திரி கண்டித்துப் பேசினார்.

27 கல்கத்தாவில் தமது வீட்டில் தேக அசௌகரியத்துடனிருந்த ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ், 26ந்தேதியிலிருந்து திடீ ரென்று காணப்பட வில்லை.

இத்தலியில் முக்கிய சேனாதிபதிகளுள் ஒருவராயிருந்த தளபதி கிராஸியானி, உத்தியோகத்தினின்று விலக்கப்பட்டா ரென்று ஒரு செய்தி கூறுகிறது.

சீன யுத்தத்தை ஜப்பானுக்குச் சாதகமாக முடித்து வைப்பது தமது கடமை யென்று ஜப்பானின் பிரதம மந்திரி கூறினார்.

28 இந்தியா பர்மா எங்கனும் இன்று சுதந்திர தினம் கொண்டாடப் பட்டது.

இத்தாலியில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

நமது பிரதிநிதி

ஸ்ரீமான் ராம. முத்துராமன் செட்டியார் அவர்கள், "ஜோதி" யின் பிரதிநிதியாக பர்மாவில் ஆற்று மார்க்கமாகச் சுற்றுப் பிரயாணஞ் செய்துவருகிறார். அவருக்கு அன்பர்கள், எல்லாவித ஆதரவுகளையும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்

கார்ல் மார்க்ஸ்—அபேதவாதத்தின் தந்தை

"சாஸ்திரீய சோஷலிஸம்" என்று சொல்கிறார்களே, அதனுடைய தந்தையென்று கார்ல் மார்க்ஸை சொல்வார்கள். இவன் தன்னுடைய காலத்தில், எல்லோராலும் வெறுக்கப்பட்டும் கண்டிக்கப்பட்டும் வந்தான். வாழ்க்கையில் இவன் பட்ட சிரமங்கள் பல. ஆனால் இப்பொழுது, இவன் முடிவு கட்டி வைத்துப்போன தத்துவங்கள் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இவன் எழுதிவைத்துப் போன "தாஸ்காபிடல்" என்ற நூலானது, இவன் காலத்தில் "படிக்க முடியாத நூல" என்று ஒதுக்கித் தள்ளப்பட்டதாயினும், இப்பொழுது, ஒரு சாராருக்கு வேத புத்தகமாகத் திகழ்கிறது.

கார்ல் மார்க்ஸ், 1818ம் வருஷம் மே மாதம் 5ந் தேதி, ரைன் லாந்துப் பிரதேசத்திலுள்ள ட்ரையர் என்ற ஊரில் ஹெனரிக் மார்க்ஸ் என்பவருடைய குமாரனாய் ஜனித்தான். இவன் தகப்பனார் ஒரு பிரபல வக்கீலாயிருந்தவர். தகப்பனாரைப் போலவே கார்லும் சட்டப்பரீட்சைக்குப் படித்தான். ஆனால் இவனுடைய மனமெல்லாம் கவி எழுதுவதிலும் தத்துவசாஸ்திர விசாரணையிலும் சென்றது. எந்த விஷயமாயிருந்தாலும் அதனைத் தீர விசாரிப்பது இவனுடைய சுபாவமாயிருந்தது. கலாசாலைப் படிப்பை முடித்துக் கொண்டதும், இவன் மனப் போக்குக்கிசைந்த வேலை அகப்பட வில்லை. இந்தச்சமயத்தில் 1 43ம் வருஷம் ஏப்ரல்மாதம் இவன், ஜென்னி வான் வெஸ்ட்பாலன் என்ற ஒரு பெண்ணை மணந்து கொண்டான். இவர்களுடைய குடும்ப வாழ்க்கை மிகவும் அந்நியோந்நியமாக நடைபெற்று வந்தது.

கார்ல் மார்க்ஸ், உலக சரித்திரத்தைப் பொருளாதாரக் கண் கொண்டு ஆராய்ந்து வந்தான். உலகத்தில் பொருளாதாரத் துறையில் ஏற்பட்டிருக்கிற ஏற்றத்தாழ்வுகள், முரண்பாடுகள் முதலிய எல்லாவற்றிற்கும் அடிப்படையான காரணம் தனிச்சொத்துரிமைதான் என்பதை இவன் சாஸ்திர ரீதியாக ருஜுப்பித்தான். இந்தக் கொள்கையை ஊர்ஜிதம் செய்ய இவன் பல கஷ்டங்களை பட்டான். "ரைனேஷே ஜூட்டங்" என்ற பத்திரிகையை இவன் கோலோன் என்ற நகரத்தில் தொடங்கினான். ஆனால் பத்திரிகை அதிகாரிகளால் நிறுத்தப் பட்டது. பின்னர் ப்ரஸெல்ஸ், பாரிஸ், கடைசியில் லண்டன் ஆகிய நகரங்களில் வரிசைக் கிரமமாகக் குடியேறி வாழ்ந்து வந்தான். அதிகாரிகளின் தேசப்பிரஷ்ட உத்திரவுகளின் கட்டாயத்திற் குட்பட்டே இவன் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. உலகத்தில் முதன் முதலாக பொதுவுடமைச் சங்கத்தை ஸ்தாபித்தது இவன்தான். இந்தச்

சங்கத்தின் கொள்கைகளை விவரித்து வெளியிட்ட "கம்யூனிஸ்ட் அறிக்கை" இவன் முடிவுகட்டி வைத்திருந்த கோட்பாடுகளை விளக்கமாகக் கூறியிருக்கிறது.

கார்ல் மார்க்ஸ் ஓயாமல் படிக்கிற சுபாவமுடையவன். இவன், படாத கஷ்டங்கள் கிடையாது. அநுபவியாத நோய்கள் கிடையாது. இருந்தாலும் இவன் தன் லட்சியத்தைக் கொஞ்சங் கூட விட்டுக்கொடுக்கவனல்ல. இவனுடைய வாழ்க்கையில் இவனுடைய லட்சியங்களைப் பாராட்டி, இவனுக்கு அதிகமான உதவிகள் செய்தவன் ப்ராடரிக் ஏஞ்ஜெல்ஸ் என்பவன். மார்க்ஸ்பணமுடையினால் கஷ்டப்பட்ட சமயங்களிலெல்லாம், இந்த ஏஞ்ஜெல்ஸ்தான் அதிகமான உதவிகளைச் செய்திருக்கிறான்.

மார்க்ஸின் வாழ்க்கையில் அவனுக்குத் தோன்றாத் துணைவியாயிருந்த அவன் மனைவி ஜென்னி என்பவள் 1831ம் வருஷம் இறந்து விட்டாள். இதற்குப்பிறகு இரண்டுவருஷ காலம் மார்க்ஸ் உயிர் வைத்திருந்தான். ஆனால் அந்த இரண்டுவருஷ காலம் இவன், தன் வாழ்க்கையைச் சாரமற்றதாகக் கருதி அப்படியே நடந்து வந்தான். கடைசியில் 1883ம் வருஷம் மார்ச் மாதம் 14ந் தேதி இறந்து போனான்.

மனிதர்களின் சராசரி வயது

இங்கிலாந்து	57
அமெரிக்கா	56
பிரான்ஸ்	50
ஜெர்மனி	49
ஜப்பான்	44
இந்தியா	26



மடாம் நிஸாய்

எழுதியவர்: ஸ்ரீ சி. நாகையா; வெளியிட்டோர்: வேதம் அண்ட் கம்பெனி. புஸ்தக வியாபாரிகள், 89, மோகல்தெரு, இரங்கூன். டபிள் கிரவுன் அளவு 1x16; 128 பக்கங்கள்; விலை 6 அணா.

ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் துப்பறியும் நாவல்களுக்கு அதிக கிராக்கியிருந்தது. பின்னர் இந்தக் கிராக்கிக்கு கிராக்கியில்லாமலே போய்விட்டது. ஆனால் இங்ஙனம் வெளியான துப்பறியும் கதைகளிற் பெரும்பாலன பழைய ஆங்கிலக் கதைகளின் மொழிபெயர்ப்புக்களா யிருந்தன; அல்லது அந்தந்த ஆசிரியர்களுடைய கற்பனையிலிருந்து எழுந்த கதைகளா யிருந்தன. உண்மையான சம்பவங்களைத் தொகுத்துக் கூறிய கதைகள் ஒரு சிலவே. இப்பொழுது நமது பார்வைக்கு வந்திருக்கும் புஸ்தகத்தின் கதா பாத்திரமாகிய மடாம் நிஸாய் என்பவள் ஒரு ஜெர்மன் வேவுகாரி. 1914ம் வருஷ மகாயுத்தத்திற்கு முன்னரும், யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற போதும், இவள், ஜெர்மனிக்குச் சாதகமாக வெளிநாடுகள் பலவற்றுள்ளும் துப்புப் பார்த்த விவரங்கள் இதில் காணப்படுகின்றன. உண்மையாக நடைபெற்ற சம்பவங்களாகையால் படிப்பதற்கு ருசியாயிருக்கிறது. 128 பக்கங்கள் கொண்ட இந்தப் புஸ்தகத்திற்கு ஆறு அணா விலை வைக்கப்பட்டிருப்பது மலிவென்றே சொல்ல வேண்டும்.

நிர்மல குமாரி

ஆசிரியர்: ஸ்ரீ காழி, சிவகண்ணுசாமி; வெளியிட்டோர்: சக்தி காரியாலயம் 46, முத்துமாரிச் செட்டி தெரு, சென்னை; டபிள் கிரவுன் 1x16 அளவு; 221 பக்கங்கள்; விலை: 12 அணா

இந்தியாவில் ஊழியம் புரிந்த ஓர் ஆங்கில உத்தியோகஸ்தர் எழுதிய ஆங்கிலக்கதையின் மொழிபெயர்ப்பு இந்நூல். நிர்மலகுமாரி என்ற ஒரு ஹிந்துபெண், விதவையாகி பின்னர் ஸிரில் பிராண்டன் என்ற ஆங்கில உத்தியோகஸ்தரை மணந்து கொள்கிறாள். இதுதான் இந்தக்கதையின் சாரம். ஸிரில் பிராண்டனைப்போல்,

இந்தியாவின் அபிலாஷைகளில் அநுதாபஞ் செலுத்தக் கூடிய அநேக ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் நமது நாட்டுக்கு இப்பொழுது தேவை.

ஸ்ரீ சிவ கண்ணுசாமி இந்த நூலை மிக அழகாக மொழி பெயர்த்திருக்கிறார். ஆற்றொழுக்குப் போன்ற நடை; எளிய பதப்பிரயோகங்கள். மேலும் படித்துக் கொண்டு போவதற்கு மிகவும் ருசியாயிருக்கிறது. சக்தி பிரசுராலயத்தார் மேலும் மேலும் இது மாதிரி, தெள்ளிய நடையுள்ள பல நூல்களை வெளியிட வேண்டுமென்று விரும்புகிறோம்.

வின்ஸ்டன் சர்ச்சில்

ஆசிரியர்: ஸ்ரீ எஸ். எஸ். மாரிசாமி; வெளியிட்டோர்: லோகசக்தி பிரசுராலயம், மவுண்ட் ரோட், மதராஸ்; டபிள் கிரவுன் 1x16 அளவு; 112 பக்கங்கள்; விலை: ஆறு அணா

இப்பொழுது—உலக மகாயுத்தம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில்—பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கத்தின் பிரதம மந்திரிப்பதவியை வகித்து வரும் ஸ்ரீ வின்ஸ்டன் சர்ச்சிலின் ஜீவிய வரலாற்றைத் தெரிந்து கொள்ள யாருக்குத்தான் ஆசையிராது? அந்த ஆசையைப் பூர்த்தி செய்விக்கிறது இந்த நூல். தமிழ் நடை ஒரு மாதிரியாயிருக்கிறது. ஆயினும் படிக்கவேண்டிய புத்தகம்.

வரப்பெற்றோம்

இந்திரா

ஒரு தமிழ் மாதப்பத்திரிகை; ஆசிரியர்: ஸ்ரீ. ராம. பழனியப்ப செட்டியார்; வருஷசந்தா பர்மாவுக்கு ரூ 2 விவரங்களுக்கு 'இந்திரா' ஆபீஸ், செட்டிநாடு, ராமநாதபுரம் ஜில்லா. என்று எழுதவும்.

உன்னுடைய நண்பர்கள் யார்? உனக்கு வழி காட்டும் சிநேகிதர்களை நீ பெற்றிருக்கிறாயா? அறிவுதரும் நூல்கள்தான் உன்னுடைய நண்பர்கள். ஆனால், அறிவுக்கு மட்டுமல்ல; ஆத்மாவுக்கும் அவை வெளிச்சம் தரக் கூடியவைகளாயிருக்க வேண்டும்.

—**பி. சி. ரே.**

—ஸர் ஆல்ப்ரெட் வாட்ஸன்

இந்தியாவும் பிரிட்டிஷாருடைய கட்சியும்

இந்தக் கட்டுரையில் அடங்கியுள்ள விஷயங்கள் ஒன்றும் புதியவையல்ல. ஆனால், இது இந்தியா விஷயத்தில் பிரிட்டிஷாருடைய மனப்போக்கு எப்படியிருக்கிற தென்பதை நன்றாகப் பிரதிபலித்துக் காட்டுகிறது அதிகாரத்திலுள்ளவர்கள் எப்பொழுதும் தங்கள் கட்சியை ஸ்தாபிக்கத்தான் பார்ப்பார்கள் அதையே இந்தக்கட்டுரை ஊர்ஜிதம் செய்கிறது இதனை எழுதியவர், கல்கத்தாவில் வெளியாகும் 'ஸ்டேட்ஸ்மென்' என்ற பத்திரிகையின் ஆசிரியராக எட்டுவருஷகாலம் சேவை செய்தவர். இந்தியாவைப் பற்றி அதிக அனுபவமுடையவர் என்ற பெயர் உண்டு இவருக்கு. இவருடைய அபிப்பிராயமே இப்படியிருந்தால்—?

இந்தியாவில் இப்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கல் என்ன? மேலுக்குப் பார்த்தால் ஒன்றுமில்லையென்றுதான் தோன்றுகிறது. ஆனால் சிக்கலென்னவோ இருக்கத்தான் செய்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குட்பட்ட ஒரு குடியேற்ற நாட்டந்தஸ்தை இந்தியா அடையவேண்டுமென்பதே தங்களுடைய நோக்கமென்று பிரிட்டிஷார் கூறுகின்றனர். ஆனால் தேசியக் கட்சியினராகிய காங்கிரஸ் கட்சியினரோ இந்தியா, பூரண சுதந்திரம்பெற உரிமையுடையதென்றும், தனது அரசியல் திட்டத்தைத் தானே வகுத்துக்கொள்ள அதற்கு உரிமை இருக்க வேண்டுமென்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் இருக்கவோ வெளியேறவோ அதற்கு பரிபூர்ண சுதந்திரம் தேவையென்றும் கூறுகின்றனர்.

இந்த இரண்டு கட்சிகளுக்குமுள்ள வேற்றுமை மிகச் சொற்பமாகவே காணப்படுகிறது. இந்தியாவின் அரசாங்க நிருவாகத்தை இந்தியர்களே பார்த்துக்கொள்ள வேண்டுமென்பது தான் தங்களுடைய நோக்கமென்று பிரிட்டிஷார் அடிக்கடி கூறியிருக்கின்றனர். குடியேற்ற நாட்டந்தஸ்து என்று சொன்னாலே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினின்று பிரிந்துபோகும் உரிமையும் அதனோடு இணைந்திருக்கிறது. அப்படியிருக்க, காங்கிரஸ் கட்சியினர் கூறுகிற வாதத்திற்கு அர்த்தமேயில்லை இந்தியாவின் கோரிக்கைகளுக்கு அமெரிக்காவில் அதிகமான ஆதரவு ஏற்படாமலிருப்பதற்கு இதுதான் காரணம். ஆனால் சிலர் கேட்கலாம், 'பிரிட்டிஷாரே, ஜனநாயகத்திற்காக நீங்கள் சண்டை போடுவதாகச் சொல்கிறீர்களே, அப்படியானால், இந்தியாவின் அரசாங்க அமைப்பு வேலையை இந்தியர்களிடமே விட்டுவிடுவதுதானே' என்று. ஆனால் இப்படி விடுவதற்குக் குறுக்காக அநேக தடைகள் இருக்கின்றன. அவற்றைச் சுலபமாகப் புறக்கணித்துவிட முடியாது.

காங்கிரஸானது அகில இந்தியாவுக்கும் பிரதிநிதியாக இருந்திருக்குமானால், காங்கிரஸ் கேட்கிறபடி அரசியல் நிர்ணய சபையை அமைத்து

அதனிடத்திலேயே புதிய அரசியல் அமைப்பு வேலையையும் விட்டுவிடலாம். ஆனால் இந்தியா விஷயத்தில் பிரிட்டிஷாருக்குச் சில பொறுப்புகள் இருக்கின்றன. தவிர, காங்கிரசில் சேராத பலர்—அவர்கள் காங்கிரஸ்காரர்களைக்காட்டிலும் பெரும்பாலோராயிருக்கின்றனர்—மேற்படி அரசியல் நிர்ணய சபையினிடத்தில் தங்கள் தலைவிதியை ஒப்புக்கொடுக்கத் தயாராயில்லை.

தடைகள் என்று சொன்னோமே, அவை பிரிட்டிஷாரால் சிருஷ்டிக்கப்பட்டவையல்ல. இந்தியாவிலேயே அவை ஸ்திரம் பெற்றிருக்கின்றன. அவை சீக்கிரத்தில் போக்கமுடியாதவை. ஏனென்றால் அவை, இந்திய சரித்திரத்திலேயே நூற்றாண்டுகள் கணக்காக ஊர்ஜிதம்பெற்றுக்கிடக்கின்றன. முக்கியமானது ஹிந்து-முஸ்லீம் விவகாரம். சிலர் கருதுகிறபடி மதம் காரணமாக ஏற்பட்ட விவகாரமல்ல இது. தனித்தனிப்பட்ட நாகரிகங்களையுடைய இரண்டு ஜாதியினருக்குமிடையே உள்ள வேற்றுமை இது. இரண்டு சமூகத்தினரும் இந்தியாவுக்குச் சுயராஜ்யம் தேவையென்று தான் சொல்கிறார்கள். இரண்டுபேரும் உபயோகிக்கிற வார்த்தைகள் ஒன்றாயிருந்தாலும், கருத்துக்கள் வேறே.

இந்தியாவில் ஹிந்துக்களின் ஜனத்தொகை சுமார் 24 கோடி. முஸ்லீம்களின் ஜனத்தொகை சுமார் 8 கோடி. இந்த எட்டுக்கோடி பேராயுள்ள முஸ்லீம்கள், இந்தியாவில் நூற்றாண்டுகள் கணக்காக ராஜ்யபாரம் செலுத்தி வந்திருக்கிறார்கள். இந்த விஷயத்தை அவர்கள் மறக்கவேயில்லை. பெரும்பான்மையோருடைய ஆட்சி என்பதை அடிப்படையாகக்கொண்ட ஜனநாயக ஆட்சியை முஸ்லீம்கள் ஆட்சேபிக்கிறார்கள். ஏனென்றால் அப்படிப்பட்ட ஜனநாயக ஆட்சி ஹிந்துக்களின் ஆட்சியாகவே இருக்கும். எந்த விஷயத்திலும் ஹிந்துக்களின் ஓட்டுக்களே பெரும்பாலான ஓட்டுக்களாயிருக்கும். அப்படியானால், தங்களுக்கு அரசியல் நிர்ணய சபையில் இடமெங்கே யிருக்கப்போகின்றது? இந்தமாதிரியான ஆட்சேபங்களையே முஸ்லீம்கள் சொல்கிறார்கள். சிறுபான்மையோருடைய உரிமைகளுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய மாதிரி எந்தவிதமான சட்டங்களும் இயற்றப்படமாட்டா என்று காங்கிரஸ் கட்சியினர் எவ்வளவு உறுதி கூறினாலும், அதனை முஸ்லீம்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. பெரும்பான்மையான ஓட்டு பலத்தைக் கொண்டு நடைபெறுகிற ஓர் அரசாங்கத்தினிடத்தில் அவர்களுக்கு நம்பிக்கையில்லையென்ற அளவுக்கு முஸ்லீம்கள் ஜனநாயக வாதிகளில்லைதான். பிரிட்டிஷார், இந்தியாவை விட்டு விலகிச்சென்றுவிட்டால், தாங்கள் மீண்டும் இந்தியாவின் எஜமானர்களாக வந்துவிடலாமென்று அவர்கள் பார்க்கிறார்கள். இதனால்தான் தாங்கள் ஒரு சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அவர்கள் அங்கீகரிப்பதில்லை.

தங்களை ஒழுங்காக நடத்துவதாகக் காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு சொன்னாலும், முஸ்லீம்கள் நம்புகிறார்களில்லை. காங்கிரஸ் கட்சியினர் பெரும்பான்மையோராயிருந்த ஏழு மாகாணங்களில் அரசாங்க நிருவாகத்தை

நடத்திய காலையில் தாங்கள் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினர் பெரும்பாலோராக வந்த 'ஏழு' மாகாணங்களில், காங்கிரஸ் கட்சியினரல்லாத ஒருவருக்குக்கூட மந்திரிப் பதவிகள் கிடைக்கவில்லை. வெற்றியடைந்தவர்களுக்குத்தான் வெற்றிப் பொருள்கள் கிடைத்தன! மத்திய அரசாங்க விஷயத்திலும் இந்தமாதிரியான முறையை அநுசரித்தால், பெரும்பான்மைக் கட்சியைச் சேராதவர் யாருக்குமே மந்திரிப்பதவி கிட்டாதுதான். இந்த மாதிரியான பயங்கள் முஸ்லீம்களுக்கு மட்டுமல்ல, மற்றச் சிறுபான்மைச் சமூகத்தினருக்கும் இருக்கிறது.

ஹிந்து—முஸ்லீம் வேற்றுமைகளை பிரிட்டிஷார் உண்டுபண்ணியதாகச் சொல்லப்படுகிறது. இது மகா அபத்தம். இந்தியாவில் பொறுப்பாட்சி முறை ஆரம்பித்த காலந்தொட்டு, ராஜப் பிரதிநிதிகளாகவந்துள்ள பலரும் எல்லாச்சமூகத்தினரையும் ஒன்றுபடுத்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி இவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருந்தாலும், மத சம்பந்தமாக இருந்த பிணக்குகள் அரசியல் பிணக்குகளாக மாறிவிட்டன. பசுவதை, மசூதிக்குமுன் மேளங்கொட்டுதல் முதலிய பிரச்னைகள் போய் உத்தியோகப் பங்கீடுகள், சட்டசபையில் ஸ்தானங்கள் ஆகிய பிரச்னைகளாக மாறிவிட்டன.

பிரிட்டிஷார்மீது ஏதேனும் குறை சொல்வதாயிருந்தால், அவர்கள் தொடர்ந்து இந்தியாவுக்குச் சுய ஆட்சி முறையைப் படிப்படியாக வழங்க முயற்சி செய்திருப்பதுதான். புதிய பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள இந்தியா தயாராயிருக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்தப் பொறுப்பை பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வழங்கியிருக்கின்றனர். முற்போக்கான எண்ணங்களையுடைய பிரிட்டிஷார் பலருடைய பெருமுயற்சியின்பேரிலேயேகாங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டது. பிரிட்டிஷார் பலர் காங்கிரஸ் தலைவர்களாயிருந்திருக்கிறார்கள். இந்தியாவில் பிரிட்டிஷார் எவ்விதத் தங்குதடங்கலுமின்றி ஆட்சி புரிந்துகொண்டிருக்கிறவரையில், அவர்களை எதிர்த்துப் போராட எல்லாச் சமூகத்தினரும் ஒன்று சேர்ந்திருக்கின்றனர். இந்தியர்கள் பதவிக்கு வருகிற காலத்தில்தான், பிணக்குகள் தோன்றிவருகின்றன.

இப்பொழுது முஸ்லீம்கள் ஜனாப் ஜின்னாவினுடைய தலைமையில் ஒரு கோஷ்டியாகச் சேர்ந்துகொண்டு இந்தியாவை ஹிந்து இந்தியாவென்றும், முஸ்லீம் இந்தியாவென்றும் பிரிக்க வேண்டுமென்று கேட்கின்றனர். இப்படி இந்தியாவை இரண்டு துண்டாகப் பிரிப்பதென்றால் அது விநோதமாகத்தான் இருக்கிறது. ஆனால் முஸ்லீம்கள் இந்தமாதிரியான மனப்பான்மை கொண்டுவிட்டதற்குக் காரணம் காங்கிரஸின் போக்குதான்.

இந்தியர்களுடைய பூரண நிருவாகத்தின்கீழ் இந்தியா முழுவதையும் கொண்டுவருவதற்கு மற்றொரு சங்கடமும் இருக்கிறது. இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் நான்கில் ஒரு பங்கினரும் விஸ்தீரணத்தில் மூன்றில் இரண்டு பாகமும், பிரிட்டிஷாரு

டைய நேரான ஆட்சி முறைக்குட்பட்டு இல்லை. சுதேச மன்னர்களுடைய ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கும் இந்தச் சுதேச மன்னர்களுக்கும் சில உடன்படிக்கைகள் இருக்கின்றன. இந்தியாவை ஒன்றுபட்ட ஒரு சமுதாயமாக்க வேண்டுமானால், இந்தச் சுதேச மன்னர்களுடைய ஒத்துழைப்பும் தேவையாயிருக்கிறது. 1935-ம் வருஷத்து இந்தியா அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் நடைபெற்ற ஆலோசனைகளின் போதெல்லாம், இந்தியாவில் ஒரு சமஷ்டி அரசாங்கம் ஏற்படுவதாயிருந்தால், அதில் தாங்கள் கலந்துகொள்ளச் சித்தமாயிருப்பதாக சுதேச மன்னர்கள் தெரிவித்தார்கள். ஆனால், பின்னர், இவர்கள், எங்கு ஒரு சமஷ்டி அரசாங்கத்தில் தாங்கள் சேர்ந்துகொண்டால், தங்களுக்கு இதுகாறும் இருந்த சில அதிகாரங்கள் கை நழுவிப் போகுமோவென்று பயந்து போனார்கள். தவிர காங்கிரஸ்காரர்கள் இவர்களை அதிகமாகத் தாக்கத் தொடங்கியதினின்றும், இவர்கள் இன்னும் அதிக பிடிவாதம் காட்ட ஆரம்பித்தார்கள்.

சென்ற மூன்று வருஷ காலமாக இந்திய ராஜப் பிரதிநிதியும், பிரிட்டிஷ் அரசாங்கமும், இந்தியாவைக் குடியேற்ற நாட்டந்தஸ்துக்கு அழைத்துச் செல்லக்கூடிய சமஷ்டி அரசியலைப் புகுத்த எவ்வளவோ பிரயத்தனப்படுகிறார்கள். ஆனால் ஏதேனும் ஓரிடத்திலிருந்து இதற்கு எதிர்ப்பு இருந்து கொண்டிருக்கிறது. 1939ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஐரோப்பிய யுத்தம் தொடங்கப்பட்ட காலத்தில், எல்லா மாகாணங்களிலும், இந்திய மந்திரிகளின் நிருவாகத்தின்கீழ் சுய ஆட்சி முறை நடைபெற்று வந்தது. ஜனங்களுடைய அன்றாட வாழ்க்கை சம்பந்தப்பட்ட விஷயங்கள் இவர்களுடைய மேற்பார்வையிலேயே இருந்துவந்தன. மத்திய அரசாங்கமானது, சட்டசபைக்குப் பொறுப்பில்லாத ஒரு நிருவாக சபையுடன் கூடியதாக நடைபெற்று வந்தது.

யுத்தம் தொடுப்பதும், சமாதானம் பேசுவதும், ராஜப் பிரதிநிதியின் விசேஷ அதிகாரங்கள். எனவே, ராஜப் பிரதிநிதியானவர், ஐரோப்பிய யுத்தம் ஏற்பட்டதும், இந்தியாவையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய யுத்த முயற்சிகளோடு சேர்த்துவிட்டார். பிறகு தமக்கு ஆலோசனை கூற, இந்தியாவிலுள்ள பல கட்சிகளின் தலைவர்களையும் அழைத்தார். முஸ்லீம்களும், மூன்று மாகாணங்களிலிருந்த (பஞ்சாப, வங்காளம், அஸ்ஸாம்) கூட்டு மந்திரி சபைகளும் இந்த யுத்த முயற்சிகளில் மனப்பூர்வமாகக் கலந்துகொண்டன. இப்படியே சுதேச மன்னர்களும் ஒத்துழைத்தார்கள். ஆனால் காங்கிரஸ் மட்டும், யுத்த நோக்கங்களைத் தெரியப்படுத்த வேண்டுமென்றும், யுத்தம் முடிந்தபிறகு இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்றும் சில ஆட்சேபங்களைக் கிளப்பியது.

ராஜப் பிரதிநிதியின் நோக்கம் என்னவாயிருந்ததென்றால், தமது நிருவாக சபையில் இன்னும் முக்கியமான சில அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், யுத்த ஆலோசனைக் கமிட்டி

என்றொரு கமிட்டியை ஏற்படுத்தி அதன்மூலமாக எல்லா இந்தியர்களுடைய ஒத்துழைப்பையும் பெற வேண்டுமென்றும் இருந்தது. ஆனால் காங்கிரஸ் இந்த யோசனைகளை அடியோடு நிராகரித்துவிட்டு, மத்திய அரசாங்கத்தை ஒரு தேசிய அரசாங்கமாக்கவேண்டுமென்று கோரியது. இந்தக் கோரிக்கை உடனே நிறைவேற்றப்படாவிட்டால், தாங்கள் பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்றிக்கொண்டிருந்த எட்டு மாகாணங்களின் மந்திரிச் சபைகளையும் ராஜீநாமா செய்துவிடுமாறு உத்திரவிட்டது. இதன் பிரகாரம காங்கிரஸ் மந்திரிச் சபைகள் ராஜீநாமா செய்துவிட்டன. இந்த மாகாணங்களின் நிருவாகம் கவர்னர்களுடைய பொறுப்புக்கு வந்து சேர்ந்தன.

இந்தவிஷயத்தில் காங்கிரஸ் பெரிய தவறு செய்துவிட்டது என்பதை யாருமே அங்கீகரித்துக்கொள்வர். தாங்கள் அடையமுடியாத ஒரு காற்றைப் பின்தொடர்ந்து இவர்கள் செல்கிறார்கள். இதனால் இவர்கள் உண்மையான நிகழ்ச்சிகளை மறந்துவிடுகிறார்கள்.

இதற்குப் பின்னர், காங்கிரசானது, மகாத்மா காந்தியின் சர்வாதிகாரத்தின்கீழ் வந்தது. அவர் காங்கிரசில் நாலணா சந்தா செலுத்தும் அங்கத்தினர்கூட இல்லை. அவர் அஹிம்சையில் உண்மையான பற்றுக் கொண்டவர். ஆனால் அவருடைய கொள்கையை, காங்கிரஸ் கட்சியினரே எதிர்க்கலானார்கள். வெளிநாட்டுப் படையெடுப்பைச் சமாளிக்க, காங்கிரசானது, ஹிம்சையைக் கையாள வேண்டித்தானிருக்கும் என்று இவர்கள் தீர்மானித்தார்கள். இதற்குப்பின்னர், மகாத்மா காந்தி, பிரிட்டிஷாருடைய யுத்த முயற்சிகளில் எவ்வித தடைகளும் உண்டுபண்ணப்பட மாட்டாவென்று அறிக்கை விடுத்தார்.

பின்னர், ராஜப்பிரதிநிதியும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும், மீண்டும் இந்தியா அரசாங்க நிருவாக சபையை விஸ்தரிக்கும யோசனையைக் கிளப்பினார்கள். ஆனால் காங்கிரசானது, இந்தச் சமயத்திலும் பிடிவாதம் காட்டியது. இதனால் இந்தியாவின் அரசியல் நிலைமையே இப்பொழுது ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். பரிபூரண சுயேச்சை என்று சொல்கிறார்களே அது, வெறும் வாய்ச்சொல் அலங்காரமென்பதாகவே யுத்தத்திற்கு உதவி செய்கிறவர்கள் அத்தனை பேரும் கருதிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்பம் என்பது எங்கே இருக்கிறது?
போராட்டத்திலே. —ஓர் அறிஞன்

—ஐ. சாரங்கராஜன்

பிரான்சின் வீழ்ச்சிக்குக் காரணம்

தற்போது நடைபெற்று வரும் மகா யுத்தத்தில் எத்தனையோ பயங்கரமான சம்பவங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆச்சர்யமான சில காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. மசாரிக்கினால் உருவம் பெற்ற ஜெக்கோஸ்லோவேகியாவும், பில்தூஸ்கியினுடைய மகத்தான தியாகத்தை யேற்றுக்கொண்ட போலந்தும், ஆரிய ஜாதியின் புனிதத் தன்மை யென்கிற பலிபீடத்தில் இரையாகிவிட்டன. நார்வே, பெல்ஜியம், டென்மார்க், ஹாலந்த் முதலிய நாடுகள் ஜெர்மனியின் ஆயுத பலத்திற்குத் தலை வணங்கிவிட்டன. இவையெல்லாம் ஆச்சர்யகரமான விஷயங்கள்தான், ஆனால் பிரான்சு வீழ்ந்துபோனதுதான் இந்த ஆச்சரியத்திலே மிகப்பெரிய ஆச்சரியம். இதைக்கண்டு நாகரிக உலகமே நடுங்கி விட்டது. ஏனென்றால் சென்ற ஆயிர வருஷகாலமாக, பொதுவாக உலக நாகரிகத்திற்கும் சிறப்பாக ஐரோப்பிய நாகரிகத்திற்கும் தாயகமாயிருந்தது பிரான்ஸ்தான். எந்த நாட்டிலே சுதந்திரம் என்கிற விதை முதன் முதலாக ஊன்றப்பட்டதோ, எந்த நாட்டிலே, சுயேச்சாதிகார சக்திக்கு அஞ்சியவர்கள் எல்லோரும் வந்து தஞ்சம் புகுந்தார்களோ, எந்த நாட்டிலே வால்டேரும், ரூஸோவும் பிறந்து உலக சுதந்திரத்திற்கு வழி காட்டினார்களோ அந்த நாடு, நெப்போலியன் என்ற வீரனை யீன்ற நாடு, இப்பொழுது அடங்கி ஒடுங்கி நிற்கிறது. பிரான்ஸ் வீழ்ச்சியுற்றது என்றசெய்தியைப் பத்திரிகை வாயிலாக அநேகர் படித்தார்கள். கனவிலேகூட நடவாத காரியம் நடந்துவிட்டதென்று திகைத்துப் போய்விட்டார்கள். ஒரு காலத்தில், ரோம ராஜ்யம் ஆயுத பலத்திற்கும் அரசியல் ஸ்தாபனங்களுக்கும் பெயர் பெற்றதாயிருந்தது. கிரீஸ், அறிவுத் துறையில் ஆழ்ந்து நின்றது. கார்த்தஜீனிய ஏகாதிபத்தியம் பொன்னாலும் பொருளாலும் பிரகாசித்தது. இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்புடன் கூடியதாகவே இருந்தது. எந்த ராஜ்யமும் எல்லாச் சிறப்புகளையும் பெற்றிருக்கவில்லை ஆனால் பிரான்சிலே மட்டும் மேலே சொன்ன எல்லாச் சிறப்புகளும் நிறைந்திருந்தன. அப்படிப்பட்ட பிரான்ஸ் வீழ்ச்சியுற்றது.

ஒரு சில தினங்களுக்குள் பிரான்சின் ராணுவ வீழ்ச்சியைமட்டும் நாம் பார்க்கவில்லை; பரம்பரைப் பெருமையுடைய, நாகரிக உச்சியில் ஏறி நின்றிருந்த மகத்தானதொரு சாம்ராஜ்யம் சிதறிவிட்டதைப் பார்த்தோம். இவை யனைத்திற்கும் என்னதான் காரணமாக இருக்கக்கூடும்? சென்ற எண்பது வருஷங்களாக பிரான்சில் குடியரசு ஆட்சி முறை நடைபெற்று வருகிறது. இதற்குச் சரித்திரக்காரர்கள் “மூன்றாவது குடியரசு” என்று பெயர் வைத்திருக்கிறார்கள். தோல்வியேற்பட்டு, அந்தத் தோல்வியிலிருந்து உண்டான தேசிய

எழுச்சியின் பரிணாமமே இந்த மூன்றாவது குடியரசு. குடியரசு அரசாங்கம் ஏற்பட்ட சொற்ப காலத்திற்குள் பிரான்சின் பொருட் செல்வம் பெருகியது. தேசீய வாழ்வும் சமுதாய வாழ்வும் ஒன்றுபட்டு ஓர் உயர்ந்த அந்தஸ்தை அடைந்துவிட்டன. உலகத்திலேயே அதிகமான குடியேற்ற நாடுகளைப் பெற்றிருக்கிற ஏகாதிபத்தியங்களின் வரிசையில் பிரான்சுக்கு இரண்டாவது ஸ்தானம் கிடைத்தது. ஆற்றல் நிரம்பிய ராணுவம் அங்கு அமைந்துவிட்டது. 1914ம் வருஷ மகாயுத்தத்தில், ஜெர்மனியின் சேனா சமுத்திரத்தைத் தடுத்து நின்றது பிரான்சினுடைய படை பலந்தான். அந்த யுத்தத்தில் நேசக்கட்சிப் படைகளின் சேனாதிபதிகளாயிருந்தவர்கள் தளபதி போக், தளபதி ஜாப்ரே போன்ற பிரஞ்சு வீரர்கள்தான். இப்பொழுது எந்த தளபதி வேகாண்ட் ஜெர்மானியச் சேனைக்கு முன்னர் பணிந்துபோய்விடுமாறு தமது பிரஞ்சுச் சேனைக்கு உத்திரவிட்டாரோ அதே தளபதி வேகாண்ட்தான் 1918ம் வருஷம், ஜெர்மனி இன்னின்ன நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டுத்தான் பணியவேண்டும் என்று ஆணையிட்டவர்களில் ஒருவராயிருந்தார். என்ன வீழ்ச்சி!

மூன்றாவது குடியரசு ஏற்பட்ட சொற்ப காலத்திற்குள் எல்லாத் துறைகளிலும் பிரான்ஸ் அதி தீவிரமாக முன்னேறி வந்ததாயினும், அந்த முன்னேற்றத்திற்கு ஒத்தபடியாக அதன் அகவாழ்வு அழுகிக் கொண்டு வந்தது. அரசியல் துறையில் கட்சிப் பிணக்குகள் மலிந்துவிட்டன. அரசியல் வாதிகள் தங்கள் தங்கள் கட்சியின் மேன்மையை நாடத்தான் முனைந்தார்களே தவிர நாட்டின் நலனைக் கொஞ்சங்கூட நாடவில்லை. ஒவ்வொரு கட்சியினரும் அதிகார மோகத்திற்கு வசப்பட்டவர்களாயிருந்தார்கள். உலக சகோதரத்துவத்திற்கு அடைக்கலம்கொடுக்கிற வகையில் தேசீய மனப்பான்மையை அடியோடு இழந்துவிட்டார்கள். இவர்களுடைய அற்ப மனப்பான்மையை ஒரே ஓர் உதாரணத்தினால்மட்டும் தெரிந்துகொள்ளவேண்டுமென்றால் சென்ற எண்பது வருஷக் காலத்தில் பிரஞ்சு மந்திரி சபை சுமார் எண்பது முறைக்கு மேல் மாறி மாறி அமைந்திருக்கிறதென்பது ஒன்றே போதும். பிரான்சின் வீழ்ச்சிக்கு இது ஒரு முக்கிய காரணம்.

அடுத்தது பிரான்சில் விபசாரம் அதிகமாகிவிட்டது. தற்கால நாகரிகத்தின் தீய அம்சங்களெல்லாம் அங்குச் சென்று குடியேறிவிட்டன. சிற்றின்ப வாழ்க்கையில் ஈடுபட்ட பெரிய மனிதர்கள் பலரும் உல்லாசமாகக் காலங் கழிக்க பாரிஸ் மாநகருக்குத்தான் ஓடினார்கள். பிரஞ்சு நகரவாசிகள், இங்ஙனம் உலகத்துப் பணக்காரர்கள் பலர் தங்கள் நாட்டை நாடி வருவதைக்கண்டு பெருமையடைந்தார்கள். இதனால் தங்களைப்பற்றித் தாங்களே புகழ்ந்து கொண்டார்கள். இந்தத் தற்புகழ்ச்சி மனப்பான்மை, ஆடம்பர வாழ்க்கையில் மோகம் முதலியன பிரஞ்சு சமுதாயத்தில் பரவி பிரஞ்சு ராணுவத்திற்குள்ளும் சென்றுவிட்டது. பிரஞ்சு வீழ்ச்சிக்கு இதுவொரு காரணம்.

பிரான்சில் முக்கியமான நகரங்கள் ஒரு சிலவே. பெண்ணாசை, பொன்னாசை கொண்டவர்கள் இந்த நகரங்களைத் தங்களுடைய வேட்டை ஸ்தலங்களாக ஆக்கிக்கொண்டு விட்டார்கள். சூழ்ச்சி, வஞ்சகம், பொறாமை, முதலிய தீயகுணங்கள் பல உருவங்களெடுத்து இந்த நகரங்களில் உலவி வந்தன. அரசாங்கக் காரியாலயம் முதல் பத்திரிகாலயம் வரையில் எல்லா இடங்களிலும் இவை ஆதிக்கம் செலுத்திவந்தன. ஜனங்களுடைய க்ஷேமத்திற்காக போலீஸ் இருக்கிறது என்பதுதான் எங்கும் ஏற்பட்ட சம்பிரதாயம். ஆனால் பிரஞ்சுப் போலீசில் ஊழல் நிரம்பி இருந்தது. இதனால் திறமையின்மை விருத்தியடைந்தது பலன் என்ன? ஜனங்களுக்குத் தொந்தரவுதான். நீதி ஸ்தலங்களில் நியாயத்தை வழங்குவதற்கென்று அமர்ந்திருக்கும் நீதிபதிகள்கூட அவ்வப்பொழுது அரசாங்க ஆதிக்கத்திலிருக்கும் அரசியல் கட்சிகளின் ஆணைக்கும் அச்சுறுத்தலுக்கும் இணங்கியே நீதிவழங்கி வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. பிரான்சில் நடைபெற்ற பத்திரிகைகளில் பல அந்நியநாட்டாருடைய மூலதனத்தைக் கொண்டு உயிர் வாழ்ந்து வந்தன. எந்த நாட்டாருடைய பணம் எவ்வளவு காலம் ஒரு பத்திரிகையின் சட்டைப் பையில் வந்து விழுகிறதோ அவ்வளவு காலம் வரை அந்தப் பத்திரிகை அந்த நாட்டாருடைய ஆவலுக்கும், ஆவேசத்திற்கும், சூழ்ச்சிக்கும் அடிமைப் பட்டுக் கிடக்க வேண்டியதுதான். இந்த மாதிரியான பத்திரிகைகள் பல பிரான்சின் தேசிய வாழ்வை உள்ளூற அரித்துக் கொண்டிருந்தன.

சென்ற நாற்பது வருஷ காலமாக, அதாவது இந்த இருபதாவது நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து பிரான்சில் அரசியல் ஆதிக்கம் செலுத்தி வந்த ராஜதந்திரிகளின் வரிசையை நாம் மதிப்பிட்டுப் பர்ப்போமானால் ஒருவரைக்கூட முதல் தரத்து ராஜதந்திரி என்று அழைக்க முடியாது. ஜெர்மனியில், ஒரு பிஸ்மார்க், இங்கிலாந்தில் ஒரு கிளாட்ஸ்டன், அல்லது மார்லி போன்றவர்கள் பிரான்சில் தோன்றவே இல்லை. 1914ம் வருஷம் யுத்தத்தின் போது பிரதம சூத்திர தாரியாக இருந்த கிளமென்ஷோ ஒரு குறிப்பிடத் தக்க ராஜ தந்திரிதான். ஆனால் அவனுடைய ராஜ தந்திரம் பிரான்சின் எதிர்கால வாழ்வு ஊர்ஜிதப் படும்படியாக உபயோகப்படவே இல்லை; அதன் அழிவுக்குத்தான் உபயோகப் பட்டது. வார்சேல் சமாதான மகாநாட்டில் அவன் காட்டின பிடிவாதம், வன்மபுத்தி முதலியன வெல்லாம் சேர்ந்துதான் ஜெர்மனியின் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டன; பிரான்சின் அஸ்திவாரத்தை அசைத்துக் கொடுத்து விட்டன.

பொதுவாக, பிரஞ்சு சமுதாய வாழ்க்கை அல்லது நாகரிக வாழ்க்கை முக்கிய நகரங்களிலேயேதான் படிந்து கிடந்தது. அதிர்ஷ்டவசமாக இந்த நாகரிக வாழ்க்கை பிரஞ்சு கிராம வாசிகளிடை பரவவில்லை. உலகத்திலேயுள்ள விவசாயிகளில் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து நிலத்திலிருந்து அதிகமான ஊதியம் சம்பாதிக்கிறவர்கள் பிரஞ்சு விவசாயிகள்தான். இந்த விவசாய ஜனங்களுக்கும், நகரவாசிகளுக்கும் நெருங்

கிய தொடர்பு இல்லை. பிரான்சின் ஜனத்தொகையில் ஏறக்குறைய பாதி பேர், அதாவது சுமார் இரண்டுகோடி ஜனங்கள் கிராமவாசிகள். இவர்களுடைய முக்கிய ஜீவனோபாயம் விவசாயம். தேசத்தின் மொத்த நிலத்தில் 100க்கு 97பங்கு நிலம் இவர்கள் வசத்தில் இருக்கிறது. விவசாயத் தொழிலில் ஆண்களும் பெண்களும் சமமாகவே ஈடுபட்டிருக்கின்றனர். ஆண்களைப் போலவே பெண்களும் உழைப்பாளிகள். பிரஸ்தாப யுத்தத்தில், ஆண்களிற் பெரும் பாலோர் ராணுவ சேவையில் ஈடுபட்ட காலத்தில், பெண்களே எல்லா விவசாய வேலைகளையும் கவனித்து வந்தனர். எளிய வாழ்க்கையும் நேரிய மனப்பான்மையும் கொண்ட பிரஞ்சு விவசாயிகள், ஊழல் நிரம்பிய அரசியலில் அதிகமாக ஈடுபடவில்லை. அரசியல் விஷயத்தில் இவர்கள் காட்டிய சிரத்தையெல்லாம், உணவுப் பொருள்களின் விலை ஏறிப்போகாமல் பார்த்துக் கொள்ளுதல், மறைமுகமான வரி விதிப்பு, நில அடமானம் இவைகளைப் பற்றிய சட்ட நிரூபணம் முதலியவைகளே யாம். பொதுவாக, பிரஞ்சு விவசாயிகள், பாரிஸ்மாநகரில் நடைபெறும் அரசியல் சூழ்ச்சிகளை அறவே வெறுத்து வந்தார்கள். இப்படிப்பட்ட நிஷ்கபடமனமுள்ள விவசாயிகளிடத்தில், அந்நிய நாடுகளின் பணத்தைக் கொண்டு வயிறுவளர்த்து வந்த சில துரோகிகள், இந்த யுத்த ஆரம்பத்தில் தோல்வி மனப்பான்மையை உண்டுபண்ணி வந்தார்கள். "பிரான்சாவது, ஜெயிக்கிறதாவது? முடியவே முடியாது" என்று பிரசாரஞ் செய்து வந்தார்கள். எளிய பிரஞ்சு விவசாயிகளும் இதை நம்பி விட்டார்கள். அவர்களிடத்தில் ஒரு வித சோர்வுத் தன்மை குடி கொண்டு விட்டது. பிரான்சின் வீழ்ச்சிக்கு இஃதொரு காரணம்.

சென்ற இருபது வருஷங்களாகவே பிரான்சில் ராணுவச் செலவு அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறது. ராணுவ அதிகாரிகள் எவ்வளவு கேட்டாலும் அவ்வளவையும் அரசாங்கம் சலியாமல் கொடுத்துக் கொண்டு வந்தது. அப்படியிருந்தும், பிரஞ்சு ராணுவம் யுத்த சந்நாகத்துடன் இல்லாமலிருந்திருக்கிறது. இதற்குக் காரணம், ராணுவத் தலைவர்கள் காட்டிவந்த அசிரத்தை மனப்பான்மைதான். ராணுவத்திற்கென்று அளிக்கப்பட்ட தொகையை இவர்கள் வீணுக்குச் செலவழித்தார்கள். இந்த ராணுவத் தலைவர்களிற் பலர், பெண் மோகத்தில் ஈடுபட்டுவிட்டார்கள் என்று சொல்லப் படுகிறது. இப்படிப் பட்ட ஊழல்கள் காரணமாகத்தான், பிரமாதப் படுத்தப் பட்ட மாகினோட் அரண், ஜெர்மனியின் ஆக்ரமிப்பு வெள்ளத்திற்கு முன் சோபை யிழந்து கிடந்தது. ராணுவத் தலைவர்களின் அசிரத்தை, பிரான்சின் வீழ்ச்சிக்கு ஒரு காரணம்.

—து. பொன்னம்பல முதலியார்

யுத்தம் எத்தனை வகை?

தற்போதைய உலகத்தின் எந்தப் பாகங்களிலேனும் உங்களுடைய கண்களைக் கொஞ்சம் விட்டெறிந்து நோக்குங்கள்! எந்தவிதக் காட்சிகள் தென்படுகின்றன? ஆகாய விமானங்களின் சத்தம்; பீரங்கிகளின் முழக்கம்; கப்பற்படைப் பேரிடி; டாங்கிகள்; மோட்டார்ப் படைகள் இன்னும் எத்தனைவிதமான சத்தங்கள். சண்டையில் சம்பந்தப்பட்டவர்களான போர் வீரர்களல்லாது, சாதாரண ஜனங்கள்; குழந்தைகள் யாவும் வதைக்கப்படுகின்றனர். சரித்திர பிரசித்திபெற்ற நகரங்கள்; கட்டிடங்கள் யாவும் தவிடுபொடியாகின்றன. வெகு பிரயாசை யெடுத்து வளர்த்துவைத்திருக்கும் கலைகள் அழிக்கப்படுகின்றன. ஆகாயவிமானத்திலிருந்து விழும் குண்டுகள்; கலைகளென்றோ, நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் சின்னங்களென்றோ கவனிக்குமா? நாம் புராணங்களிலும் கதைகளிலும் படித்திருக்கும் யுத்தங்களுக்கும் தற்போது நடைபெறும் யுத்தங்களுக்கும் நேர்மாறான வித்தியாசங்களை நாம் பார்க்கிறோம். இந்த யுத்தத்தில் நேரடியாக சம்பந்தப்படாத தேசங்களையுங்கூட இந்த யுத்தம் தொடாமல் விடவில்லை. விஞ்ஞான வளர்ச்சியின் அபிவிருத்தியால் நாம் வெகு தூரமாகக் கருதியிருந்தவை மிகவும் சமீபத்தில் நெருங்கிவிட்டன. இதனால் இன்று உலகத்தின் எந்த பாகத்தில் நடக்கும் யுத்தமும் இதர தேசங்களைப் பாதிக்காமல் விடுவதில்லை. சில தேசங்கள் இந்த யுத்தத்தில் கலந்துகொள்ள மனமில்லாது ஒதுங்கியிருக்க நினைத்தாலுங்கூட அப்படி முடிவதாகக் காணோம். ஒன்று அவை கலந்துகொள்ளவேண்டிய நிலைமை யேற்படுகிறது அல்லது நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ அந்தத் தேசங்கள் இந்த யுத்தத்தில் இழுக்கப்படுகின்றன. தற்போது நடைபெறும் யுத்தம் ஏதோ திடீரென அகஸ்மாத்தாக ஆரம்பிக்கபபட்ட யுத்தமா? இல்லை இது ஏற்கனவே முடிவு கட்டப்பட்ட யுத்தந்தான். பொறி கனன்றுகொண்டுதானிருந்தது. நெருப்பாகச் சுடர்விட்டெரிவதற்குச் சந்தர்ப்பம் தேவையாயிருந்தது. இந்தியாவுக்களிக்கப்பட்ட 1935-வது வருஷத்து புதிய அரசியல் திட்டத்தில் யுத்தப் பாதுகாப்புககான ஷரத்துக்களிருப்பதை நண்பர்கள் அறிவார்கள். உலக ராஜதந்திரிகளை ஏய்த்துவிட்டு இந்த யுத்தம் திடும்பிரவேசமாய்ப் புகுந்துவிடவில்லை என்பதற்கு எத்தனையோ உதாரணங்களைப் பார்க்கலாம். இவ்விதப் பயங்கரமான யுத்தங்கள் ஏன் அடிக்கடி நடைபெறுகின்றன? இந்தச் சர்ச்சையில் இறங்குவதற்குமுன், யுத்தம் எத்தனை வகைப்படும் என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். தற்காலம் நடைபெறும் யுத்தங்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1 ஏகாதிபத்திய யுத்தம். (Impe-

rial List War)

2 தேசியத் தற்காப்பு யுத்தம் (War of National Defence)

3 தேசிய சுதந்திர யுத்தம். (War of National Independence)

4 புரட்சி யுத்தம். (Counter Revolvtionary War)

ஏகாதிபத்திய யுத்தம்

“தி நேச்சுரல் ஹிஸ்டரி ஆப் பாப்புலேஷன்” (The Natural History of Population) என்ற புத்தகத்தில் அதன் நூலாசிரியர் மிஸ்டர் ரோமாண்ட் பர்ல் என்பவர் கூறுவதைக் கவனியுங்கள். கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ருஷியா இந்த நான்கு தேசங்களின் ஜனத்தொகை, உலக மொத்த ஜனத்தொகையில் நூற்றில் பதினென்றரைப் பங்கு. உலக மொத்த விஸ்திரணத்தில் நூற்றுக்குப் பதின்மூன்று பங்குள்ள பிரதேசங்களில் இவர்கள் வசிக்கின்றனர். ஆனால், உலகத்தில் நூற்றுக்கு ஐம்பத்தேழுபேரை இவர்கள் ஆட்சிபுரிகின்றனர். பாக்கி நாற்பத்துமூன்றுபேர் இவர்கள் மூலமாக ஆட்சிபுரியப்படுகின்றனர் என்று அந்த நூலாசிரியர் எழுதுகிறார். ஒரு காலத்திலே மனித சமூகத்தில் எவன் சக்திமானாக இருந்தானோ, அவனே ஜனசமூகத்தின் தலைவனாகவும், அரசனாகவும், மதகுருவாகவும் போற்றப்பட்டான். மனித சமூகத்தில் அவனுக்குத்தான் செல்வாக்கு ஜாஸ்தி. அவனுடைய வாயிலிருந்து வருபவைகள்தான் சட்டங்கள். அவனுடைய நடவடிக்கை யாவும் நீதிகளே. இப்பால் மனிதசமூகம் கொஞ்சம் நாகரீகப் பாதையில் முன்னேற ஆரம்பித்து விஞ்ஞான உதவியால் தொழில் அபிவிர்த்திகள் ஏற்பட்ட காலத்தில், இந்த தொழில்ஸ்தாபனங்கள் யாருடைய வசத்திலிருக்கின்றனவோ, அதாவது அந்தத்தொழில்ஸ்தாபனங்களுக்கு யார் முதலாளியோ அவர்களுக்கு ஜனசமூகத்தில் செல்வாக்கு ஏற்பட்டது. ஜன சமூகத்தின் அரசன், அல்லது தலைவன் இவர்களும் அந்த முதலாளிகளுக்குச் செவி சாய்க்கவேண்டிய நிலைமையேற்பட்டது “செவிசாய்க்க வேண்டிய” என்று அழகுபடுத்திச் சொல்லுகிறோமே தவிர உண்மையில் சர்க்கார் அந்த முதலாளிகள்தான். லாபம் என்பதையே குறியாகக் கொண்ட இவர்கள், தங்களுடைய தொழிற்சாலைகளில் ஏராளமான பொருள்களை உற்பத்தி செய்தால் ஏராளமாக விற்று லாபம் சம்பாதிக்கலாம் என்று நினைப்பது இயற்கை. இவர்களுக்கு விஞ்ஞான வளர்ச்சி மிகவும் உதவியாக முடிந்தது. இவர்களுடைய தொழிற்சாலைகளில் அதிகமான பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமானால் அதற்கு ஏராளமாக மூலப்பொருள்கள், அதாவது பண்படாத பொருள்கள் வேண்டும். இந்த மூலப் பொள்கள்களைப் பெறுவதற்கும், தங்களுடைய தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட செய்பொருள்களை விற்பதற்கும் இவர்களுக்கு மார்கெட் தேவையேற்பட்டது. மார்கெட் என்றால் என்ன? தன்னையும் மறந்து, தன் நிலைமையையும் மறந்து, இந்த உலகத்திலே வாழ்ந்துகொண்டு இன்னொரு உலகத்தைப் பற்றிக் கற்பனைசெய்து தன்னுடையசகலத்தையும் ஏன், மரியாதையையுங் கூட இழந்து நிற்கும் நம்மு

டைய இந்தியாவைப் போன்ற தேசங்கள் நல்ல மார்க்கெட்டல்லவா? அவர்களுக்கு நல்லமார்க்கெட்டுகள் அகப்பட்டன. இந்த முயற்சியில் ஆதியில் பிரவேசித்தது மேனாடுகளே. அதுவும், மேனாடுகளில் எல்லா நாட்டாரும் ஒரேகாலத்தில் ஆரம்பித்து இந்தப் பாக்கியத்தைச் சுவைக்கும் புண்ணியஞ் செய்யவில்லை போலும்! சில நாடுகள் இந்த நாடுபிடிக்கும் முயற்சியில் பிந்திவிட்டன. காலந்தாழ்த்தி ஆரம்பித்த இவர்களும் சில இடங்களைக் கைப்பற்றினார்கள். ஆனால் முந்தியவர்களைப்போல் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதனால் முந்தியவர்களின் மீது, அதாவது அந்த நாட்டின் மீது பிந்திய நாட்டாருக்கு வெறுப்பும் பொறாமையும் ஏற்பட்டது. நாளாவட்டத்தில் இந்தப் பொறாமையும் வெறுப்பும் வளர்ந்து வந்ததே தவிர குறையவில்லை. இந்தக்குறையுள்ள நாட்டார் தங்களுக்கிருக்கும் குறையைப் பட்டவர்த்தனமாக வெளி உலகத்திற்குச் சொல்வதற்கும் கூச்சம். ஏனெனில் உலகம் கொஞ்சம் நாகரீகப் பாதையில் ஏறிவருவதாக வல்லவா எல்லோரும் நம்புகிறார்கள். ஆனதால், ஜனநாயகம், சுதந்திரம் என்ற அழகான வார்த்தைகளால் தங்களுடைய குறைகளை அலங்கரித்து வெளியிட்டார்கள். தொடர்ந்தே "எங்களுக்கும் இடம்வேண்டும்" என்ற தொனி முழங்கிக்கொண்டேயிருக்கும். ஏற்கனவே முந்திக்கொண்டவர்களும் இதே ஜனநாயகம், சுதந்திரம், உரிமை என்ற வார்த்தைகளை உபயோகித்து பதில் கூறினார்கள். ஆனால் ஒருவருக்கொருவர் வெறுப்பும் பொறாமையும் வளர்ந்து வந்தது மட்டும் நிற்கவே இல்லை. முடிவு என்ன? யுத்தந்தான். ஏற்கனவே குட்டிக் குட்டி யுத்தங்களாக நடந்து வந்தது 1914ம் வருஷத்தில் ஒரு மகா யுத்தமாக முடிந்தது. இப்படிப்பட்ட யுத்தங்களுக்குத்தான் ஏகாதிபத்திய "யுத்தம்" என்று கூறுவது. ஜெர்மனி தொழிலாளர் தலைவன் லே. என்பவன், 1938ம் வருஷத்தில் ஒரு இடத்தில் பேசும்போது, "ஜெர்மனி சுதந்திரமுள்ள நாடு என்று கூறுபவர்களும் நினைப்பவர்களும் உண்மையை உணர்ந்தவர்களில்லை. ஏனெனில் ஜெர்மனியில் ஜனத்தொகை ஜாஸ்தி. ஆனால் அவர்கள் வசிக்கும் இடம் மிகவும் குறைவு. மிகவும் குறைந்த ஜனத்தொகையுடைய பிரிட்டனும் பிரான்சும் தங்களைப்பார்க்கிலும் எவ்வளவோ ஜாஸ்தியான ஜனங்களின் மீது ஆட்சி செலுத்துகின்றனர். ஆனால் ஜெர்மனி மக்கள் போதாத இடத்தில் நெருக்கமாக வாழ்கின்றனர். எங்களிடத்திலே ஒரு குடியேற்ற நாடுகூட இல்லை. இந்த நிலைமையானது எதுவரை நீடித்திருக்கிறதோ அதுவரை ஜெர்மனியர்கள், சுதந்திரமாகவோ சுகஜீவிகளாகவோ எப்படியிருக்கமுடியும்" என்று கூறினான். தற்போது அடிக்கடி உலகத்திலே நடைபெறும் யுத்தங்களுக்குக் காரணத்தை மேற்கண்ட லே பேச்சிலிருந்து தெரிகிறோமல்லவா?

தேசீய தற்காப்பு யுத்தம்

நாடுபிடிக்க முனைந்திருக்கும் ஒரு தேசமானது ஒருநாட்டின்மீது படையெடுப்பதாக வைத்துக் கொள்வோம். அவ்விதம் படையெடுத்திருக்கும் நாட்டின்மீது, படையெடுக்கப்பட்டிருக்கும் நாட்டுக்கு சண்டை செய்ய மனமில்லாதிருந்தாலுங்கூட தன்னை பாது

காத்துக் கொள்ள வேண்டிய நிமித்தமாக சண்டை செய்ய வேண்டிய தேற்படுகிறது. கடந்த மூன்று வருஷங்களாக ஜப்பானுடைய படையெடுப்பை யெதிர்த்து சீனு யுத்தம் புரிவது இந்த முறையில்தான். இதையே தேசிய தற்காப்பு யுத்தம் என்று கூறுவது.

தேசீய சுதந்திர யுத்தம்

ஒரு தேசம் மற்றொரு தேசத்தை தன்னுடைய ஆதீனத்தில் வைத்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அவ்விதம் அடிமைப்பட்டிருக்கும் நாடானது தான் சுதந்திரம் அடைவதற்காக ஒரு கிளர்ச்சியோ அல்லது யுத்தமோ தொடங்குமானுல் இதையே, தேசீய சுதந்திர யுத்தம் என்று கூறுவது.

புரட்சி யுத்தம்

'கொடுங் கோலாட்சிக்குக் கீழிருக்கும் ஜனங்கள்—சுரண்டப் படுபவர்கள்-தாங்கள் சுரண்டப்படுவதிலிருந்தும், கொடுங்கோன்மையிலிருந்தும் விடுபட நினைத்துக் கிளர்ச்சிசெய்தாலும்சரி, அல்லது யுத்தம் தொடுத்தாலும் சரி, இதை "புரட்சி" என்று அழைக்கிறுர்கள். ஒரு காலத்தில் தொடர்ந்து பிரஞ்சு தேசத்து ஜனங்கள் நடத்திய கிளர்ச்சி, ருஷ்ய தேசத்து ஜனங்கள் நடத்திய கிளர்ச்சி, சீன ஜனங்கள் நடத்திய கிளர்ச்சி இவைகளையே பிரஞ்சுப் புரட்சி, ருஷ்யப் புரட்சி, சீனப் புரட்சி என்று கூறுவது.

ஜோதி வாசகர்களே! இதுவரை யுத்தத்தைப்பற்றிய சில விஷயங்களை உங்களுக்குக் கூறினேன். அடுத்து, தற்போது நடைபெற்றுவருகிற யுத்தத்தைப்பற்றிக் கொஞ்சம் யோசிப்போம். இது, உலகத்திலேயே ஜனநாயகத்தை நிலை நிறுத்துவதற்காகச் செய்யப்படுவதாய்ச் சில ராஜதந்திரிகள் கூறுகிறுர்கள். சில தலைவர்கள், இந்த யுத்த முடிவில் உலகத்திலேயே ஒரு புதிய மாற்றம் ஏற்படும் என்று கூறுகிறுர்கள். நல்லவேளையாக இன்னவகை மாற்றந்தான் என்று இவர்கள் கூறிவிடவில்லை. உலகத்திலேயே இதுதான் கடைசி யுத்தமாக இருக்கும் என்று சில அறிஞர்கள் கூறுகிறுர்கள். இப்போது அடிமைப்பட்டிருக்கும் நாடுகளுக்கு சுதந்திரம் கொடுத்துவிட்டால் உலகில் யுத்த பயமே இராது, யுத்தமும் ஏற்படாது என்று சிலநிபுணர்கள் கூறுகிறுர்கள். ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக நடைபெறுவதாகச் சொல்வதையும் ஒரு புதிய பெரிய மாற்றம் ஏற்படப்போவதாகச் சொல்வதையும் நாம் கொஞ்சம் ஒதுக்கி வைப்போம். ஏனெனில் இந்த வார்த்தைகளை உரத்த குரலில் வெகுகாலமாகக் கேட்டுக்கேட்டு நம்முடைய காதுகள் செவிடுபட்டு விட்டன. மேலும் இந்த "ஜன நாயகம்" "மாற்றம்" என்று சொல்லக் கூடிய வார்த்தைகள் மிகவும் பயங்கரமான வார்த்தைகள். இன்னதுதான் அர்த்தம் என்று மேற்கண்ட வார்த்தைகளுக்கு இன்னும் முடிவு கட்டப் படவே இல்லை. அடுத்து, "இதுதான் கடைசி யுத்தம், "அடிமைப்பட்டிருக்கும் நாடுகளுக்குச் சுதந்திரம் கொடுத்துவிட்டால் உலகில் யுத்த பயமே இராது" என்று சொல்லப் பெறும் இரண்டு விஷயங்களையும் பற்றி யோசிப்போம். ஏனெனில் இந்த இரண்டு விஷயங்களும் ஒரே பிரச்னையை பொறுத்

—"ஆசிரமவாசி"

தக்ஷிணேசுவரச்சுடர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

நமது புண்ணிய பூமி யாகிய பாரத கண்டத்திலே நீர்வளம், நிலவளம், நதிவளம் என்னும் பல் வளம் பொருந்தி விளங்குவது வங்க நாடு. அந்நாட்டிலே காமர் புக்கூர் என்னும் சிறு கிராமம் ஒன்றுண்டு. அந்தக் கிராமமானது, இந்த இருபதாம் நூற்றூண்டிலும், நவ நாகரீக வாசனையற்று விளங்குகின்றது. அங்குள்ள கிராமவாசிகள், இயற்கையிலே பிறந்து, இயற்கை வனப்புக்களின் நடுவே வளர்ந்து, இயல்பான சுகபோகங்களையே இன்றும் அநுபவித்து வருகின்றனர். இத்தகைய புனித மக்களிடையே; தருமம், கருணை, சாந்தம், வாய்மை, பக்தி, தூய்மை என்னும் அரும் பெருங் குணங்களில் சிறந்து விளங்கிய குடிராம சாட்டர்ஜி என்னும் புருஷோத்தமர் இருந்தார். அவருடைய வாழ்க்கைத் துணைவியாகிய சந்திராமணி தேவியோ தனக்கெனவாழாப் பிறர்க்கென வாழும் உத்தமி. இவ்விருவரும் தரும நெறி வழுவாது இல்லறம் நடத்தி வந்தனர். இவர்களின் தவப்பயனாலும், சாக்ஷாத் கதாதரப் பெருமானின் அநுக்கிரகத்தினாலும் 1836-ம் வருஷ மாசி மாதம் 17-ந் திகதியன்று ஒரு தெய்வக் குழந்தை சிரித்த முகத்துடன் பிறந்தது. கதாதரரின் அநுக்கிரகத்தினால் பிறந்தமையால் பெற்றோர் அக்குழந்தைக்குக் கதாதரர் என்னும் பிள்ளைத் திருநாமமிட்டனர். கதாதரர் பிறந்த

தவை. உலகத்திலேயே, இந்த யுத்தந்தான் கடைசி யுத்தம் இனிமேல் யுத்தமே நிகழாதா? "ஜோதி" வாசகர்களுக்கு ஜாமீன் கொடுப்பதற்கு எனக்கு அவ்வளவு தைரியம்வரவில்லை. 1914ம் வருஷத்திலே ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்ற யுத்த காலத்திலும் இதே வார்த்தையையே நாம் கேட்டோம். ஆனால், அந்தக் காயங்கள் ஆறுவதற்கு முன்னேயே, குண்டுகள் ஆகாயவிமானங்களிலிருந்து விழுந்து நிரபராதியான மக்களையும் குழந்தைகளையும் நாசஞ் செய்துகொண்டிருக்கின்றன. எல்லா நாடுகளும் சுதந்திரமாயிருந்தால் உலகத்தை விட்டு யுத்தம் ஒழிந்துவிடுமா? அதாவது, இந்தியா, சீன முதலிய அடிமைப் பட்டிருக்கும் நாடுகளுக்கு சுதந்திரம் கொடுத்து விட்டால் உலகத்திலிருந்து, யுத்தம் ஒழிந்துவிடுமா? இப்பொழுது யுத்தத்தை ஆரப்பித்திருக்கும் மேனாடு ஒவ்வொன்றும் சுதந்திர நாடுகள்தானல்லவா? அப்படியானால் அங்கே தானே அடிக்கடி யுத்தம் நிகழ்கிறது? ஜோதி வாசகர்களே நீங்கள் இதற்கு ஒரு முடிவு சொல்லவேண்டும் என்பதுதான் என் நோக்கம். இதைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டுமென்பதுதான் என் ஆசையுங்கூட.

வுடன் பக்கத்திலிருந்த அடுக்களைச் சாம்பலில் புரண்டு நீறுபூத்த மேனியுடன் சாம்பசிவனைப் போன்று விளங்கினார் என்று அவருடைய சரித்திரக்காரர் கூறுகின்றனர்.

பள்ளிப்பிராயம் வந்ததும் கதாதரர் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டார். ஆனால் புத்தகப் படிப்பில் அவருக்கு எள்ளளவும் மனஞ் செல்லவில்லை. வயிற்றுப் பிழைப்புக்காகக் கற்கும் கல்வியால் பிரயோசனமில்லையென்பது அவருடைய கருத்து. ஆனால் கூத்தாடிகளைக் கண்டால் அவருக்குப் பரமசந்தோஷம். இதிகாசம், புராணம், மஹாபாரதம், இராமாயணம் என்னும் நூல்களிலிருந்து ஏதாவது ஒரு கதையை இந்தக் கூத்தாடிகள் நடித்துக் காட்டுவது அக்காலத்து வழக்கம். அதைக் கேட்பதற்கு, அந்தக்கிராமவாசிகளும், அயல் கிராமத்தவர்களும் திரள் திரளாய் வந்து கூடுவார்கள். இப்படிப்பட்ட கூத்துக்கள் சுற்றுப் பக்கத்திலுள்ள எந்தக் கிராமத்தில் நடந்தாலுஞ் சரி அங்கு கதாதரரை நிச்சயமாகக் காணலாம். பார்த்தநாடகத்தை அவர் தாமே திரும்பவும் நடிக்கக்கூடிய ஞாபகசக்தி அவரிடமிருந்தது. தவிரவும், அவர் சித்திரங்களை யெழுதுவதிலும், மண்பிரதிமைகளைச் செய்வதிலும் அபார சாமார்த்தியமுள்ளவராயிருந்தார்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பது கதாதரர் விஷயத்தில் முற்றிலும் உண்மையாகவே இருந்தது. காமர் புக்கூருக் கருகாமையில் ஒரு மயானம் உண்டு. பகற்காலத்திலும் இந்தச் சுடுகாட்டுக்குப் போவதற்குச் சனங்கள் பயப்படுவார்கள். இத்தகைய இடத்தில் தான் மஹாதேவன் திருநீறணிந்த மேனியுடன் தியானஞ் செய்வது வழக்கம். யோகிகளும், உலக வாசனையின் அநித்தியத்தை மனதில் ஸ்திரப் படுத்துவதற்காக மயானத்தையே நாடுகின்றனர். மஹா தைரியசாலியான நமது கதாதரரும் இந்த பயங்கரமான மயானத்தையே தியானத்துக்குச் சிறந்த இடமாகத் தெரிந்தெடுத்துக் கொண்டார். அங்கு தன்னந் தனியாக வெகு நேரம் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்து "இந்த இயற்கையாகிய திரையின் பின் என்ன உண்மைப் பொருள் இருக்கின்றது; புராணிகர் கூறுவதுபோல சர்வவியாபியும் சர்வதயாபரனுமாகிய ஒரு ஆண்டவருண்டா? அப்படி. அவர் இருப்பின் அவரை நான் கண்ணாரக் கண்டு அவருடன் வார்த்தையாட முடியுமா? துருவனுக்கு முன் கடவுள் தோன்றி அவனுடன் பேசினாரென்று புராணங் கூறவில்லையா? ஆண்டவனுக்கு அன்புப் பணிசெய்து தியானஞ்செய்வேனாயின் நானும் அவரைக் காணமுடியும்" என்று தமக்குள்ளே சிந்திப்பார். இப்படியான கடவுள் தாகம் அவருடைய இளம் மனதில் குடிகொண்டது.

காமர்புக்கூர் சிறுவர்களனைவரும் கதாதரருடைய ஆப்த நண்பர்கள். சாதி, மதம், அந்தஸ்து என்னும் வித்தியாசங்களொன்றும் பாராட்டாதபடி அவர் எல்லாரோடுங் கலந்து கொள்ளும் இயல்புடையவர். இனிய பாட்டு, கதை, சம்பாஷணை என்பனவற்றால் தமது நண்பர்களை இன்புறச் செய்வார். விளையாட்டில் வெகு சமத்தன். பிள்ளைகளுக்குக் கதாதரரில்லாவிட்டால் விளையாட்டுச் சுவைப்பதில்லை. தமது கிராமத்துக்கு அருகாமை

யிலுள்ள மாந்தோப்பில் தாம் பார்த்த நாடகங்களைத் தமது நண்பர்களுக்கு நடித்துக் காட்டுவார். பின்னர், ஒவ்வொருவரையும் ஒவ்வொரு நாடக பாத்திரமாக்கி எல்லோருஞ் சேர்ந்து நடிக்கப் பழக்குவார். நன்கு பயின்ற பின்னர், அவ்வூர்க் கிராமவாசிகள் இன்புறும்படி, அந்த நாடகங்களை அரங்கேற்றுவார்கள்.

சந்நியாசிகளைக் கண்டால் கதாதரருக்கு மஹா சந்தோஷம். அவர்களோடு பேசுவதும், அவர்களுக்குப் பணிவிடைகள் செய்வதும் அவருக்கு உவப்பான காரியங்கள். ஒரு நாள் தனது தாய் கதாதரருக்கு ஒரு புது வஸ்திரத்தைக் கொடுத்தாள். அவர் அதை உடுத்துக கொண்டு ஜகந்நாதர் ஆலயத்துக்கு யாத்திரை செல்லும் சாதுக்கள் தங்கியிருந்த தர்ம சாலைக்குச் சென்றார். அந்தச் சாதுக்கள் கௌபீனம் தரித்திருப்பதைப் பார்த்து தாமும் அவ்வாறே செய்யவெண்ணி தமது புது வஸ்திரத்தைத் துணடு துண்டாகக்கிழித்து, இரண்டு துண்டுகளைக் கௌபீனமாக உடுத்துக் கொண்டு தம் தாய் முன் சென்று, "அம்மா! நான் சந்நியாசியாய்ப் போய் விட்டேன் பார்' என்றனர்.

மூடப் பழக்க வழக்கங்களுக்குக் கதாதரர் முழு விரோதியாகவே காணப் பட்டார். ஒன்பதாவது வயதில் அவருக்கு உபநயன மாயிற்று. அத்தருணத்தில் வழக்கப் படி உயர்குல ஸ்திரியிடம் பிக்ஷை யேற்க வேண்டியது முறையாகும். ஆனால் அப்படிச்செய்வதற்கு அவர் ஒரே பிடிவாதமாக மறுத்து விட்டார். அந்தக் கிராமத்தில் தானி யென்னும் தாழ்ந்த குல விதவைப் பெண் ஒருத்தி இருந்தாள். அவள் மஹா பதிவிரதை; பக்தி சிரத்தையுடன் கடவுளை வழிபடுபவள். எத்தனையோ பேர் எதிர்த்த போதிலும், கதாதரர் இந்தப் பெண் மணியிடம் பிக்ஷை யேற்று தமது சம திருஷ்டியை வெளிப் படுத்தினர்.

கதாதரர் இளம்பிராயத்திலே தனது தந்தையை இழந்தார். தன்னை அரும் பாடு பட்டுப் பெருமையாக வளர்த்த தந்தை இறந்ததும், அவருடைய மனமானது சாது, வாழ்வு என்பன வற்றின் மர்மத்தை அறிய ஆவல் கொண்டது. பல மணித் தியாலங்களாக ஓரிடத்து உட்கார்ந்து கொண்டு விசித்திர விநோதத்தைப் பார்த்த வண்ணமா யிருப்பார்; உடனே மண்ணும் விண்ணும் அவருடைய மனதிலிருந்து முற்றும் நீங்கி மறைந்து விடுகின்றன; கடலாழம் பார்க்கப் போனது போல, அகண்டாகாரத்துடன் இரண்டறக் கலக்கின்றது. வெளியுலக உணர்ச்சியற்று, சிந்தையும் மனமுங் கடந்த நிலையில் அந்தமில் இன்பத்தில் அமிழ்ந்திருப்பார். இப்படிப்பட்ட ஆனந்த பரவச நிலை அவருக்குப் பல முறை இளம் பிராயத்தில் ஏற்பட்டிருக்கின்றது. இந்த ஆனந்த பரவச நிலையானது கதாதரர் சாதாரண மனுஷரல்ல வென்பதை நிரூபிக்கின்றது.

கதாதரருடைய தமையன் ராம் குமாரர், கல்கத்தாவில் பள்ளிக் கூடம் வைத்துக் கொண்டு, சோதிடமும், மனு தர்மமும் கற்பிப்பதுடன், புரோகிதமும் பார்த்து வந்தார். கல்வி புகட்டவும், தனக்குத் துணை செய்யவும் கதாதரரை வரவழைத்தார். ஆனால்

அங்கு நிகழும் வீண் வாதங்களைக் கண்டு வெறுப் புற்ற கதாதரர் தமக்கு அப்படிப் பட்ட கல்வி தேவையில்லை யென்றும் வயிற்றுப் பிழைப்புக் கான கல்வி யன்றி ஈஸ்வரனை அடைய வேண்டிய கல்வி தான் தமக்கு வேண்டு மென்றும் சொல்லிக் கலாசாலையிற் கற்க மறுத்து விட்டார். இதைக் குறித்து சுத்தானந்த பாரதியாரும்,

கலை யெழு புலவர் வாதங்
கண்டனன்; உண்மை காணார்

உலை யெழு மொழிகளெல்லாம்
உமிப் பொறி யுதாம் போற்றும்

விலை கெழு போலிக் கல்வி
விரும்பிடேன் ஆத்ம ஞானக்

கொலை செய்யேன்!
கடவுளுக்கே கொடுத்தனன் எடுத்த வாழ்வை

பிணத்தையே நோக்கும்
பிராந்துயர் பறந்தும்

பணத்தையே பார்ப்பன்
பண்டிதன் கற்றும்;

புத்தகச் சுமையால்
சித்தந் தெளியுமா?

தத்துவப் பொருளைத்
தருக்கந் தருமா?

கண்டாலன்றோ
காசியை அறியலாம்?

இன் கனிச் சோலையில்
எண்ணா துண்க!

பாகவதத்தைப்
பக்தியாலறிக!

தியாகத்தாலே
இதை தெளிக!

ஈட்டுதற்கான கல்வியிசை
நசைதர்க்க வாதம்

மூட்டிடு மூலைக் கல்வி
மும்மலக் கல்வி வீணே

எட்டினை முட்டைகட்டி
யெய்த்திடும் பந்தமற்ற

வீட்டினைக் காட்டாக் கல்வி
வேண்டிலேன் கடவுள் வேட்டேன்!

நானென தற்று முற்றும்
ஞாலத்தினியல்பு கண்டு

தானெல்லா மாகு மொன்றைத்
தன்னுளே யறிந் தடங்கி

ஞானத்தால் ஞானமாகி
ஞானத்தை விதைக்க வன்றோ

யானுடலெடுத்த வுண்மை
யதை விடுத் துய்வதாமோ?

என்று சிறப்பாகத் தமது 'பரஹம்ஸ லீலையில்' கூறி யிருக்கின்றார்.

கல்கத்தா மிகவும் நவ நாகரீகம் நிறைந்த நகரம். அதைக் கீழ்த் திசை லண்டன் மா நகரம் என்று சிறப்பாகக் கூறுவது வழக்கம். கிராமத்திலே பிறந்து வளர்ந்து, இயற்கை வாழ்வு வாழ்ந்துவந்த கதாதரருக்கு நவ நாகரீகம் நிறைந்த நகர வாழ்வு சற்றும் பொருந்த வில்லை. கிராம வாசிகளின் கபட மற்ற வாழ்வை யும், நகர வாசிகளின் நய வஞ்சக வாழ்வையும் ஒப்பிட்டுப் பார்த்து அவருக்கு நகர வாழ்வில் வெறுப் புண்டாயிற்று. தமது தாயைப் பிரிந்த துயரம், அவர் தாயினுஞ் சால விரும்பிய இயற்கை அன்னையைப் பிரிந்த துயரம்; ஆருயிர் போன்ற நண்பரைப் பிரிந்த துயரம் இப்படிப் பல துன்பங்கள் அவர் மனதை வருத்தின. நெடுநாள் மழை காணாத பயிர் போலவும், தண்ணீரில்லாத தாமரை மலர் போலவும் அவர் வதனம் வாடியது. வானம்பாடிப் பறவையைக் கூட்டில் அடைத்து வைத்தால் அது உயரப் பறந்து இன் கவி பாடுமா? நமது கதாதரரும்

கூட்டி லடைபட்ட வானம்பாடிப் பறவைபோலவே கல்கத்தாவில் ஜீவியம் நடத்தினர். தெய்வாதீனமாக, அவருடைய மனம்போல வாழ்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

கல்கத்தாவுக்கு வடக்கே ஐந்து மைல் தூரத்திலுள்ளது தக்ஷிணேசுவரம். அங்கு வெகு பொருள் செலவழித்து ராணி ராசமணி அம்மாள் காளிதேவிக்கு நேர்த்தியான கோவில் ஒன்று கட்டுவித்தாள் அக்கோவிலில் ராம்குமாரர் அர்ச்சகராக நியமிக்கப் பட்டார். அவர் தக்ஷிணேசுவரம் போகும்பொழுது தனது தம்பியாகிய கதாதரரை உடனிக்கு அழைத்துச் சென்றார். சிலகாலம் சென்றதும் ராம்குமார் நோயால் வருந்தி இறந்து விட்டார். பிறகு கதாதரரே அக் கோயிலுக்கு அர்ச்சகராக நியமனம் பெற்றார்.

காளி தேவியை ஆராதனை செய்வதில் அவர் காட்டிய பக்திக்கு அளவேயில்லை. ஜகன்மாதாவைத் தமது தாயெனவே நம்பினர். தாயைப் பார்த்து குழந்தை கெஞ்சுவதுபோல பேசுவார்; ஸ்தோத்திரம் செய்வார்; ஆடுவார்; பாடுவார்; தேவி தமக்குப் பிரத்தியக்ஷமாகாததைக் கண்டு மனங் கசிந்து அழுவார்.

"பால் நினைந்தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து நீ
பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பரப்பி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரி" என்றும்

காரிருளுடுத்தாய்! கோடி மீன்களைக்
கலன்கள் பூண்டாய்
பாரெலாம் நிறைந்தாய்; ஒன்றே
பலபலவாகி நின்றாய்
ஆர்வமோ டலறுகின்றேன்
அனலெழு மன்புபற்றி!
நேரெனக் கருளாதேனு
நீலியோம் காளியம்மா!
கண்ணெல்லாம் நீயே! யன்பர்
கருத்தெலாம் நீயேபாடும்
பண்ணெல்லாம் நீயே! யெல்லாம்
படைத்தளித் தழிப்பாய் ஆணும்
பெண்ணெலாம் நீயே யுன்னைப்
பிரிந்துயிர் வாழேன்! சக்தி
யன்னையோம் காளீ! சக்தி
யன்னையோம் காளீ! காளீ!
உலகினை மறந்தேன் முற்றும்
உன்னையே சரண்புகுந்தேன்!
அலையெழு மமுதவாரி
யருளினுக் காவலானேன்!
உலையெழுந் தலறுகின்றேன்
மைந்தனுக்குளமிரங்கி
நலிவு தீர்த்திடுவாய் தாயே!
நாரணி ஜயவோம் காளி"

"அம்மா பகவதி! அன்பருக்கு அருளமுதே! நான் உனது பிள்ளை. உன்னைக் காணப் பசியாயிருக்கிறேன். ராம்பிரசாதர் போன்ற பக்தருக்கு நீ அருள்புரியவில்லையா? யான் உன் அன்பனன்றோ" என்று முறையிடுவார். சில வேளைகளில் பக்திப் பரவசத்தால் தேவிக்கு அர்ச்சிக்கவேண்டிய புஷ்பங்களைத் தன் தலையிலேயே போட்

டுக்கொள்வார். ஆராத்தி யெடுக்கும் காலம் கழிந்தபிறகுங்கூட ஆராத்தியைச் சுற்றிக்கொண்டே யிருப்பார். இவ்விதமான விபரீதச் செய்கைகளினால் இவருக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென்று எல்லோரும் எண்ணினார்கள். இவருக்குக் கல்யாணஞ் செய்துவைத்தால் சித்தப்பிரமை தீருமென்று நினைத்து தாயாகிய சந்திரமணி தேவியார் இவரைக் காமர்புக்கூருக்கு அழைப்பித்து இவருக்கு ராமச்சந்திரமுகோபாத்தியாயர் என்பவரின் குமாரத்தியான சாரதாமணி தேவியெனும் எட்டுவயதுப் பெண்ணை விவாகஞ் செய்வித்தனர்.

விவாகமானபிறகு தக்ஷிணேசுவரத்துக்கு வந்து பழையபடியே காளி கோயிலில் பூசையை ஒப்புக்கொண்டார். சித்தப்பிரமைமட்டும் முன்னிலும் பன்மடங்கு அதிகமாயிற்று. தேவியை நோக்கி "தாயே! அடியேனுக்குப் பிரத்தியக்ஷமாவது என்று! எப்பொழுது" எனக் கதறித் துயருறுவர். அன்பும் பக்தியும் இப்படி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகையில் ஒருநாள்,

பூசித்துக் காண்பேனோ
பூவில் நகைப்பவளே!

வாசித்துக் காண்பேனோ
வாய்மனத்திற் கெட்டாதாய்!

யோசித்துக் காண்பேனோ
வோங்குமூலகானவளே

நேசித்துக் கண்டிடவே
நெஞ்சுருகி நிற்கின்றேன்.

எங்குஞ் செவியானாய்
என்முறைதான் கேட்கலியோ

எங்கும் விழியானாய்
என்றுயரம் பார்க்கலியோ!

எங்கும் மொழியானாய்
என்றனுக்கோர் பேச்சிலையோ

எங்கும் நிறைந்தவளே
என் முன்னே காணாயோ!

ஒன்று நீ யுண்டு சக்தி!
யொளிந்தினும் ஆடலேனோ!

கண்டுன்னைக் கலந்த வாழ்வே
வாழ்வெனக் கருத்துட்
கொண்டேன்

இன்றின்னுமிரங்ககில்லை
என்னிலிவ்வூன் சுமத்தல்

நன்றில்லை வாளால் வெட்டி
நல்குவேன் பலியுனக்கே!

என்று பக்கத்திலிருந்த வாளையுருவிக் கையிலேந்தினர். அடியவர்களுடைய துயரத்தைப் பொறுக்காத தேவி உடனே பிரத்தியக்ஷமாகி "குழந்தாய்! சமாதானமடை; நீ கூப்பிடும் போதெல்லாம் நான் வருவேன்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தாள்.

பிறகு நிர்விகல்ப சமாதியை அடைவதற்காக பன்னிரண்டு வருஷங்கள் அருந்தவம் புரிந்தார். ஏனைய இருஷிகளைப்போல இமயமலைச் சாரலை இவர் நாடவில்லை. தாமிருந்த இடத்திலேயே ஒரு அமைதியான இடத்தில் பூன்னகசாலையை அமைத்துக்கொண்டார். உணவு, உடை, தங்குவதற்கு இடவசதியெல்லாம் காளிகோயில் அதிகாரியாகிய மதுராநாதர் தாராளமாகச் செய்துவைத்தார். கதாதார் சமாதி நிட்டையிலிருக்கும்போதெல்லாம் அவருடைய மருகராகிய ஹிரு

தயர் அல்லது அவருடைய பத்தினி யாகிய சாரதாமணி தேவியார் அவருடைய உடல் நலத்தைப் பேணி வந்தனர். சில வேளைகளில் நமது கதாதரர் தாழ்ந்த சாதியார் வீடுகளில் நுழைந்து துடைப்பம் எடுத்துப் பெருக்கிக்கொண்டே "தாயே! நான் பெரியவனென்றும் பிராமணனென்றும், இவர்கள் ஈன சாதியாரென்றும் எண்ணுகிற மனோபாவம் என்னிடம் இருக்கவேண்டாம்; இவர்கள் அனைவரும் ப்ரம்மஸ்வரூபம் என்னும் எண்ணம் எனக்குண்டாகும்படி அனுக்கிரகிக்கவேண்டும்" என்று பிரார்த்திப்பார். இதைக் குறித்து கவியும்,

"ஜாதியில் உயர்ந்தோம் என்னும்
சனியனும் அகந்தை நீங்கத்
தாழ்ந்தவர் குடிசைதோறும்
தலையினால் பெருக்கி வாரும்
சேதியைத் தெரிந்து அன்னார்
திகைத்துனைத் தடுத்தலாலே
தெரியாமல் இரவில் சென்று
தினம் தினம் அதையே செய்து
ஆதியின் அருளைத்தேடும்
அந்தணர்க் கரசே! ஐயா!
ஆணவம் அழிந்தாலன்றி
ஆண்டவன் அணுகான் என்றாய்'

என்று சிறப்பாகக் கூறியிருக்கின்றார்.

செல்வத்தை அவர் ஒருபோதும் மதித்ததில்லை. ஒரு கையில் மண்ணையும் மற்றொரு கையில் பணத்தையும் வைத்துக்கொண்டு, பணத்தின் மதிப்பைப்பற்றிச் சிந்தித்தார். "இந்த மண்ணைப்பார்க்கிலும் பணம் ஜனங்களுக்கு ஏன் உயர்ந்த மதிப்புடையதாகத் தோன்றுகின்றது? இந்த வட்டவடிவான உலோகத் துண்டானது கடவுள், சாந்தம், அன்பு, தூய்மை என்பனவற்றை ஏன் மறக்கச் செய்கின்றது? உலக சுகத்துக்கு வேண்டிய சௌகரியங்களையும் பெருமையையும் அது கொடுப்பதனாலன்றோ? ஆனால் லௌகீக சுகமும் பெருமையும் கடவுள் தரிசனத்துக்கு இட்டுச் செல்லாவிடின் அவற்றினால் அடையும் பயன்தானென்ன?" பின்னர் பணத்தைப்பார்த்து இன்னுங் கூறுகின்றார்:- "பணமே, உண்மையின்பத்துக்கு ஏதுவாயிருக்கவேண்டிய நீ இப்பொழுது இன்ப நிலையாகிய இலட்சியமாகவே மாறிவிட்டாய். ஆகையினாலேதான் பகை, பொறாமை, சண்டை, அழிவு என்பனவெல்லாம் உலகில் விளைகின்றது. இந்த மண்ணைப் பார்க்கிலும் மதிப்பில் உயர்ந்தவன் என்று நான் உன்னை ஒருபோதுங் கருதவில்லை ஆகையால் இந்த மண்ணை வீசுவதுபோல உன்னையும் இந்தக் கங்கையில் வீசுகின்றேன்" எனக் கூறி பொன்னையும் மண்ணையும் நதியில் வீசினார். இந்தச் சம்பவம் நடந்ததற்குப் பின் கதாதரரால் ஒருபோதும் பணத்தைக் கையினால் தொடவும் முடியாமலிருந்தது! இந்தச் சாதனையின் ஆழ்ந்த கருத்துத் தானென்ன? அழுக்காறு, அவா, வெகுளி நிறைந்த தற்கால உலகமானது பணத்துக்குக்காட்டும் மதிப்பை மாற்றினாலன்றி அதற்கு விமோசனமில்லையென்பது இதனால் தெள்ளிதில் விளங்குகின்றது.

இத் தருணத்தில் பைரவி பிராமணி என்னும் யோகாப்பியாசத்தில் தேர்ச்சிபெற்ற பிராமணப் பெண்மணி தோன்றி கதாதரருக்குக் கடுந்

தவத்தால் ஏற்பட்ட தேக எரிச்சலையும் தீராப் பசியையும் போக்கி யோகாப்பியாசத்தின் இரகசியங்களையெல்லாம் அவருக்குப் போதித்தாள். பின்னர், கதாதரர் பாரமார்த்திக ஞானமனைத்தையும் உணர்ந்து ஞானியாக வேண்டுமென்று முயல்கையில் தோதாபுரி என்னும் ஒரு மஹா புருஷர் வந்து அவருக்குச் சகல வேதாந்த ரகசியங்களையும் உபதேசித்தார். கதாதரர் அவருடைய உபதேசப்படி மூன்று நாள் அப்பியாசஞ் செய்து நிர்விகல்ப சமாதி சித்தியடையப்பெற்றார். தோதாபுரி நாற்பது வருஷம் சிரமப்பட்டு அடைந்த நிர்விகல்ப சமாதியை மூன்று நாளிலேயே கதாதரர் பெற்றதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு "அப்பா! இனி எனக்கு நீ சிஷ்யனல்ல; சமானன். இனிமேல் ராமகிருஷ்ணராக விளங்குவாயாக!" என்று சந்நியாசத் திருநாமங் கொடுத்து வாழ்த்தினார். தோதாபுரி சிலகாலம் அவருடன் தங்கி தமக்குத் தெரிந்த விஷயங்களையெல்லாம் கதாதரருக்குச் சொல்லித் தாமும் அவரிடமிருந்து பல அரிய விஷயங்களைக் கற்றுப் பின் அவ்விடத்தைவிட்டு நீங்கினார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒவ்வொரு மதத்தையும் தனித்தனியே அனுஷ்டானத்தில் கொண்டுவந்தார். ஹிந்து மதத்தின் பல பிரிவுகளையும், கிறிஸ்து மதம் இஸ்லாமிய மதம் ஆகிய இவை யாவையும் அதனதன் விதிப்படி அவர் பயின்றார். எதையும் அரை குறையாகச் செய்வதென்பது அவரிடங் கிடையாது. கிறிஸ்து நாதர் புகட்டிய மார்க்கத்தைப் பின்பற்றியபோது தம்மை ஒரு தீவிரமான கிறிஸ்தவராகவே அவர் பாவித்துக்கொண்டார். இஸ்லாமிய சாதனை செய்தபோதும் அப்படியேதான் நடந்துகொண்டார். நடை யுடை பாவனை யனைத்திலும் அவர் அப்போது ஒரு முஸ்லீம் போன்று ஆய்விட்டார். இந்த மார்க்கங்கள் அனைத்தின் வாயிலாகவும் அவர் அடைந்த முடிவுதான் நமக்குப் பெரு நன்மையும் ஆறுதலுமளிப்பதாகும்.

மெய்ப்பொருள் ஒன்றே. நீரை ஜலமென்றும், வெள்ளமென்றும், பானியென்றும், வாட்டர் (Water) என்றும் வெவ்வேறு பாஷைகளில் கூறுவது போன்று கடவுளைப் பிரம்மமென்றும், சிவனென்றும், விஷ்ணுவென்றும், அல்லா என்றும், பரலோகத்திலிருக்கும் பிதா என்றுஞ் சமயங்கள் சாற்றுகின்றன. எப்பெயரிட்டு அழைத்திடினும் பொருள் ஒன்றே. ஓர் ஊரை யடைய வழிகள் பல இருப்பதுபோன்று கடவுளை அடைவதற்கு மார்க்கங்கள் பல இருக்கின்றன. ஒவ்வொருவனும் தனக்குகந்த சமயத்தைச் சார்ந்திருக்கட்டும். ஆனால் தனது மார்க்கமொன்றுதான் சரியானதென்றும் பிறருடைய மார்க்கங்கள் தப்பானவையென்றும் மனிதன் வாதாடாதிருக்கட்டும். உடலின் இயல்புகளுக்கு ஏற்பப் பலவிதமான உணவுப்பொருள்கள் இருப்பது போன்று சுபாவ வேற்றுமைக்கு ஏற்பப் பல சமயங்களும் இறைவனது அருளால் ஏற்பட்டிருக்கின்றன.

மாதரைப் பழிப்பதும், பெண்ணுலகுக்குப் பொல்லாங்கு விளைப்பதும் பலருக்கிடையில் ஒரு மதக் கோட்பாடா யிருந்துவந்தது. பாபங்கள்

அனைத்துக்கும் பிறப்பிடம் பெண்ணென்று கருதப்பட்டது. மேலான வாழ்க்கைக்கும் மாதர் உலகுக்கும் எவ்வித இணக்கமும் இல்லையென்ற எண்ணம் எங்கும் பரவுவதாயிற்று. விஷய சுகத்துக்குமேல் எதற்கும் உரியவளாக அவள் கருதப்படவில்லை. இக் கொள்கையாலும் அதற்கேற்ற வாழ்க்கையாலும் பெண்மக்கள் வீழலாயினர். சமூகத்தின் பேர்பாதியாகிய பெண்மக்கள் அவமதிக்கப்படவே சமூகமும் ஈனதசையடையலாயிற்று. இதற்கு விமோசனம் ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்வில் காண்கிறோம். அவர் கடவுளையே பெண்ணெனக் கருதினார்; மேலும் பெண்மக்களையும் பராசக்தியின் வடிவென வணங்கினார். உலக இயல்பை ஒட்டித் தாமும் சாரத தேவியை மணந்துகொள்ளும்படி நேரிட்டது. ஆனால் அதன் நிமித்தம் அவளைச் சிற்றின்பத்துக்குரியவளென்று அவர் கனவிலும் கருதினாரில்லை. ஏற்றுக் கொண்ட இல்லாளை இறைவியென்றே அவர் வாழ்த்தி வணங்கினார். ஆடவர்க்கும் மகளிர்க்குமிடையே தெய்வத் தன்மைவாய்ந்த இணக்கம் இருத்தல் வேண்டும் என்பது அவர் காட்டிய வழி. அத்தகைய இணக்கம் ஆத்ம சாதனத்துக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் இன்றியமையாததாகும்.

தனது சாதனை காலம் முடிந்ததும் பரமஹம்ஸருடைய காலம் முழுவதும் அவரிடம் வருபவர்களுக்கு உபதேசஞ் செய்வதிலேயே பெரும்பாலும் கழிந்தது. அவரைத் தரிசித்து ஞானோபதேசம் பெறவேண்டியதற்காக தக்ஷிணேசுவரத்துக்கு வந்த ஜனங்களுக்கு அளவில்லை. பிரம்ம சமாசத் தலைவரான பாபு கேசவசந்திரசேனர் அவரை ஒருதரம் வந்து பார்த்து அவருடைய மகிமைகளை வெளியிட்டபிறகு, பரமஹம்ஸரை நேரில் தரிசிக்க வந்த ஜனங்களைப் பல்லாயிரக் கணக்கில்தான் அளவிட வேண்டும். கேசவ சந்திரசேனருக்கும் பரமஹம்ஸருக்கும் பரஸ்பர அன்பு மேலிட்டது. பிரம்ம சமாசத்தார் ஈசுவரனைத் தாயாகப் பாவித்து வழிபடும் கொள்கை பரமஹம்ஸருடைய அநுக்கிரகத்தால் ஆனதாம். ஐரோப்பா, அமெரிக்கா முதலிய மேற்றிசைக் கண்டங்களில் வேதாந்த தர்சனத்தைப் பரவச்செய்து புகழ்பெற்ற ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தர் பரமஹம்ஸரிடம் உபதேசம்பெற்றுச் சிஷ்யரானதும் இக் காலத்தில்தான்.

பரமஹம்ஸர் தம்மைப் பார்க்க வந்தவர்களுடன் உதயம் முதல் அஸ்தமனம் வரையில் வேதாந்த விசாரஞ் செய்து அவர்களுடைய பக்குவநிலைக்கு ஏற்றபடி உபதேசஞ் செய்து வந்தார். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்பதே அவரது கொள்கையாதலால் தம் சரீர சௌக்கியத்தைக் கொஞ்சமேனும் கவனிக்காமல் பிறருக்கு உபதேசஞ் செய்வதையே பிரதானமாகக்கொண்டிருந்தார். சற்றுச் சிரமபரிகாரஞ் செய்துகொள்ளும்படி யாரேனும் நிர்ப்பந்தித்தால், "எனது முயற்சியினால் ஓர் ஆத்மாவேனும் பந்தத்திலிருந்து நீங்கி மோக்ஷமடையுமானால் அதற்காக என் சரீர வருத்தங்கள் இன்னும் நூறாயிரம மடங்கு அதிகமானாலும் சகித்துக்கொள்வேன்" என்பார். ‘தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்’’ என்பது புத்த தேவருக்கு

மட்டும் பொருந்திய மொழியன்று; நமது பரமஹம்ஸருக்கும் அது நன்கு பொருந்தும்.

1885-ம் வருஷத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் தொண்டை நோய் உண்டாகி வர வர முதிர்ந்தது. சிகிச்சை செய்த வைத்தியர்கள் இவர் ஒன்றுமே பேசாது படுத்த படுக்கையோடிருந்தால் வியாதி குண முண்டாகுமென்றனர். திரள் திரளாகக் கூடும் ஜனங்களை வீணே போகச் சொல்வதற்கு மனமிராத பரமஹம்ஸர் அவர்களோடு ஏதாவது வார்த்தை பேசிக்கொண்டேயிருப்பார். தொண்டை கட்டிப் போய் கஞ்சி, பாயசம் முதலிய திரவ பதார்த்தங்கூட உட்செல்லாத சமயத்திலும் அவர் ஞானோபதேசத்தை நிறுத்தவில்லை. இப்படி பரோபகாரத்திலே காலத்தைக் கழித்து 1 86-ம் வருஷம் ஆவணி மாதம் 16-ந் திகதி இரவு மஹா சாமாதி யடைந்தார்.

பரமஹம்ஸர் மனித ரூபமாய் அவதரித்த ஈஸ்வரன்தான் என்று பெரும்பாலும் இந்துக்கள் கருதுகின்றனர். அவர் கல்வியில் தேர்ந்தவர் அல்லர்; ஸமஸ்கிருத ஞானம் கிடையாது. தாய்ப் பாஷையாகிய வங்க பாஷையிலும் சுருந்த பாண்டித்தியம் பெறவில்லை ஆயினும் அவருடைய உபதேச மொழிகள் தவிக்கும் மனதுக்குச் சாந்தத்தைக் கொடுக்கின்றன. அவ் வுபதேசங்கள், வேதம் உபநிஷதம், தர்சன சித்தாந்தம் முதலியவற்றுக்கெல்லாம் வியாக்கியான வடிவமாய் நின்று அவற்றின் சாரம் அனைத்தையும் யாவருந் தெரிந்துகொள்ளும்படி அமைந்திருக்கின்றன.

மனிதனை மனிதன் மதிக்க வேண்டும் என்றும், மானுடர் அனைவரும் சகோதரர் என்றும், பொருளை மிக விரும்பலாகா தென்றும், அடக்கமுடைய வாழ்வே அழியாத் தன்மைக்கு உற்ற உபாயம் என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் காட்டியருளியதை இப்போது மேதாவிகள் பலர் அறிந்திருக்கின்றனர். இந்த உயர்ந்த கொள்கைகளை நாம் எவ்வளவுக்கெவ்வளவு கையாளுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் மேன்மையுறுகின்றோம். நாம் உய்தற்பொருட்டு நம்மீது கருணைகூர்ந்து நல்வழிகாட்டியருளிய அப் பெரியாரைப் போற்றி வணங்குவது நம் கடமையாகும். அவர் காட்டிய வழியைப் பின்பற்றுதலே அவருக்கு உற்ற ஆராதனையாகும். ஆதலால் நாமும் அவர் அருளால் தர்மத்தைக் கடைப்பிடித்து மேன்மையுற வேண்டுமென்று முழு மனதுடன் இந்த 106வது ஆண்டு விழாவின்போது பிரதிக்கினை செய்து கொள்வோமாக.

"கல்லாத கல்வி
வளர் கடலே! யுள்ளங்
கனிந்துருகுங்
காளியருட் செல்வா! சித்தி
யெல்லாமும் வல்லவனே!
யியல்பிற் பூத்தே
யெம்மதமுஞ் சம்மதமா
யிசைந்து போற்றுஞ்
சொல்லாளா!
சொற்கடந்த பெருமையாளா!
சுத்தசுதந்திரச் சுடரே!
சக்திக் குன்றே!
எல்லையிலா ஸமரஸத்தி
னின்ப விண்ணே!

—வ. பார்த்தசாரதி

போர் வீரனயிரு

மகனே! போர் வீரனயிரு என்று உனக்குச் சொல்கிறேன். சுலபமாக இதனைச் சொல்கிறேன் என்று நீ நினையாதே. போர்வீரன் என்ற சொற்றொடரின் முழு அர்த்தத்தையும் தெரிந்துகொண்டுதான் உனக்குச் சொல்கிறேன். அப்படியானல், பிரதியொருவனும் போர்க்களத்திற்குச் சென்று போர் புரிந்து வீரனதல் முடியுமா? அஃது அவசியமா? என்று நீ கேட்கலாம். யுத்தகளத்திற்குச் சென்று போர் புரிகிறவன்தான் போர் வீரன் என்று நீ நினையாதே. வாழ்க்கையென்பதே ஓர் போராட்டம். இஃது உனக்குத் தெரிந்த விஷயந்தானே. இந்த வாழ்க்கைப் போராட்டத்திலே ஈடுபட்டு வெற்றி காண்கிறவன்கூட வீரன்தான். வாழ்க்கையிலே வெற்றி காண்பது என்றால் என்ன? ஒருவன் ஏழையாயிருந்து, சுயமுயற்சியினலும் அதிருஷ்டவசத்தினலும் கோடீசுவரனகி விடுகிறனென்று வைத்துக் கொள். கோடீசுவரனகிவிட்ட ஒரு காரணத்தினல் மட்டும் அவன் வாழ்க்கையில் வெற்றி கண்டுவிட்டான் என்பது அர்த்தமா வென்ன? இல்லவே இல்லை. அவன் கோடீசுவரனகி விட்டதன் காரணமாக ஆயிரக்கணக்கான பேராவது சுகப்பட்டிருக்கவேண்டும். தவிர, அவன் பலபேருடைய தன் பத்தை உபயோகித்துக் கோடீசுவரனயிருக்கக் கூடாது. அதாவது எவனொருவன் தனது வாழ்க்கையில் அதிகமான பேருக்கு அதிகமான சுகத்தைக் கொடுத்திருக்கிறனே அதிகமான நன்மையைச் செய்திருக்கிறனே அவன்தான் வாழ்க்கையில் வெற்றி கண்டவன் என்று சொல்லவேண்டும்.

ஆனல் இன்று உனக்கு யுத்தகளத்திலே நின்று போர் புரிகிற போர்வீரனுடைய வாழ்க்கையைப் பற்றிதான் சிறிது கூறவேண்டுமென்று நினைக்கிறேன். ஏனென்றால் ஒரு யுத்த வீரனுக்கும் வாழ்க்கைப் போராட்ட

இராமகிருஷ்ண தேவா வுன்
 னிரு தாள் போற்றி.''

காவியை உடுத்திடாமல்
 கமண்டலம் எடுத்திடாமல்

காட்டிடை அலைந்திடாமல்
 கனலிடை நலிந்திடாமல்

பூவுலகதனைச் சுத்தப்
 பொய்யென்றும் புகன்றிடாமல்

சேவைகள் செய்தாற் போதும்
 தெய்வத்தை தெரிவோமென்று

தெளிவுறக் காட்டினய் உன்
 தினசரி வாழ்க்கைதன்னல்

தீவினை இருட்டைப் போக்கிச்
 செகமெலாம் விளங்கும் ஞானத்

தீபமே ராமகிருஷ்ண
 தேவனே போற்றி போற்றி

த்திலே ஈடுபட்டிருக்கிற ஒரு தனி நப ருக்கும் கடமையும் ஒன்றுதான்; தகு தியும் ஒன்றுதான். ஆகையால்தான் உனக்குப்போர்வீரனுடையவாழ்க்கை யைப்பற்றி எடுத்துச்சொல்கிறேன.

ஒரு போர் வீரனுடைய வாழ்க்கை, கடமையை அடிப்படையாகக்கொ ண்டு அமைந்திருக்கிறது. அவன் கீழ்ப் படிந்து நடக்கும் சுபாவமுடையவனு கவும், ஒழுங்குக்குக் கட்டுப்பட்டவனு கவும், எப்பொழுதும் எதற்கும் தயா ராயிருக்கிறவனுகவு மிருக்கவேண்டும். போர் முரசு கொட்டும் சப்தம் கேட் டவுடன் அவன், கச்சைகட்டிக்கொண்டு புறப்பட்டு விடவேண்டும். இன்னும் சிறிது நேரம் பொறுத்துப் போக லாமென்று இருக்கக்கூடாது. அல் லது ஏன் போகவேண்டும் என்று தன்மனதிற்குள்ளேயே வாதப்பிரதி வாதங்கள் செய்துகொண்டிருக்கக் கூடாது. எந்தவிதமான ஆபத்து ஏற்படுமோ என்று சிந்தனை செய்து கொண்டிருக்கக்கூடாது. பீரங்கிவா யிலே சென்று நுழையுமாறு உத்திர வானாலும் அதற்குக் கீழ்ப்படிந்து உடனே செல்லவேண்டும். வாழ்க் கைப் போராட்டத்திலே கூட ஒரு மனிதனுக்கு ஒழுங்கும் தைரியமும், கடமையை உணரும் சக்தியும் இருந் தால் அவன் நிச்சயமாக வெற்றிய டைவான். எவனொருவன், ஒழுங் காகத்தன் வாழ்க்கையை நடத்து கிறானே அவனிடத்தில் விசேஷமான தொரு சக்தி உதயமாகிறது. அந்தச் சக்தியைக்கொண்டு அவன் அநேக காரியங்களைச் சாதித்துக் கொள்ளமு டியும். யுத்தகளத்திலே கூட ஒரு வீரன் மேற்பதவிகளை விரைவில் அடைகிறானென்று சொன்னால், அவன் தன் கடமையை ஒழுங்கா கச் செய்துகொண்டு வந்திருக்கிறா னென்றுதான் அர்த்தம்.

ஒரு போர்வீரன், தோல்வியிலே யாகட்டும், வெற்றியிலே யாகட்டும் தன் கடமையில் தான் கண்ணுங் கருத்துமா யிருக்கவேண்டும். தோல் வியிலே சோர்வோ, வெற்றியிலே களிப்போ கொள்ளக் கூடாது. வருவது என்ன என்பதை எப்பொழு தும் கூர்ந்து கவனித்துக் கொண்டி ருக்க வேண்டும். உதாரணமாக, ஒரு போர் வீரன் காவல் புரியும் வேலைக்கு நியமிக்கப்படுகிறான் என்று வைத்துக் கொள். அவன் ராத்திரியில் தூங்க லாமா? சற்று கண்ணயர்ந்துபோய் விட்டானுகில் அவன் படையே அழி ந்துபோய் விடக்கூடிய நிலைமையும் ஏற்படக்கூடும். மற்றும், அந்தககாவல் வீரன், தன் படை அனைத்தையும் காப்பாற்றும் பொருட்டு தன் உயி ரையே கொடுக்கவேண்டி வந்தாலும் வரும். அதற்கு இவன் பின்னடை யவே கூடாது.

ஒரு போர் வீரன், என்னவித மான சாகஸச் செயல்களைச் செய்த போதிலும், எவ்வளவு துணிவான செ யல்களை நிகழ்த்தியபோதிலும் அவன் அவற்றைப்பற்றிப் பெருமையாகப் பேசிக்கொள்ள மாட்டான். அடக் கந்தான் அவனுக்கு ஆபரணம். தன் னுடைய வெற்றியில் எந்தப் போர் வீரன் செருக்குக்கொள்கிறானே அதே போர்வீரன் தோல்வியில் சோர் வடைந்து விடுதலுங்கூடும். ஆகையால் சிறந்த சேனதிபதிகள் எப்பொழு தமே தங்கள் வீரத்தைப்பற்றித் தற் பெருமை பேசிக்கொள்ள

மாட்டார்கள். சென்ற நூற்றாண்டில் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் போர் நடைபெற்றது. அப்பொழுது ஜெர்மனி வெற்றிபெற்றது. ஜெர்மன் சேனாதிபதியாயிருந்த வான் மோல்ட்கே என்பவன். இவனைப் புகழ்ந்து ஒரு ஜெர்மானியக்கவி அநேக பாடல்களைப் பாடினான். மோல்ட்கே, பாடல்களுக்காக வந்தனம் செலுத்தி விட்டு "பெரிய மனிதர்களுடைய பெருந்தன்மை, அவர்களுக்குக் கஷ்டம் நேரிடுகிறபோதுதான் வெளியாகும். ஒரு போரில் வெற்றி யேற்படுவது, மனிதர்களால்மட்டும் நிகழக்கூடிய சம்பவமல்ல; அதற்கான சந்தர்ப்பங்களும் உண்டாகவேண்டும்" என்று கூறினான். எவ்வளவு அடக்கம் பார்த்தாயா?

ஒரு போர் வீரனுக்குத் தியாக சக்தி நிறைய இருக்கவேண்டும். தன் உயிருக்கு இவன் அஞ்சத் தொடங்குவானாகில், அது காரணமாக ஆயிரக் கணக்கான உயிர்கள் பலியாகி விடுதல் கூடும்.

புலமைக்கும் போர் வீரனுக்கும் நீண்டதூரம என்று சிலர் கருதுகிறார்கள். அதாவது, போர் வீரர்களாயிருக்கப்பட்டவர்கள் புலவர்களாகவோ கவிகளாகவோ இருக்கமுடியாதென்பது இவர்கள் அபிப்பிராயம். ஆனால் உலக சரித்திரம் அப்படிக்கூறவில்லை. கிரீஸ் தேசத்திலே பெரும் புலவர்களாயிருந்த ஸாக்ரடீஸ், ஸோபோக்ளிஸ், ஜெனபன் ஆகியோர், தங்கள் தாய்நாட்டின் பெருமையை நிலைநாட்டுவதற்காக யுத்தகளத்தில் போர் புரிந்திருக்கிறார்கள். ரோம ஏகாதிபத்தியத்தின் பிரபல சக்ரவர்த்தியாகவும் பிரபல போர் வீரனாகவும் விளங்கிய சீஸர் ஒரு மகா வித்துவான் என்பது உனக்குத் தெரியாதா? இத்தாலியக் கவிஞனான தாந்தே ஒரு போர் வீரன். ஆங்கிலக்கவிஞனான சாஸர் என்பவன், கி பி 1339ம் வருஷம் பிரான்ஸின்மீது தொடுக்கப்பட்ட யுத்தத்தில் கலந்துகொண்டான். ~~ஜான்ஸன் என்பவன்~~ ஒரு யுத்த வீரனாகவே வாழ்க்கையைத் தொடங்கினான். சுமார் ஆயிரத்திருநூறு நூல்களை எழுதிப் புகழ்பெற்ற லோபே-டி-வேகா என்ற ஸ்பானிஷ் புலவன், தன் வாழ்நாளின் ஆரம்பத்தில போர் வீரனாகத்தான் இருந்தான். ஸெர்வாண்டெஸ் என்ற மற்றொரு ஸ்பானிஷ் புலவனும் போர்வீரனாகத்தான் இருந்தான்.

ஆகவே மகனே! கல்வி ஞானத்திற்கும் போர்த்தன்மைக்கும் பகைமை என்று கருதாதே. இரண்டையும் நீ வளர்த்துக்கொள்.

உனக்கு அதிகாரமிருக்கலாம். ஆனால் உன்னுடைய அதிகாரத்தைப் பார்க்கிலும் உன்னுடைய கடமையை நிறைவேற்றுவதிலேயே எப்பொழுதும் கருத்துள்ளவனாயிரு.

—ஓர் அறிஞன்

—வெ. சா.

சமுதாய ஒப்பந்தம்

(ரூஸோ எழுதியது)

9. சொத்து பாத்தியதை

ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த பிரதி அங்கத்தினனும்—அதாவது பிரதி மனிதனும்—அந்தச் சமுதாயம் உருவகப்படுகிற சமயத்தில் தான் எப்படியிருக்கிறானோ அப்படியே தன்னையும், தன் அதிகாரங்களையும், தன் சொத்துக்களையும் அந்தச் சமுதாயத்திற்குப் பராதீனப்படுத்தி விடுகிறான். இந்தச் செய்கையினால், அவனுடைய சொத்துக்கள் கைமாறினாலும் அவற்றின் தன்மை மாறுவதில்லை; மற்றும் அவை அரசனுடைய சொத்துக்களாகவும் ஆகிவிடுவதில்லை. ஆனால் ஒரு தனி நபருக்குள்ள அதிகாரத்தைக் காட்டிலும் ஒரு ராஜ்யத்துக்குள்ள அதிகாரம் அதிகமானது. அதைப்போலவே, ஒருவனுடைய சொத்து சமுதாயச் சொத்தாயிருப்பது பத்திரமானது; அதை மாற்றவும் முடியாது. சமுதாயத்திற்குப் புறம்பான அந்நியர்கள் விஷயத்தில் வேண்டுமானால் இது நியாயமற்றதாயிருக்கலாம். ஏனென்றால், ஒரு ராஜ்யத்தில் சம்பந்தப்பட்ட அங்கத்தினர் அத்தனை பேருடைய சொத்துக்களுக்கும் சமுதாய ஒப்பந்தத்தின் மூலமாக அந்த ராஜ்யமே சொந்தக்காரனாகிவிடுகிறது. இந்தச் சமுதாய ஒப்பந்தம் என்பதுதான், ராஜ்யத்தில் உள்ள எல்லா நபர்களினுடைய உரிமைகளுக்கும் மூலாதாரமாயிருக்கிறது. மற்ற அதிகாரங்களைப் பொறுத்தமட்டில் அந்த ராஜ்யத்திற்கு என்ன பாத்தியதை இருக்கிறதென்றால், முதல் ஆக்ரமிப்பு பாத்தியதைதான். இந்தப் பாத்தியதையையும் அது தனிப்பட்ட நபர்களிடமிருந்துதான் பெறுகிறது. ‡

‡ அதாவது ஒருவன் முதன் முதலாகக் காலியாயுள்ள நிலத்தையோ அல்லது வேறிடத்தையோ தன் சுவாதீனப் படுத்திக் கொள்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்படி அவன் சுவாதீனப் படுத்திக் கொண்டு விடுவதனால் மட்டும் அவன் அந்த நிலத்திற்கோ அல்லது இடத்திற்கோ உண்மையான சொந்தக்காரனாக—எஜமானனாக— ஆகிவிட மாட்டான். அப்படி உண்மையான எஜமானனாக வேண்டுமானால் அதற்குச் சில நிபந்தனை கூறுகிறான் ரூஸோ இந்த அத்தியாயத்திலேயே. அந்த நிபந்தனைகளை நிறைவேற்றி அவன் உண்மையான எஜமானனாகி விட்ட பிறகு, அவன் அனுபவிக்கிற நிலம் அல்லது இடம், அல்லது மற்றப் பொருள்கள் முதலியன எல்லாம் அவனுடைய (ஆஸ்தியாக) ஆகின்றது. அதுவரையில் அவற்றின் மீது அவனுக்கு முதல் ஆக்ரமிப்பு பாத்தியதை தான் உண்டு. அதாவது மற்றெல்லோரையும் விட முதன் முதலாக மேற்படி இடத்தைச் சுவாதீனப் படுத்திக் கொண்டான் என்கிற ஒரு பாத்தியதை தான் உண்டு. அந்த முதல் ஆக்ரமிப்பு பாத்தியதை உள்ள காலத்தில் மேற்படி நிலம், அல்லது

முதல் ஆக்ரமிப்பு பாத்தியதை இருக்கிறதே அது ஒரு பலசாலியினுடைய பாத்தியதையைக் காட்டிலும் உண்மையான பாத்தியதையாயிருந்த போதிலும், ஆஸ்தி என்ற தன்மையை அடைந்த பிறகு தான் அந்த பாத்தியதை உண்மையான பாத்தியதையாகிறது. பிரதி மனிதனுக்கும், அவனுக்குத் தேவையானவற்றை அடைய இயற்கையாகவே உரிமையுண்டு. ஆனால் குறிப்பிட்ட சில சொத்துக்களுக்கு அவன் சொந்தக்காரனாகிவிட்ட பிறகு, அவன் மற்றப் பொருள்களுக்கு அந்நியனாகி விடுகிறான். அவனுடைய பாகம் அவனுக்கென்று வகுக்கப்பட்டு விட்டது. அதனோடு தான் அவன் இருக்கவேண்டும். பாகமாகாத மற்றப் பொதுச் சொத்துக்களின்மீது பாத்தியங் கொண்டாட அவனுக்கு உரிமையில்லை. முதல் ஆக்ரமிப்பு பாத்தியதை இருக்கிறதே அது, இயற்கையில் ஒரு பலஹீனமான பாத்தியதையாக இருந்தபோதிலும், ஒரு ராஜ்யத்தைச் சேர்ந்த பிரதி அங்கத்தினராலும் கௌரவிக்கப் படுகிறது. இந்த முதல் ஆக்ரமிப்பு பாத்தியதையில் மனிதர்கள், மற்றவர்களுடைய பாத்தியதை யென்ன வென்பதைப் பற்றிக் கவனிப்பதில்லை; தங்களுக்கு என்ன பாத்தியதை அல்லாதனவை என்பதைத் தான் கவனிக்கிறார்கள்.

முதல் ஆக்ரமிப்பு பாத்தியதையைச் சட்டரீதியாக ஊர்ஜிதம் செய்ய வேண்டுமானால், பொதுவாகக் கீழ்க்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுவது அவசியமாகும்:—

முதலாவது, எந்த நிலத்தை ஒரு மனிதன் முதன் முதலாக ஆக்ரமிக்கிறானோ, அந்த நிலம் அதற்கு முன் வேறெவராலும் வாசம் செய்யப்படாததாய் இருக்கவேண்டும்;

இரண்டாவது, அந்த மனிதன் தன் ஜீவனத்திற்குப் போதிய அளவு நிலத்தையே சுவாதீனப்படுத்திக்கொள்ள வேண்டும்.

மூன்றாவது, அந்த மனிதன் ஏதோ வெற்றுச் சடங்கொன்றை நடத்தி மேற்படி நிலத்தைச் சுவாதீனப்படுத்திக்கொள்ளக்கூடாது; அந்த நிலத்தில் உழைக்கவேண்டும்; அதில் சாகுபடி செய்யவேண்டும். இதுதான் உண்மையான பாத்தியதைக்கு அடையாளம். வேறு சட்டரீதியான பாத்தியதை இல்லாவிட்டாலும், இந்தப் பாத்தியதையை எல்லாரும் அங்கீகரிப்பர்.

தேவையையும் உழைப்பையும் அனுசரித்து முதல் ஆக்ரமிப்பு பாத்தியதையை நாம் அங்கீகரித்தோமானால், அந்தப் பாத்தியதை எவ்வளவுதூரம் செல்லமுடியுமோ அவ்வளவுதூரம் அதனை விஸ்தரித்துகொண்டு செல்கிறோமில்லையா? இந்த பாத்தியதைக்கு நாம் ஓர் எல்லை வகுக்க முடியாதா? பொதுவானதொரு நிலத்தில் அடியெடுத்து வைத்துவிட்டு அந்த நிலத்திற்குப் பாத்தியதை கொண்டாடிவிட்டாலே போதுமா? மேற்படி நிலத்தில்

இடம், அல்லது மற்றப் பொருள்கள் முதலியன வெல்லாம் ஆஸ்தி யென்று பெயர் பெறுவதில்லை; உடைமை (Possession) என்ற பெயரையே பெறுகின்றன. இந்த கொள்கையை மையமாக வைத்துக் கொண்டு ரூஸோ இந்த அத்தியாயத்தை விஸ்தரிக்கிறான்.

ஏற்கனவே குடியிருந்தவர்களைத் தற்காலிகமாக வெளியே துரத்திவிட்டதனாலேயே, அவர்கள் மீண்டும் அந்த நிலத்திற்கு வரக்கூடிய உரிமையை அவர்களினின்று அகற்றிவிட முடியுமா? ஒரு தனி மனிதனோ அல்லது ஒரு ஜாதியோ விசாலமானதொரு பிரதேசத்தை, அங்கு வசிக்கும் ஜனங்களுக்கு அந்தப் பிரதேசத்தின் பாத்தியதை இல்லாமற் செய்து ஆக்ரமித்துக் கொள்ளலாமா? அப்படி ஆக்ரமித்துக் கொள்வது தண்டிக்கப் படக் கூடிய ஆக்ரமிப்பாகுமல்லவா? ஏனென்றால் ஏற்கனவே அங்கிருந்த ஜனங்கள் வசிப்பதற்கு இடமில்லாமலும் ஜீவனத்திற்கு வகையில்லாமலும் செய்து விடப் படுகிறார்களல்லவா? ந்யூனெஸ் பால்போ ¶ ஸ்பெயின் தேசத்து மன்னரின் பெயரால் பசிபிக் மகா சமுத்திரத்தையும், தென்னமெரிக்கா முழுவதையும் ஆக்ரமித்துக் கொண்டு விட்டது, ஏற்கனவே அந்தப் பிரதேசங்களில் வசித்துக் கொண்டிருந்த ஜனங்களுக்கு அந்தப் பிரதேசத்தின் பாத்தியதை மறுக்கப் படுவதற்குப் போதிய ருஜுவாகுமா? இந்த மாதிரியான உதாரணங்கள் பலவற்றை நாம் எடுத்துக் காட்டலாம். மேற்படி ஸ்பெயின் தேசத்து மன்னனும் தனது மந்திரிச் சபையில் இருந்து கொண்டு, பேனா முனையினால், உலகமனைத்தையும் தன் சுவாதீனப் படுத்திக் கொண்டு விட்டு, பிறகு அந்தப் பிரதேசங்களில் வசித்துக் கொண்டிருந்த அரசர்களுக்கு அவரவர்களுடைய ராஜ்யங்களைத் திருப்பிக் கொடுத்து விடலாமல்லவா?

தனிப் பட்டவர்களுடைய பூப்பிரதேசங்கள் ஒன்று சேர்ந்து பொதுச் சொத்தாகிறது என்பதையும், அரச உரிமை என்பது, ஜனங்களின் மீது செலுத்தப்படும் ஆதிக்கத்திலிருந்து அந்த ஜனங்களின் நிலங்களுக்கு பாத்தியதை கொண்டாடுகிற உரிமை வரையில் சென்றிருக்கிறது என்பதையும், இந்த உரிமைகளே உண்மையான, நேரான உரிமைகளென்பதையும் இதுகாறும் தெரிந்து கொண்டோம். இதனால் அரச உரிமையானது, ஜனங்களுடைய ஆதரவை அதிகமாக எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. அரசர்கள் செலுத்தும் அதிகாரங்களை அவர்களுடைய நன்னடத்தைக்கு ஜாமீன் போலாகிறது. இதைப் பழைய காலத்து மன்னர்கள் சரியாக அறியவில்லை. ஏனென்றால் அவர்கள் தங்களை பாரசீகர்களின் மன்னர்கள், அல்லது ஸ்கிதியர்களுடைய மன்னர்கள் அல்லது மஸிடோனியர்களுடைய மன்னர்கள் என்றுதான் அழைத்துக் கொண்டார்கள். அதாவது ஜனங்களின் எஜமானர்களாகவே அவர்கள் இருந்து விட்டார்கள்; தேசங்களின் சொந்தக்காரர்களாக இருக்கவில்லை. இப்பொழுதுள்ள அரசர்கள், புத்திச்சாலித்தனமாக பிரான்ஸின் அரசன், ஸ்பெயின் அரசன், இங்கிலாந்தின் அரசன் என்று தங்களை அழைத்துக் கொள்கிறார்கள். நிலத்தைச் சுவாதீனப் படுத்திக் கொண்டால் அந்த நிலத்திலுள்ளவர்களையும்

¶ ந்யூனெஸ் பால்போ (Nunez Balboa) என்பவன் கி. பி. 1513ம் வருஷம், அப்பொழுது ஸ்பெயின் தேசத்து மன்னனாயிருந்த பெர்டிநாந்து என்பவன் பிரதிநிதியாக பசிபிக் மகா சமுத்திரத்தை சுவாதீனப் படுத்திக் கொண்டான்.

சுவாதீனப் படுத்திக் கொண்டது போலாகுமென்பதை இவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

தனிப்பட்ட நபர்களின் சொத்துக்களைச் சமுதாயமானது தன் சுவாதீனப்படுத்திக் கொண்டு விடுவதனால் ஏற்படுகிற விசேஷ அமிசம் என்னவென்றால், அந்தத் தனிப்பட்ட நபர்களின் சொத்துக்களைச் சமுதாயமானது திருட்டுத்தனமாகப் பறித்துக் கொண்டு விடுவதில்லை. அதற்குப் பதிலாக, அவர்களுக்கு அந்தச் சொத்துக்களின் மீது நியாயமான பாத்தியதை இருக்கிறதென்பதை அங்கீகரிக்கிறது; ஆக்ரமிப்பு பாத்தியதையை உண்மையான பாத்தியதையாக்குகிறது; அநுபவ பாத்தியதையை எஜமான பாத்தியதையாக்குகிறது. மற்றும், சமுதாயத்தின் பிரதிநிதிகளாக மேற்படி பொதுச் சொத்துக்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள், மேற்படி பொதுச் சொத்துக்களின் கர்த்தாக்களென்று கருதப் படுகிறார்கள்; அவர்களுடைய உரிமைகளை, ராஜ்யத்தைச் சேர்ந்த எல்லா நபர்களும் அங்கீகரிக்கிறார்கள். இதனால் அந்த ராஜ்யமானது தன் சக்தி கொண்டு அந்நியர்களைத் தகைந்து நிற்கிறது. இதனால், தனிப்பட்ட நபர்கள் தங்கள் சொத்துக்களை ராஜ்யத்தின் சொத்துக்களாக மாற்றி விடுவதனால் அந்த ராஜ்யத்திற்கும் நன்மை செய்தவர்களாகிறார்கள்; தங்களுக்கும் நன்மை செய்து கொண்டவர்களாகிறார்கள்.

இன்னும் சில சந்தர்ப்பங்களில், மனிதர்கள் ஏதேனும் நிலங்களைச் சுவாதீனப்படுத்திக் கொள்வதற்கு முன்னரேயே ஒன்றுகூடி ஒரு சமுதாயம் போல் வாழத் தொடங்கி விடலாம். பின்னர், தங்களுக்குப் போதுமான அளவு பிரதேசத்தைச் சுவாதீனப் படுத்திக்கொண்டு அதனை எல்லாரும் பொதுவாக அனுபவிக்கலாம்; அல்லது தங்களுக்குள்ளேயே சரிசமானமாகவோ, அல்லது அரசன் விதிக்கிற திட்டப்படியோ பங்கிட்டுக்கொள்ளலாம். எந்தவிதமாகச் சுவாதீனப் படுத்திக் கொண்டபோதிலும், ஒரு தனிமனிதனுக்கு அவனுடைய சொத்தின் மீது என்ன பாத்தியதை இருக்கிறதோ அது, சமுதாயமானது எல்லாருடைய சொத்துக்களின் மீதும் கொண்டுள்ள பாத்தியதைக்குத் தாழ்ந்ததுதான். இந்த ஏற்றத் தாழ்வு இல்லாவிட்டால், சமுதாய ஒற்றுமை ஸ்திரமாயிராது. அரசுரிமையும் ஒரு சக்தியோடுகூடி இயங்க முடியாது.

சமுதாய ஒழுங்குக்கு அடிப்படையாயுள்ள ஒரு விஷயத்தை மட்டும் இங்குக் குறிப்பிட்டு விட்டு இந்த அத்தியாயத்தை முடித்துவிடுகிறேன். சமுதாய ஒப்பந்தம் என்பது, மனிதனுடைய இயற்கையான சமத்துவத்தை அழித்துப் போடுவதற்குப் பதிலாக, தேக பலத்தின் காரணமாக உண்டாகிற சமத்துவமின்மைக்குப் பதிலாக, ஒழுக்க ரீதியான, சட்டரீதியான ஒரு சமத்துவத்தை அளிக்கின்றது. மனிதர்கள் தேகபலத்திலும் அறிவிலும் வித்தியாசப் பட்டவர்களாயிருந்தபோதிலும், சம்பிரதாயத்தின் பேரிலும் சட்டரீதியாகவும் சமத்துவமுடையவர்களாகிறார்கள்.

சி. நாகையா

ஆங்கிலோ-பர்மிய யுத்தங்கள்

பர்மாவின் கடைசி மன்னரான "திபோ" எவ்விதம் சரணடைந்தாரென்னும் விஷயத்தைப் பற்றி, சில வருடங்களுக்கு முன்னே ரங்கூன் மெடிகல் காலேஜில், மிஸ்டர் நாய்ஸ் என்பவர் நீண்டதோர் கட்டுரையெழுதிப் படித்தார்.

அவர், தம்முடைய கட்டுரையில் மனம் போனவாறு பர்மிய மன்னர்களையும், அவர்களது ஆட்சி முறைகளையும் இழிவு படுத்திக் கூறியிருந்தார். இது இருபதாவது நூற்றாண்டல்லவா? பர்மியர் உறங்கிக் கொண்டிருக்க வில்லை. தேசீய உணர்வும், புராதன சரித்திர ஆராய்ச்சியில் விசேஷ அக்கரையும் கொண்டுள்ள பர்மிய அறிஞர்கள் பலர், ஒரு முகமாய் மிஸ்டர் நாய்ஸின் அபாண்டமான பொய்க் கூற்றுக்களை வன்மையுடன் பொதுக் கூட்டங்களில் பேசியும், பத்திரிகைகளில் எழுதியும் கண்டித்து எதிர்க்கலானார்கள். சுயேச்சை இல்லாத நமக்கு, புராதன சரித்திரங்களை ஆராய்ந்து உண்மையான விஷயங்களை உள்ளது உள்ளபடி வெளியிடுவதற்கு வசதிகள் இல்லாமலிருப்பது ஆச்சரியமில்லைதான். இருந்தபோதிலுங்கூட, பர்மியர்கள் இயன்ற வரையில் தங்கள் நாட்டின் பூர்வ சரித்திரங்களை பனையோலைகளில் பொறிக்கப் பட்டுள்ள தகுந்த ஆதாரங்களைக் கொண்டு, இக்காலத்தவர்கள் படித்தவுடன் பெருமை கொள்ளும் படியாகவும், தேசீய உணர்வை அடையும் படியாகவும் நவீன முறையில், காலஞ்சென்ற சேனாபதி மகா பண்டுலாவைக் குறித்தும், 'டமின் ஷு-வேட்டி' யைக்குறித்தும், பர்மிய நெப்போலியனென்றழைக்கப்படும் 'பய்யீன் நாஙை' க் குறித்தும் இன்னோரன்ன பல புராதன பர்மிய தலைவர்களைப் பற்றி புத்தகங்கள் ரூபமாய் வெளியிட்டு பூர்வகால சரித்திர நல் விருந்தை தங்கள் இனத்தாருக்கு ஊட்டி வருகிறார்கள். இதை நாம் கண் கொண்டு பார்க்கிறோம். அவ்விதம் வெளியிடப்பெற்ற புத்தகங்களில் பல, சர்க்காரின் அங்கீகாரம் பெற்ற பாட புத்தகங்களாய் மிளிர்கின்றன. இதைப்பற்றி மேலும் கூறுவதை விடுத்து, எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு வருவோம். மிஸ்டர் நாய்ஸ் படித்த கட்டுரையைப் பர்மிய சமூகம் பழித்ததால், அதனை சரித்திர ஆராய்ச்சிக் கழக சார்பிலே வெளியிடப் பெறும் சஞ்சிகையில் பிரசுரிக்காது விட்டு விட்டார்கள். மிஸ்டர் காக்ஸ், ஹார்வே போன்ற ஆங்கிலேய ஆசிரியர்களால் பர்யாவின் சரித்திரங்களைப் பற்றி புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றுள் சொல்லப் படும் பல விஷயங்களுக்கும் பர்மியர்களால் எழுதப் பெற்ற புக்தகங்களில் சொல்லப் படுபவைகளுக்கும் அதிக வித்தியாசங்களிருப்பதையும், திரிபு படுத்திக் கூறியிருப்பதையும் காண்கின்றோம். இந்தியாவை எடுத்துக் கொள்வோம். நமது தேசத்தின்

பண்டைக்கால சரித்திரங்களை அப்படியே எடுத்துக்காட்டும் சரித்திரப் புத்தகங்கள் கிடைப்பது மிக அரிதாயிருக்கிறதென்பது வாசகர்கள் நன்கறிந்த விஷயம்தான். இஃது இவ்வாறிருக்க, ரங்கூன் சர்வகலாசாலையின் சரித்திராசிரியரான திரு, தேசாய் என்பவர், சில ஆண்டுகளுக்கு முன்னே. ஆங்கிலோ—பர்மிய முதலாவது யுத்தத்தின் போது பர்மிய அரண்மனையில் நடந்த சம்பவங்கள் என்னும் விஷயத்தைப்பற்றி மிக அழகாய்ப் பல ஆதாரங்களுடன் விளக்கமாய் சொற்பொழிவொன்றை நிகழ்த்தினர். அவ்விதம் அவர் நிகழ்த்திய சொற்பொழிவுக்கு ஆதாரமாய் எடுத்துக்கொண்ட ரிக்கார்டுகள், மிகவும் குறிப்பிடத் தகுந்தவைகளாகும். அவற்றுடன் ஜட்ஸன் தம்பதியார் எழுதியிருந்த குறிப்புகள், ஜான்லோரான்ஸ், ஸ்நாட்கிராஸ், கிராபோர்டு, ட்ரென்ட், வொயிட் அன் லோரிஸ் போன்ற அயல்நாட்டவர்களின் குறிப்புகள் ஆகியவற்றை திரு, தேசாய் ஆதாரங்களாகக் கைக்கொண்டிருந்தார்.

ஆங்கிலேயர்களுக்கும், பர்மியர்களுக்கும் மனக்கசப்பு உண்டானதற்குக் காரணம், ஆங்கிலேயர்கள் சந்திர காந்தசிங்கை பர்மியர்கள் கோரிக்கைப்படி அவர்கள்வசம் ஒப்புவிக்காமல் பிடிவாதமாயிருந்தார்கள். இதுவும் ஒரு காரணமாகும். அப்பால், அரக்கான் சமீபமாயுள்ள ஆங்கிலேயர் வசத்திலிருந்த ஷின்மாபியூ தீவுக்குள் திடும்பிரவேசமாய் பர்மியர்கள் நுழைந்து அதனைக் கைப்பற்றிக் கொண்டார்கள். எனவே, ஆங்கிலேயர்கள் பொறுமை யிழந்தவர்களாய், வேறு வழியின்றி பர்மியரோடு யுத்தம் செய்யும்படியான நிலைமைக்கு வந்து விட்டார்கள். முதலாவது யுத்தம் ஏற்படுவதற்கு முன்னால், ஆங்கிலேயரும் பர்மியரும் நிரந்தர சிநேகப்பான்மையுடன் அரசியல் காரியங்களை நடத்தி வந்ததாகவும் நாம் சொல்வதற்கில்லை. இரு சாராரிடையே மனக் கசப்பை யுண்டாக்கிய பல முக்கிய சம்பவங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

இந்தியாவின் ஒரு பாகமாகிய வங்க மாகாணத்தையும் அதனைச் சேர்ந்த பாகங்களையும் ஆங்கிலேயர்கள் வசப்படுத்திக் கொண்டு விட்டார்கள். போடோபயா என்னும் பர்மிய மன்னரது ஆளுகையிலே, அதாவது ஏறக்குறைய சுமார் 157 வருடங்களுக்கு முன்னால், பர்மியர்கள் அரக்கான் பகுதியை முற்றுகையிட்டார்கள். ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான அரக்கான் பகுதியிலும் சிட்டகாங் பகுதியிலும் எல்லைப்புறத்தகராறு ஏற்பட்டு, அதனால் பர்மியர்களும் ஆங்கிலேயர்களும் சண்டைபோட்டுக் கொள்ளும்படியாய் நேர்ந்தது. பர்மியரது ஆதீனத்திலுள்ள அரக்கான் பகுதியில கலகம் செய்துவிட்டு, ஆங்கிலேயர் பகுதியில் சில அரக்கானியர்கள் தஞ்சம் புகப் போனார்கள். அவர்கள் வசிப்பதற்கு ஆங்கிலேயர்கள் தாராளமாய் அனுமதித்தார்கள். இதைக் கண்ட பர்மியர்கள், குற்றவாளிகளை ஆதரிக்கும் ஆங்கிலேயர்கள் என்பதாய் குறை கூறினார்கள். மேலும், அவர்களைத் தங்கள்வசத்தில் ஒப்புவிக்கும்படி ஆங்கிலேயரிடம் கேட்டுக்கொள்ளவும் செய்

தார்கள். ஆனால், அதற்கு ஆங்கிலேயர்கள், அரசியல் காரணமாய் அடைக்கலம் புகுந்தாரைப் பிடித்துக் கொடுக்கும் வழக்கம் தங்களுக்குக் கிடையாதென்பதாக முகாந்திரம் கூறினார்கள். இதில் பர்மியருக்கு சமாதானம் ஏற்படவில்லை. 'சத்துருக்களைக் கைது செய்து கொடுக்கும் வழக்கம் தங்களுக்குண்டென்ப'தாகச் சொல்லிக் கொண்டு, அவர்கள் ஆங்கிலேயரது ஆதிக்கத்திலுள்ள பாகத்தில் பிரவேசித்து அக்கலகக்காரர்களைக் கைது செய்தார்கள். இச்சம்பவத்தால் பர்மியருக்கும் ஆங்கிலேயருக்கும் மனக்கசப்பு அதிகரிக்கலாயிற்று. சமரசம் செய்துகொள்வதற்காக ஆங்கிலேயர்கள் பர்மியரிடத்தில் தூதுக் கோஷ்டியை அனுப்பினார்கள். சம அந்தஸ்து இல்லாத தூது கோஷ்டியுடன் பேசி சமரசம் செய்துகொள்வதைத் தாங்கள் விரும்பவில்லை என்பதையும், ஆங்கில மன்னருடன் நேர்முகமாய்த் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்புவதாயும் பர்மியர்கள் தூது கோஷ்டியிடம் தெரிவித்து சமரசத்திற்குரிய சம்பாஷணைகளை நடத்திக் கொள்வதற்கு மறுத்து விட்டார்கள். இவ்விதம் பர்மியர்கள் நடந்துகொண்டது, ஆங்கிலேயர்களுக்கு வருத்தத்தை உண்டுபண்ணிவிட்டது. மேலே கூறப்பட்ட சம்பவங்கள் யாவும், பின்னால் உண்டான ஆங்கிலேய-பர்மிய யுத்தத்திற்கு அடிப்படையான முக்கிய காரணங்களாகும். இருப்பினும் மற்றுமொரு முக்கிய நிகழ்ச்சியைக் குறிப்பிடாமலிருப்பதற்கில்லை. மணிப்பூர், அசாம் போன்ற இந்திய பிரதேசங்களின் சிற்றரசர்கள் பர்மிய ஏகாதிபத்தியத்தின் கீழ் அரசாட்சி செய்துவந்தவர்கள். பூர்வ சம்பிரதாயப்படி அவர்கள் விடாமல் பர்மிய மன்னர்களுக்கு காணிக்கை செலுத்தி தங்களுடைய மரியாதையையும் நல்லெண்ணத்தையும் காட்டிவந்தார்கள். அவ்விதம் நடந்து வந்தவர்கள், பின்னால் நடந்துகொள்ளத்தவறி விட்டார்கள். இதைக் கண்ட பர்மியர்கள் ஆத்திரம் கொண்டார்கள். உடனே அவர்களுடைய நாடுகளின்மீது படையெடுத்து, வசப்படுத்திக்கொண்டு விட்டார்கள். மணிப்பூர் மன்னரும், அசாம் மன்னரும் ஆங்கிலேயருக்குச் சொந்தமான கச்சார் பிரதேசத்திற்குள் நுழைந்து அடைக்கலமானார்கள். அப்பொழுது அவ்விருவரையும் ஆங்கிலேயர்கள் உற்சாகப் படுத்திக்கொண்டிருந்தார்கள். இச்சம்பவம், பாஜீடோ மன்னா காலத்தில் ஏற்பட்டதாகும்.

பர்மியரதும் ஆங்கிலேயரதும் எல்லைக்கு மத்தியில் உள்ள ஷின்மா வியூகூவில் ஆங்கிலேயர்கள் பிரவேசித்து தங்களுடைய யூனியன் ஜாக் கொடியைப் பறக்க விட்டார்கள். இதிலிருந்து இருசாராருக்கும் விவாதங்கள் ஏற்பட்டு விட்டன. அந்தத்தீவு தங்களுக்குத்தான் சொந்தமானது என்றார்கள் பர்மியர்கள். அல்ல, அது எங்களுக்குத்தான் பாத்தியமானது என்றார்கள் ஆங்கிலேயர்கள். வம்பு, வீம்பாகி சண்டையில் வந்து முடிந்தது. ஆங்கிலேயர்கள் யுத்த பிரகடனம் செய்வித்தார்கள்.

பர்மியருக்கும் ஆங்கிலேயருக்கும் யுத்தம் மூளுவதற்கு மேற்கண்ட சம்பவங்கள்தான் காரணம் என்பதை மேலும் நாம் ஊர்ஜிதம் செய்வது அநாவசியமாகும். சரித்திராசிரி

யர்களெல்லாம் இவைகள்தாம் காரணங்களென்பதாகப் பகிரங்கமாய் தெரிவித்துள்ளார்கள். ஆனால், ஆங்கிலேயர்கள் பர்மாவை முற்றுகையிட்டு ஸ்வாதீனப் படுத்திக் கொண்டதற்கு மற்றும் ஏராளமான காரணங்களுண்டு.

பர்மா சர்க்காரின் கல்வி இலாகா தலைமை அதிகாரியாய் உத்தியோகம் பார்த்த மிஸ்டர் ஜே. பி. பாருலே என்பவர் "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்" என்பதாக புத்தகமொன்றை எழுதியுள்ளார். அதன் 190வது பக்கத்தில், பிரான்சுக்காரர்கள் இந்தோ—சைனா தீபகற்பத்தைச் சேர்ந்த ஆனம் பிரதேசத்தையும் மேனான் நதியின்மேல் பாகத்தையும் கவர்ந்து கொண்டுவிட்டார்கள்.

பர்மியர்கள் தங்கள்மீது படையெடுத்து வாராமலிருப்பதற்காக என்ன செய்தார்கள்? கச்சார் பிரதேசத்தைத் தாங்கள் பாதுகாப்பதாகச் சொல்லி அதன்இராணுவப் பொறுப்பை ஆங்கிலேயர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

ஜே. ஸ்டூவார்ட் என்பவர் 'ஆங்கிலேயர் ஆளுகையின் கீழ் பர்மாவின் வரலாறு' என்பதாக புத்தகமொன்றை வெளியிட்டுள்ளார். அப் புத்தகத்தின் 115, 116 ஆம் பக்கங்களில, "மணிப்பூர் மன்னர் வழக்கம்போல் பர்மிய மன்னருக்குக் காணிக்கை செலுத்தி மரியாதை செய்ய மறுத்தார். இதன் காரணத்தால், பர்மியர்கள் அவர் நாட்டின்மீது படையெடுத்து அவரது அகம்பாவத்தை ஒடுக்கினார்கள். அசாம் மன்னர், பர்மிய மன்னர்மீது பொறாமை கொண்டு, பர்மியர்களுக்கிடையே கலகத்தை யுண்டுபண்ணி வைக்கத் தம்மாலியன்றவரை முயன்றார். அப்பொழுது மகா பண்டுலா எதிர்த்துப் போராடினர். இதனால் அசாம் மன்னர் தோல்வியடைந்தார். உடனே ஆங்கிலேயரிடம் தஞ்சம் புகுவதற்காக அவர்களது பிரதேசத்தை நோக்கி ஓட்டம் பிடித்தார். அப்பால் அசாம் பிரதேசத்தை பர்மியர்கள் ஆளத்தலைப்பட்டார்கள்.

இதைப்பார்த்துக் கொண்டிருக்க ஆங்கிலேயர்கள் சம்மதிப்பார்களா? அசாம்மன்னருக்கு ஆயுத தளவாடங்களை தாராளமாய் உதவி பர்மிய ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும்படி தூண்டினார்கள். ஆனால் முயற்சி சித்திக்கவில்லை.

மணிப்பூர், அசாம் இவைகளைக் கடந்து பர்மியர்கள் வாராதிருப்பதற்காக, ஆங்கிலேயர்கள், கச்சார் பிரதேசத்திலேயே அவர்களை மடக்கி விடுவதென வேலைசெய்தார்கள். ஆனால், விரோதிகளைத் தங்கள் வசத்தில் ஒப்புவிக்க வேண்டுமென பர்மியர்கள் கேட்டுக் கொண்டார்கள். கோரிக்கைக்கு இணங்கி விரோதிகளை ஒப்புவிக்க ஆங்கிலேயர்கள் மறுத்துவிட்டார்கள். இதைக்கண்டு மனம் முறிந்து இருதரப்பாரும் போரில் இறங்கலானார்கள்.

லார்டு ஆம் ஹர்ஸ்ட், "அரக்கான் மன்னர் உச்சத்திலிருந்த காலத்தில், டக்காவரை செல்வாக்குடனிருந்து வருகிறார்" என ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பர்மாவின் முதலாவது லெப்டினெண்ட் கவர்னராயிருந்தவர் மேயர் என்பவராவர். இவரால் பர்மா சரித்திரம் எழுதப்பட்டிருக்கிறது. அதன் 234வது பக்கத்தில், "கச்சார் பிரதேசத்து மன்னரான கோவிந்த் சந்திரனை சிம்மாசனத்திலிருந்து இறக்கிவிட்டு, அவருக்கு பதிலாய் அவருடைய சகோதரரான சோர்ஜித் சிங் என்பவருக்கு முடிசூட்டி வைத்தார். இக்காரணத்தால் தனக்கு சகல உதவிகளையும் செய்ய வேண்டுமென்று கோவிந்த சந்திர ஆங்கிலேயரிடம் வேண்டிக் கொண்டார். இதற்கு ஆங்கிலேயர்கள் மறுத்துவிட்டார்கள். தன்னுடைய அரசு தனக்குக்கிடைக்க வேண்டுமென அவர் பர்மிய மன்னரிடத்தில் மன்றாடினார். இதன்பேரில் பர்மிய மன்னர் சேனைகளை அனுப்பி சோர்ஜித் சிங் மீது படை யெடுக்கச் செய்தார்.

இப்படியாக, ஆங்கிலேயர் எல்லைப் புறத்துக்குச் சமீபமாயுள்ள பிறதேசங்களைப் பல வழிகளிலும் பர்மியர்கள் தங்களுடைய அதிகாரத்துக்குள் நுழைத்துக்கொண்டு வருவதைக் கண்ட ஆங்கிலேயர்கள் அச்சம் கொள்ளலானார்கள். வரப்போகும் ஆபத்துக்களை உத்தேசித்துத்தான் கச்சார் பிரதேசத்தைத் தாங்கள் பாதுகாத்து வருவதாக அவர்களால் அறிக்கைவிடும்படி நேர்ந்தது" என கூறியுள்ளார்.

மணிப்பூர் மன்னர் கச்சாருக்கு ஓடிப்போனார். அப்பால், அவர் படைகளைத் திரட்டிக்கொண்டு மணிப்பூரை நோக்கி வந்து பர்மியப் படைகளை எதிர்த்தார். இதனால் பர்மியர்கள் கச்சார் பிரதேசத்தில் பிரவேசித்து யுத்தம் செய்ய நேர்ந்தது. இதனால் ஆங்கிலேயர்களுக்கும் பர்மியர்களுக்கும் மனஸ்தாபம் உண்டாயிற்று. என்று பர்மிய சரித்திரம் எழுதிய ஊ பாத்தான் குறிப்பிடுகிறார்.

மணிப்பூர் மன்னர் மர்ஜித் சிங் என்பவர், ஆங்கிலேயர் ஆதீனத்துக்குட்பட்ட கச்சார் பிரதேசத்தில் தஞ்சம் புகுந்தார். இதனால் பர்மியர்கள் அவரைப் பின்தொடர்ந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் வார்த்தைகள் வளரலாயின என்று ஊப்போச்சா குறிப்பிட்டுள்ளார்.

சினிமா பக்தர்களுக்கு

இந்தியாவில் சினிமா தொழிலில் இடுபட்டிருக்கிறவர்களின் தொகை 25,000. அமெரிக்காவில் இந்தத் தொழிலில் இடுபட்டிருப்பவர்கள் 2,90,000 பேர்.

—"நாராயண சிவன்"

இந்தியாவும் மோட்டார் தொழிலும்

உலகத்திலுள்ள பத்துப் பெரிய கைத்தொழில் தேசங்களி லொன்றென்று இந்தியா சொல்லப் பெறுகிறது. அது அவ்விதமிருக்க லாம். ஆனால் கூடுமான எல்லாவிதக் கைத்தொழிலிலும் அது அபிவிருத்தி யடைய வில்லையென்பது வெளிப் படை. இதில் குறிப்பிடக்கூடியது இத் தேசத்தில் மோட்டார் கைத் தொழில் அறவே இல்லாமலிருப்பது தான்.

அமெரிக்காவில் ஒரு வருடத்தில் ஜனங்களின் க்ஷேமம் அவ் வருடத் தில் அங்கு விற்கப்படும் மோட்டா ரைப் பொறுத்திருக்கிறதெனச் சொல் லப்பெறுகிறது. அத் தேச மக்களில் எழுவரிலொருவர் இத் தொழிலிலேயே ஜீவனம் செய்கிறார்களென்றும் தொழிலாளிகளுக்கு இத் தொழில் மூலம் 330 கோடி ரூபாய் கொடுக்கப் பெறுகிறதென்றும் சொல்லப்பெறு கிறது. யுனைடெட் கிங்டத்திலும் இத் தொழில் அதிகமான மூலப்பொருளை உபயோகப்படுத்தக் கூடியதாகவும் ஜனங்களுக்கு வேலை கொடுப்பதில் சிறந்ததாகவும் கருதப்படுகிறது. கைத் தொழில் நாடுகளாகிய மேனாடுகளில் அத் தேசச் சர்க்கார்கள் இத் தொழி லின் முக்கியத்துவத்தை உணர்ந்து பணங்களனுமதித்தும் போக்கு வரத்துகளில் பாதுகாப்பளித்தும் சலுகை காட்டி வருகிறார்கள்.

அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தில் ஒவ்வொரு பதினாயிரம் பேருக்கும் 2,300 மோட்டார் வாகனங்களிருந்து வருகின்றனவென்றும் இந்தியாவில் ஒவ்வொரு பதினாயிரம் மக்களுக்கு ஐந்து வாகனங்களே இருந்துவருகின் றனவென்றும் கணக்கிடப்பட்டுள் ளது. உலகத்திலுள்ள முக்கியமான தேசங்களிலுள்ள மோட்டார் வாக னங்களின் எண்ணிக்கையையும் ஒரு வாகனத்தை உபயோகப்படுத்தும் சராசரி ஜனத்தொகையையும் கீழே கொடுத்துள்ளேன்.

தேசம்	வாகனத்தின் மொத்த எண்ணிக்கை	ஒரு வாகனத்தை உபயோகிக்கும் சராசரி ஜனத்தொகை
அமெரிக்க ஐக்கிய அரசாங்கம்	30,180,225	4
கானடா	1,420,924	8
பிரிட்டன்	2,608,501	18
பிரான்ஸ்	2,268,985	18
ஜெர்மனி	1,951,789	42
இத்தாலி	475,000	93
ருஷ்யா	750,000	252
ஜப்பான்	180,000	389
இந்தியா	185,000	1908

இந்தியாவில் மோட்டார்த் தொழி லாரம்பத்திற்குப் பத்திரிகைகள் மூல மாயும் இதர வழிகளிலும் ஊக்கமும் ஆர்வமும் காட்டி வந்ததற்குக் காரண புருஷன் ஸர். எம். விஸ்வேஸ்வரய்யா வாகும். முதல் முதல் இத் தொழி

லாரம்பதைப் பற்றி 1934ம் ஆண்டில் பேச்சு வந்ததிலிருந்து இத் திட்டத்தின் பல துறைகளையும் அவர் ஆராய்ந்து வருகிறார். அவர் 1935ல் ஐரோப்பா அமெரிக்கா முதலிய நாடுகளில் பிரயாணம் செய்து இத் தொழிலின் பல அம்சங்களையும் நன்கு அறிந்து இது விஷயமாக குறைந்தது ஐந்து புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார்.

இத் திட்டத்தை முதன் முதலாகக் கொண்டுவந்தவர்கள் 1936ல் இந்திய சர்க்காரின் உதவி கோரினார்கள். அவர்கள் ஒப்புக்கொண்டனரெனினும் பொருளாதாரக் கமிஷனின் சிபாரிசையனுசரித்து ஸ்தாபிக்கப்பெறாத இத் தொழிலுக்கு உதவியளிப்பது இயலாதென்ற அபிப்பிராயத்திற்கு வந்தனர். இதுவுமல்லாமல் இத்தொழிலின் உற்பத்தியாவதில் ஓர் பாகத்தையாவது வாங்குகிறோமென்ற உறுதியையும் கொடுக்க மறுத்தார்கள்.

தற்பொழுதைய யுத்த நிலையை உத்தேசித்து பிரபல சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் செய்துள்ள பிரகடனங்களைக் கவனிக்கும்போது சர்க்கார் மறுபடியும் இதனைப்பற்றிச் சிந்திக்கக் கூடுமெனத் தெரிகிறது. தற்போதைய திட்டப்படி வருடம் ஒன்றுக்கு ஏறக்குறைய 11,000 கார்கள் செய்யலாமென்றும் தொழிற்சாலைக்கு சுமார் 2¼ கோடி ரூபாய் மூலதனம் தேவையிருக்குமென்றும் கணக்கிடப்பெற்றுள்ளது. தேவையேற்படும் பட்சத்தில் சொற்பக் கூடுதல் தொகையால் இதே மிஷின்களைக்கொண்டு 20,000 கார்கள்கூட செய்யக்கூடுமாம். வருடந்தோறும் கீழே குறிப்பிட்டுள்ளவாறு கார்கள் செய்யப்பெறலாமென்றும் சொல்லப்பெறுகிறது.

3000 நடுத்தர பவருள்ள கார்கள் ரூ. 3500 வீதம்.	105 லட்சம்
5000 டிரக்ஸ் ரூ 3000 வீதம்	150 லட்சம்
3000 குறைந்த பவருள்ள கார்கள் ரூ. 2000 வீதம்	60 லட்சம்
	315 லட்சம்

அமெரிக்காவில் 1400 ரூபாய் மதிப்புள்ள ஒரு கார் இந்தியாவில் ரூபாய் 3500க்கு விற்கப் படுகிறது. இந்த 2100 ரூபாய் வித்தியாசம் அமெரிக்காவில் உள்நாட்டில் வாடகை, கப்பல் வாடகை இன்ஷியூரன்ஸ், பம்பாயில் ஏற்றுமதி இறக்குமதிக் கூலி, சுங்க வரி, வியாபாரிகள் கமிஷன் ஆகியவைகளில் போகிறது. இந்தியாவிலேயே கார்கள் செய்யப்பட்டால் இவ்விதச் செலவுகளெல்லாம் ஏற்படாதல்லவா? இந்தியாவில் செய்யப்பெறும்பட்சத்தில் பெருஞ் செலவு ஏற்படக்கூடியது சில்லரைப் பாகங்கள் இறக்குமதி செய்வதில்தான். சர்க்கார் சலுகையிருந்தால் இதனையும் அதிகமில்லாமல் செய்யலாம். வியாபாரிகளின் கமிஷன் தவிர்க்கமுடியாத ஒன்றுதான். இவ்விரண்டுக்குமாக ரூபாய் 750 ஆகக்கூடும். இந்தியாவில் கார் செய்யப்படுவதால் ஏற்படும் லாபம் 2100–750–1350 ரூபாய். இந்தியத் தொழிற்சாலைகளில் அமெரிக்காவைப் போன்று சுருக்கமான விலையில்

செய்ய முடியாதென்றும், ஒரு காரின் பேரில் ரூ. 1350 லாபம் பெற இயலாதென்றும் ரூபாய் 500 அல்லது செய்துமுடிக்க கார் விலையில் 7ல் ஒரு பங்குதான் மீதமாகுமென்று கணக்கிட்டிருப்பதாயும் சொல்லப் பெறுகிறது. அதன்படியே பார்த்தாலும் 315 லட்சம் ரூபாயில் ஏழிலொரு பங்கு அதாவது ரூ. 45 லட்சம் நிச்சயமாய் லாபம் வரலாமென்றேற்படுகிறது. ஆகவே முடக்கிய மூலதனத்துக்கு நூற்றுக்கு 20 லாபமேற்படுகிறது.

1929 முதல் 1939 வரையுள்ள 10 வருடங்களில் சராசரி வருடம் ஒன்றுக்கு 3-6 கோடி ரூபா மதிப்புள்ள 20,000 கார்கள் இறக்குமதி செய்யப் பெற்றுள்ளன. நாளது தேதி வரை தேசத்தில் கார்களுக்கு அதிகமான கிராக்கி இருந்து வருகிறது என்பது கண்கூடு. தேசத்தில் இன்னும் கைத்தொழில்கள் விருத்தியடைந்து உள்நாட்டு வியாபாரங்கள் அதிகரித்தால் ஏராளமாக ரோட்டுகள் ஏற்பட்டு கார்களுக்கு இன்னும் கிராக்கி ஏற்படக் கூடுமென்பதில் சந்தேகமில்லை. தேசத்திலேயே மோட்டார்கள் தேவையிருந்து வருகிறதென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

'உற்பத்தி பொருள் தேசத்திலேயே அழிய வசதி யிருக்கிறதோடு மோட்டார் தொழிலுக்கு அவசியமான உருக்கு இரும்பு முதலிய மூலப் பொருள்களும் அறிவு பெற்ற தொழிலாளிகளும் ஏராளமாய்க் கிடைக்க இடமிருக்கிறது, இந்நிலையில் இம் முயற்சி வெற்றி பெறுமா வென்ற சந்தேகம் ஏற்படுவதற்கே யில்லை. ஜாம்ஷெட் டாடா, எஃகுத் தொழில் ஆரம்பிக்கும் காலத்தில் இவ்வித பயம் இருந்து தான் வந்ததென்பதை இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது. அத்தொழிற்சாலை இன்று பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள சிறந்த தொழிற்சாலைகளிலொன்றாய் விளங்குகிறது. அங்கு இதர தொழிற் சாலைகள் போன்றோ அல்லது அதிலும் குறைந்த விலையிலோ எஃகு தயாரிக்கப் பெற்றுவருகிறது.

உலகத்திலுள்ள எந்த மோட்டார் தொழிற்சாலையும் மற்றொன்றின் உதவியில்லாமல் நடக்க முடியாதென்பதை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. பிரபல போர்ட், ஜனரல் மோட்டார் ஆகிய இவைகள் கூட தங்களுக்குத் தேவையான மோட்டார் பாகங்களை இதர தொழிற் சாலைகளிலிருந்துதான் பெறுகின்றன. வருடம் ஒன்றுக்கு 6000 கார்கள் செய்யக் கூடிய ஸ்வீடனிலுள்ள வால்வோ கம்பெனியார் அவர்களுக்குத் தேவையான மோட்டார் பாகங்களுக்கு அத்தேசத்திலுள்ள இதர 100 கம்பெனிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். மோட்டாரில் 2000 சில்லரை பாகங்கள் இருக்கின்றன. அவைகள் பல இடங்களில் தயாரிக்கப் படுபவை என்பது பலருக்குத் தெரியாது. இந்தியாவும் பல முக்கிய பாகங்களைத் தயார் செய்து கொள்ளக் கூடுமென்றாலும் சில பாகங்கள் இதர நாடுகளிலிருந்து வரவழைக்க வேண்டியது தான். இதைக்கொண்டு தொழில் ஸ்தாபிப்பதற்குச் சந்தேகப்படுவதற்கில்லை. இந்த யுத்தகாலத்தில் அமெரிக்காவிலிருந்து மோட்டார் பாகங்கள் வரவழைப்பது சிரமமான காரியந்தான். இருந்தாலும்

சர்க்கார் அவர்களது நன்மையைக் கருதி ஏற்பாடு செய்யக்கூடிய ஒரு விஷயந்தானிது. அவ்விதமில்லையேல் இந்தியா நல்ல முறையில் இராணுவத்தைத் தயார் செய்துகொண்டு தருந்தபடி தன்னைக் காப்பாற்றிக் கொள்ளமுடியாது.

மேனாட்டு சர்க்கார்கள் அவரவர்கள் தேசங்களில் இத்தொழிலுக்கு ஆரம்பத்திலிருந்தே ஊக்கமும், ஆதரவுமளித்து வளர்த்து வருகிறார்கள். இத்தாலியில் இறக்குமதியாகும் கார்களுக்கெல்லாம் நூற்றுக்கு எண்பது வீதம் இறக்குமதி வரி விதிக்கப்படுகிறது. ராணுவத்துக்குத் தேவையான கார்களில் பெரும்பாலும் உள்நாட்டு தொழிற்சாலைகளிலிருந்தே பெறுகிறார்கள். உலகத்திலுள்ள உயர்தர கைத்தொழில் தேசங்களிலொன்றாகிய பிரான்சில் இறக்குமதியாகும் கார்களுக்கெல்லாம் நூற்றுக்கு நூறு வரிவிதிக்கப் பெறுகிறது.

1933 ஆம் வருடத்திலிருந்து ஜெர்மனியில் இறக்குமதியாகும் கார்களுக்கு நூற்றுக்கு எண்பது வரிவிதிக்கப் பெறுகிறது. ஜெர்மனியக் கார்களை உபயோகப் படுத்துவோர்கள் சாதகமடையக் கூடிய விதத்தில் வரி விதிக்கும் முறையை அமைத்துக் கொண்டுள்ளனர். கார் உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் செலவில் நாலிலொரு பங்கு ஜெர்மானிய சர்க்கார் உதவி வருகிறது. இவைகளும் இவை போன்றவைகளும் ஜெர்மன் தேசத்தில் கார் உற்பத்தித் தொழிலை அதிகரிக்கச் செய்துள்ளன. 1932ல் 50,000 கார்களை உற்பத்தி செய்து வந்த ஜெர்மனி 1938ல் 840,000 கார்களை உற்பத்தி செய்யும் தன்மைக்கு வந்துள்ளது. சாதாரண ஜனங்கள் உபயோகிக்கக் கூடிய ரூபா 800 மதிப்புள்ள "ஜனங்களின் கார்" உற்பத்தி செய்ய வேணுமென்றுதான் ஜெர்மனியின் நோக்கமிருந்து வந்தது. யுத்தகாலம் இல்லாமலிருந்தால் அவர்களது நோக்கமும் நிறைவேறியிருக்கக்கூடும்.

ருஷ்யா, 1929ல் கிட்டத் தட்ட 1000 கார்களை உற்பத்தி செய்து வந்தது. அதுவும் லாரிகளும், பஸ்களுமே யாகும். 1939ல் இது பல திறத்திலுள்ள 2,15,000 வண்டிகளாக உயர்ந்துள்ளன.

ஜப்பானிலும் இறக்குமதியாகும் கார்களுக்கு நூற்றுக்கு நூறு வரிவிதிக்கப் பெறுகிறது. 1931ல் 1000 கார்கள் உற்பத்தி செய்திருந்த ஜப்பான் 1938ல் 30,000 கார்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்தது. அமெரிக்க அரசாங்கம் போர்டு கம்பெனி வரவழைக்கும் மூலப் பொருள்களுக்கும் பாதி தயார் செய்யப் பெற்ற மோட்டார் சாமான்களுக்கும் வரியில்லாமல் செய்துள்ளது. ஆஸ்திரேலியா மோட்டார் தொழில் அபிவிருத்தியாகும் விதத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றியுள்ளது. இதன்படி இத்தொழிலுக்கு ஏராளமான பணம் அனுமதிக்கப் படுகிறது. ஆனால் யுத்தத்தை அனுசரித்து மோட்டார் தொழிலை விட்டு யுத்த தளவாட உற்பத்தியில் கவனம் செலுத்தி வருகிறது.

இந்தியாவில் இப்பொழுது எல்லாக் கார்களுக்கும் 37½ சதவிகித சுங்க வரி இருக்கும் போது பிரிட்டிஷ் கார்

களுக்கு சலுகை வரியாகிய 30 சத விகித மிருந்து வருகிறது. இந்திய சர்க்கார் செய்யக் கூடிய தென்னவென்றால் இந்த வரியை 50 சத விகிதமாக உயர்த்தி சுமார் 10 வருஷங்களுக்கேனும் அமுலில் வைக்க வேண்டும். ஆரம்பத்தில் தேவையான மோட்டார் பாகங்கள் வர வழைப்பவைகளுக்கு இறக்குமதி இல்லாமல் செய்ய வேண்டும். ஆரம்ப காலத்தில் இத் தொழிலுக்கு ஊக்கமளிப்பதற்காக ரயில்வேக் கட்டணங்களிலும் போதிய சலுகை காட்ட வேண்டும். இத் தொழிலிலிருந்து உற்பத்தி செய்யக் கூடியதற்குத் தோதாக சர்க்கார் இலாகாக்களிலும் ரயில்வேக்களிலும், ராணுவ இலாகாவிலும் கார்களை வாங்க ஏற்பாடு செய்ய மேணும்.

இத் தொழிலை ஸ்தாபிப்பதற்கு உகந்த தருணமிதுவே. உலகத்தில் பெருங் குழப்ப மேற்பட்டிருக்கிறது. இந்தியாவின் பொறுப்பும் இலேசானதல்ல. இந்தியாவில் நவீன முறையில் மோட்டார் தொழிற்சாலை யமைக்க வேண்டியது அத்தியாவசியமாகும். இந்திய ராணுவத்துக்கு ஆயிரக் கணக்கான கார்கள் தேவை யிருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கம் கீழ்த் தேசங்களைப் பாது காப்பதற்கு ஏறக்குறைய லட்சம் கார்கள் தேவைப் படுமென்று சொல்லுவது மிகையாகாது. மோட்டார் தொழிலை ஸ்தாபித்து தங்குதடையில்லாது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு உதவி யளிப்பதற்கு இந்தியாவிலுள்ள வசதி உலகத்தில் வேறெத் தேசத்திலும் கிடையாது. சர்க்கார் இது விஷயத்தில் போதிய கவனம் செலுத்துவார்களாகில் அவர்களும் பயன் பெற்று தேசமும் லாப மடையும்.

யவனர்களின் ஆக்ரமிப்பில், பௌத்தர்களென்றும் பிராமணர்களென்றும் பேதம் வைக்கப்பட மாட்டாது.

⁘ ⁘ ⁘ ⁘

பாஷையைச் சீர்திருத்துவதற்கு முன்னால், நான் மனிதனையே சீர்திருத்துவேன்.

—**சாணக்கியன்.**

"ஒரு காங்கிரஸ்வாதி"

வல்லபபாயி ஜவேர்பாயி படேல்

நாற்பத்தைந்தாவது
காங்கிரஸ் தலைவர்

"பனியினால் மூடப்பட்டிருக்கும் எரிமலை" என்று கூறினார் மௌலானா ஷௌகத் அலி ஒரு சமயம். யாரைப்பற்றி இந்த வார்த்தையைக் கூறினார் தெரியுமா? நமது தலைவர் படேல் உண்மையிலேயே ஒரு எரிமலைதான். அவருடைய முகத்தில் சாந்தம் குடிகொண்டிருக்கும். ஆனால் போராட்டத்தின் முன்னணியில் அவர் ஒரு எரிமலை போல் காட்சியளிப்பது அதிசயமாகவேயிருக்கும். ஒரு ராணுவ தளகர்த்தனுக்குரிய வீரத்தனம் அவருக்குள் பிரகாசித்துக்கொண்டிருப்பதை அவருடைய முக பாவனையிலிருந்து சீக்கிரம் தெரிந்துகொள்ள முடியாதுதான். நமது படேலுக்கு இந்த வீரம் பரம்பரைச் சொத்து.

1857ம் வருஷம் பாரத தேசத்தின் சரித்திரப் பிரசித்திபெற்ற வருஷம். இந்த வருஷத்தில் வீரன் ஜவேர்பாயை மூன்று நாளாகத் தேடுகிறார்கள். திடீரென்று ஜவேர் எங்குச் சென்று விட்டார் என்பது யாவருக்கும் கவலை. ஆனால், ஜவேர், ஜான்ஸி வாலி ராணிலட்சுமிபாயின் சேனையில் தானும் ஒரு போர்வீரனாகச் சேர்ந்திருந்தார் என்பது பின்னாலே தான் யாவருக்கும் தெரியவந்தது. அந்த ஜவேர்பாயி, நமது வல்லபபாய் படேலின் தந்தையாவர். நமது படேலிடம் துலங்கும் வீரம், அவருடைய பரம்பரைச் சொத்து என்பது இப்போது தெளிவாகிறதல்லவா?

"விவசாயிகள் துக்கப்பட்டார்களேயானால். நமது படேலின் ரத்தம் கொதிக்க ஆரம்பித்துவிடும்" என்று காகாகலேல்கார் கூறுவது வழக்கம். குஜராத் விவசாயிகளுக்கு இவர் செய்த சேவை அனந்தம். இதனாலே இவருக்கு சர்தார் என்ற பட்டம் கிடைத்தது. சேவைக்குத் தகுந்த பட்டம்.

படேல் எந்த வருஷம் எந்த மாதம் எந்த தேதியில் பிறந்தார் என்ற விபரம் சரியாகத் தெரியவில்லை. இளமையில் இவர் மிகவும் "சுட்டி"யா யிருந்தார். அதுவும் பள்ளிக்கூடத்தில் படிக்குங்காலத்தில் இவருக்கும் உபாத்தியாயர்களுக்கும் கொஞ்சங்கூடப்

பிடிப்பதில்லை. இவர் பத்தாவது வகுப்பில் வாசித்துக்கொண்டிருக்கும்போது ஒரு சம்பவம் நடந்தது. சமஸ்கிருதத்தை யெடுக்காமல், தன்னுடைய குஜராத்பாஷையைப் பாடமாக இவர் எடுத்துக்கொண்டார். அந்த வகுப்பில் குஜராத் பாஷைக்கு உபாத்தியாயராயிருந்தவர் சோடாலால் என்பவர். சமஸ்கிருதத்தில் அளவற்ற காதல் உள்ளவர் இவர். இதனால் படேலின் மீது இவருக்கு அருவருப்பேற்பட்டது. படேல் வகுப்புக்குச் சென்றபோது இந்த குஜராத உபாத்தியாயர் படேலைப் பார்த்து, "என்ன பெரிய மனிதரே, சமஸ்கிருதத்தை விட்டுவிட்டு குஜராத்தை யெடுத்துக்கொண்டாரோ? சமஸ்கிருதமில்லாத வெறும் குஜராத் அழகு கொடுக்காதே" எனக் கூறினார். இதற்கு நமது படேல், மிகவும் சாந்தமாக, ஆனால் உறுதியோடு என்ன சொன்னார் தெரியுமா? "சார், எல்லா மாணவர்களும் குஜராத்தைவிட்டுவிட்டு சமஸ்கிருதத்தை யெடுத்துக்கொண்டால், நீங்கள் யாருக்குச் சொல்லிக்கொடுப்பீர்கள்? உங்களுக்கு வேலையேயிராதே" என்று கூறினார். இந்தக் குற்றத்திற்காகப் படேல் பெஞ்சின்மீது நிறுத்தப்பட்டார். படேலுடைய குடும்பம் பெரியபணக்காரக் குடும்பம் என்று சொல்லமுடியாது. படேலுக்கும் பட்டப் படிப்பு படிக்கவேண்டுமென்ற ஆசையில்லாதிருந்தாலும், தான் ஒரு பாரிஸ்டராக வேண்டுமென்ற ஆசைமட்டும் இவருக்கு நிறைய இருந்தது. இவர் படிப்பை முடித்துக் கொண்டு கோத்ரா என்ற நகரில் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். தன்னுடையசலியாதஉழைப்பினாலும், கூர்மையான புத்தியாலும் இவருக்கு நல்லசெல்வாக்குஏற்பட்டது. கோர்ட்டிலே இவர் நின்று பேச ஆரம்பித்து விட்டாரேயானால், ஜட்ஜுகளுங்கூட திணறிப்போவார்களாம். அநேகமாக கிரிமினல் கேஸ்களிலேதான் படேலுக்குப் பிரியம் அதிகம்.

ஒருசமயம் இவருடைய மனைவியார் நோய்வாய்ப் பட்டிருந்தார். ஆபரேஷன் செய்ய வேண்டியகேஸ் இது. ஆபரேஷனுக்காக தன்னுடைய மனைவியை இவர் பம்பாயில் சேர்ப்பித்து விட்டு வந்தார். தினந்தோறும், தன்னுடைய மனைவி குணமாகி வருகிறார் என்ற லெட்டர் இவருக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது. ஒருநாள் இவர், கோர்ட்டில் ஒரு கேசைப் பற்றி ஜட்ஜுக்கு முன்னே வாதாடிக்கொண் டிருக்கிறார். அந்த நேரத்தில் இவருக்கு ஒரு தந்தி கிடைத்தது. சாவதானமாகப் படித்தார். பக்கத்தில் வைத்துவிட்டு கேசைத் தொடர்ந்து நடத்தினார். கேஸ் முடிந்தது. அந்தத் தந்தியைப் பற்றிய சமாச்சாரத்தைத் தன் நண்பர்களுக்குத் தெரிவித்தார். தந்தி விஷயம் என்ன தெரியுமா? பம்பாயில் நோயாயிருந்த அவர் மனைவி இறந்து விட்ட செய்தி அது! ஆம், கருமத்தில் கண்ணுயிருப்பவர் நமது படேல். இவருடைய கலங்காத மனோதிடத்திற்கு வேறு உதாரணமா வேண்டும்!

கையிலே கொஞ்சம் பொருள் சேர்ந்து விட்டது. பாரிஸ்டர் ஆக வேண்டுமென்ற எண்ணம் இவரைப் பின்னிக் கொண்டிருப்பதல்லவா! ஒரு கம்பெனியின் மூலமாக கரெஸ்பான்டென்ஸ்கள் செய்து முடித்துக் கொண்டு தன்னுடைய தமையனாரின்

அனுமதியோடு இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார். அங்கே படிப்புக்காகத் தன் முழு நேரத்தையும் செலவு செய்தார். இங்கிலாந்தில் இவர் வசித்துக் கொண்டிருந்த இடத்திற்கு 11மைல் தூரத்திலுள்ள லைப்ரரிக்கு இவர் அதி காலையிலேயே போய்விடுவது வழக்கம். பொழுது போவதே இவருக்குத் தெரியாது. லைப்ரரி வேலைக்காரன்வந்து, "ஐயா, நேரமாகி விட்டது, கதவைச் சாத்த வேண்டும்" என்று சொல்லித் தூண்டும் வரை இவர் படிப்பிலேயே ஆழ்ந்திருப்பார். பாரிஸ்டர் பரீட்சையில், முதலாவது வகுப்பில், அதுவும் முதலாவது மாணவராகத் தேறினர். பரீட்சை முடிந்த மறுநாளே இவர் தாய் நாட்டுக்குத் திரும்ப பயணப்பட்டு விட்டார்.

பாரிஸ்டர் படேல் ஆமதாபாத்தை வாசஸ்தலமாகக் கொண்டு தொழிலை ஆரம்பித்தார். பொருளை நிறையச் சம்பாதித்தார் என்று மட்டும் கூறினல் போதுமா? பாரிஸ்டர் படேல் பொருளை இரண்டு கைகளினாலும் வாரிக் குவித்தார் என்று சொல்வது தான் சாலப் பொருந்தும். இந்த நிலையிலிருந்த பாரிஸ்டர் படேல், இன்று சர்தார் படேல் ஆனது அதிசயமான மாற்றந்தான்!

"என்ன காந்தி, இந்த ஜனங்களுக்கு முன்னே பிரம்மச்சர்யத்தைப் பற்றி உபதேசம் செய்கிறீர்! எருமைக்கு முன்னே உபதேசம் செய்கிறமாதிரி யல்லவா இருக்கிறது" என்று ஒருகாலத்தில் படேல் காந்திஜியைப் பற்றியும் அவருடைய வேலையைப் பற்றியும் கேலிசெய்து கொண்டிருந்தார்.

"நம்முடைய தேச ஜனங்கள், சுதந்திரமா யிருப்பதற் கில்லை; அடிமையா யிப்பதற்கே லாயக்கானவர்கள்" என்று இவர் அடிக்கடி கூறுவதுண்டு. அது ஒருகாலம். ஆனால் மகாத்மா காந்தியடிகளுடைய இயக்கும் சக்தியானது பாரிஸ்டர் படேலையும் மாற்றுவதற்கு அதிகக் காலமாகவில்லை. இவருடைய வாழ்க்கை அடியோடு மாறியது. காந்திஜி ஒத்துழையா இயக்கம் ஆரம்பித்த வுடன் தன்னுடைய பாரிஸ்டர் தொழிலையும் தியாகம் செய்து விட்டார். ஆனால் தன்னுடைய, மகனையும் மகளையும் மேனாட்டுக்கு அனுப்பிப் படிக்க வைக்க வேண்டுமென்ற ஆசை இவருக் கிருந்தது. அதுவும் நிறைவேறவில்லை. மாணவர்கள் பள்ளிக் கூடங்களைப் பகிஷ்கரிக்க வேண்டு மென்ற இயக்கத்தால் தன்னுடைய மக்களுடைய படிப்பையும் நிறுத்திவிடச் செய்தார். குஜராத் வித்யா பீடம் இவருடைய தளராத முயற்சியால் ஸ்தாபிககப் பட்டது. அந்த ஸ்தாபனத்திற்காக பத்துலட்சம் ரூபாய் வரை இவர் வசூல் செய்தார்.

படேல் பெரிய பேச்சாளி யென்ற பெயர் பெற்றவரில்லை ஆனால் அவருடையவாயிலிருந்துவரும்வார்த்தைகள் உயிருள்ளவைகளா யிருக்கும். அலங்காரமான பாஷையா யிராது. ஆனால் அர்த்தம்பொதிந்திருக்கும். சாதாரண ஜனங்களை அவருடைய சொற்கள் அப்படியே ஆகர்ஷித்துக் கொள்ளக் கூடியவை. ஒரு பெரிய புயலைக் கிளப்பிவிடக் கூடிய சக்தி அவருடைய வார்த்தைகளுக்குண்டு. 1923ம் வருஷத்தில், நாகபுரியில் கொடிப் போராட்டம் நடைபெற்ற தல்லவா?

அந்த மாகாணத் தலைவர்கள் யாவரும் கைதியாகி விட்டார்கள். படேல் நாகபுரிக்குச் சென்று தலைமைவகித்துப் போராட்டத்தை நடத்தி பத்துப் பதினைந்து தினங்களில் வெற்றியை நிலை நாட்டிவிட்டு குஜராத்துக்குத் திரும்பினார். 1925ம் வருஷம், ஆமதாபாத் முனிசிபாலிடியைக் கைப்பற்ற வேண்டுமென்ற முயற்சியில் காங்கிரஸ்காரர்கள் இவருடைய தலைமையில் தேர்தலில் கலந்து கொண்டு வெற்றி பெற்றார்கள். படேல் முனிசிபல் சேர்மனாகத் தெரிந்தெடுக்கப் பட்டார்.

1928ம் வருஷம் பிப்ரவரி மாதம் 12ந் தேதி பர்டோலி சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப் பட்டது. குஜராத் விவசாயிகளுடைய தியாகமும், வீரமும் பிரதி பலித்தது இந்தப் போராட்டத்தில்தான். நமது படேல் "சர்தார் படேல்" ஆனதும் இந்தப் போராட்டத்தில் தான். கடைசியாக 1923ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 6ந் தேதி சர்காருக்கும் இவர்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. 1930ம வருஷம் சத்தியாக்கிரகப் போராட்டத்தின போது இவர் இருமுறை ஜெயில் வாசம் அனுபவித்தார்.

1931ம் வருஷம் மார்ச் மாதம் கடைசியில் காரச்சியிலே காங்கிரஸ் மகாசபை கூடியது. இந்தக் கூட்டம் இந்திய தேசத்தின் சரித்திரத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற தென்பது வெளிப்படை. இதற்குச் சில தினங்களுக்கு முன்னே தான் "காந்தி—இர்வின் ஒப்பந்தம்" ஏற்பட்டதல்லவா? இன்னும் அநேக நிலைமைகள் தேசத்தை முன்னுக்கும் பின்னுக்கும் தள்ளிக்கொண்டிருந்தன. சோதனையான காலம். காங்கிரஸ் மகாசபைக்குக் தலைமை தாங்கி நடத்திச் செல்வதற்கு உறுதியான திறமை வேண்டும். அந்த உறுதியும் திறமையும் ஒருங்கே அமையப் பெற்ற சர்தார் படேல் அந்த காங்கிரசுக்கு தலைவரானார். தலைமை ஸ்தானத்தை அலங்கரித்து இவர் நிகழ்த்திய சொற்பொழிவு மிகவும் சுருக்கமானது. அதில் அவருடைய மாகாணப்பற்றும், தேச சுதந்திரத்தில் அவருக் கிருக்கும் அடங்காத ஆவலும் பிரகாசித்தன.

சர்தார் படேலுக்கு, சட்ட சபைகளைக் கைப்பற்றுதல், அங்கிருந்து போராடுதல் முதலிய வேலைகள் பிடிப்பதே யில்லை. ஆனால் காங்கிரஸ் ஆணையிட்டு விட்டதே யானால் சிரமேற் கொண்டு நடத்துவதில் ஒரு போர் வீரன் மாதிரி. இதனாலேயே என்னவோ இவருக்கு பார்லிமெண்டரி போர்ட் தலைமைப் பதவி கிடைத்தது போலும்! 1940ம் வருஷம் நவம்பர் மாதம் 17ந் தேதி கைதுசெய்யப் பட்டு இப்போது ஜெயிலிலிருக்கிறார்.

சிறு கதை

——"தேசிகன்"

களையெடுப்பு

"அடே ராமு! தொடர்ந்து வாடா. இந்தமாதிரி நீ பின்னாலேயே போனா, நாம நிறையை எப்படிடா கொண்டுபோய்விடுறது?"

மீனாட்சிக்கு வயது சரியாக இருபத்தேழுதான். ஆனால், முன் பின் தெரியாதவர்கள் பார்த்தால் அவளுக்கு ஐம்பது வயது மதிக்கிறார்கள். இருபத்தேழு வயதுடைய பெண் ஐம்பது வயதுத் தோற்றமாகத் தெரிவதென்றால் ஆச்சரியமல்லவா? ஆனால், அவள் விவசாயப் பெண் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அவளுடைய கன்னங்கள் குழி விழுந்திருக்கின்றன. நெற்றியிலும் முகத்திலுங்கூட சுருங்கல்கள். மீனாட்சி ஒரு ஹிந்துப் பெண்தான். ஆனால் அவளுடைய நெற்றியிலே குங்குமத்தைக் காணோம். கிராமாந்தரத்துப் பெண்கள் நிறைய நிறைய முகத்துக்கு மஞ்சள் பூசிக் குளிப்பது வழக்கம். அதுவும் விவாகமாகிய பெண்கள் மஞ்சள் இல்லாமல் ஸ்நானம் செய்யவேமாட்டார்கள். மஞ்சள் முகத்திலே நன்றாகப் படியவேண்டுமென்பதற்காக, அரைத்த மஞ்சளோடு விளக்கெண்ணெயைச் சேர்த்துக்கொள்வார்கள்; அல்லது கொட்டைமுத்தை வைத்துச் சேர்த்து அரைத்துக்கொள்வார்கள். நிறைய நிறைய மஞ்சளைப் பூசிக் குளித்து வீட்டுக்கு வந்த அந்தக் கிராமாந்தரப் பெண்கள், உடைந்து போன கண்ணாடியிலே தங்களுடைய முகத்தைப் பார்த்துப் பார்த்து அப்படியே பூரித்துப்போவார்கள். ஏன்? தாங்கள் மாங்கல்யதாரிகளாயிருப்பதாலுண்டான ஒரு கரைகடந்த ஆனந்தம்! மீனாட்சியினுடைய முகத்தில் மஞ்சளைக் காணோம். அவள் உடுத்தியிருப்பது பதினெட்டு முழச் சேலையென்று நினைக்கிறீர்களா? இல்லை. பன்னிரண்டு முழக் "கண்டாங்கித்" துணி. அதிலும் ஏகப்பட்ட தையல். ராமு மீனாட்சியினுடைய மகன். ஒரே பிள்ளைதான் அவளுக்கு. பருத்திப் புன்செயில் களையெடுக்கிறார்கள். அப்போது காலை பத்து மணியிருக்கும். கார்த்திகை மாதம். அந்த மாதமும் பூர்த்தியாகிற காலம்.

"பருத்திக்குப் பத்து உழவு" என்பார்கள் அந்தப் பக்கத்து விவசாயிகள். அந்தமாதிரி தெள்ளுபுழுதியாக உழுதால்தான் பருத்தி நன்றாகப் பலன் கட்டுமாம். பருத்தி விதைக்கிற புன்செயாயிருந்தால் அதை சித்திரை மாதம் முதல் பதம் பார்த்து உழுவார்கள். "சித்திரை மாசத்து உழவு பத்தரை மாற்றுத் தங்கம்" என்று விவசாயிகள், அதுவும் வாலிபர்களுங்கூட அடிக்கடி சொல்லிக் கொள்வார்கள். பௌர்ணமிக்குப் பத்து நாள் கழித்து, அமாவாசைக்கு முன்னே இந்நாட்களில் பருத்தி விதைக்கப் போகும் புன்செயைக் கட்டாயம் உழாமலிருக்க மாட்டார்கள். ஏனென்றால், அந்த நிலத்தில் உள்ள இராபூண்டுகளின் கிழங்குகளை இந்தக் காலத்தில் உழுது புரட்டிவிட்டு அவை சூரிய வெப்பத்தில் காய்ந்துபோனால் திரும்ப முளை விடக் கூடிய சக்தி

அடியோடுபோய் அந்தக் கிழங்குகள் "மச்சு"ப் போகுமாம்.

ஐப்பசி மாதத்தில், அந்தப் பகுதியிலே பருத்தி விதைப்பது வழக்கம். அதுவும் அந்த மாதம் ஏழு தேதிக்குப் பிறகு தான் விதைக்க ஆரம்பிப்பார்கள். அநேகமாக ஈர விதைப்பாகத்தானிருக்கும். புரட்டாசி மாதத்தில் பெரும்பாலும் பருத்தி விதைக்க மாட்டார்கள் "முன்னேழு பின்னேழு" என்று ஒரு கணக்குச் சொல்லுகிறார்கள். அதாவது புரட்டாசி மாதம் ஏழு தேதிக்குப் பின்னும், ஐப்பசி மாதம் ஏழு தேதிக்கு முன்னும் பருத்தி விதைக்கப் படுமானால் நல்லபலன் தாராதாம். பலன் பிடித்தாலும் காய்கள் பிஞ்சாயிருக்கிற போதே உதிர்ந்துபோகுமாம்; அல்லது காய்களில் ஒருவித வண்டுகள் உள்ளுக்குள்ளேயே குடியேறி பிரயோஜனமில்லாமலாக்கிவிடுமாம். இந்த முறைகளெல்லாம் விவசாயிகளுடைய அனுபவச் சொத்து. பாவம், படியாத அந்த விவசாயிகள் எவ்வளவு அனுபவ ஞானமுடையவர்களாயிருக்கிறார்கள்!

முத்துலிங்காபுரத்துக்கும் மதுரைக்கும் சரியாக முப்பத்தாறு மைல். ரோட்டுப்பாதை. ஆனால் இப்போது அந்த ரோட்டில் வண்டிகள் ஜாஸ்தியாகப் போவதில்லை. செல்லக் கண்ணுப்பிள்ளை அந்த முத்துலிங்கா புரத்துப் பிரபலஸ்தர்களில் ஒருவர். நல்ல வேதாந்தி. சுமார் நூற்றைம்பது வீடுகளையுடைய அந்த ஊரிலிருக்கும் பத்துக் காரைக் கட்டு வீடுகளில் செல்லக் கண்ணுப் பிள்ளையினுடைய வீடு கொஞ்சம் தூக்காகத் தெரியும். அவருக்குப் பத்து ஏக்கர் நிலம் ஆஸ்தியுண்டு. அந்த நிலங்களை வைத்துக் கொண்டு கடன் உடனில்லாமல் காலத்தைக் கழித்து வந்தார். நல்ல மரியாதையான ஜீவனம். அந்த ஊரில் "பெரிய சமுசாரி" என்று இவரை அழைப்பார்கள். தமிழ்ப்பாஷை மட்டுந்தான் இவருக்குத் தெரியும். தன்னுடையமகன் பரமசிவத்தை இங்கிலீஷ் படிக்கவைக்க வேண்டுமென்பது இவருக்கு அடங்காத ஆவல். "உத்தியோகம் புருஷ லட்சணம், என்னுடைய மகனை நன்றாகப் படிக்கவைத்து அவன் பெரிய உத்தியோகத்திலிருக்க அதை என் கண்ணால் பார்த்துவிட வேண்டும்" என்று அடிக்கடி சொல்லிக் கொள்வார். ஆனால் அந்த ஊரில் இருப்பது தமிழ்ப்பள்ளிக்கூடந்தான். பரமசிவன் மதுரைக்குப் படிப்புக்காக அனுப்பப் பட்டான். தன்னுடைய ஒரே மகன் பரமசிவத்தை நல்ல நிலைமையில் வைத்துப் பார்க்க வேண்டுமென்ற ஆசையுடைய செல்லக் கண்ணுப்பிள்ளை, படிப்புக்காக எவ்வளவு செலவாகும் என்பதைப் புள்ளி போட்டுப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? மதுரைக்கனுப்பிய பத்தாவது வருஷத்தில் பரமசிவம், பி. ஏ. பாஸ் செய்துவிட்டான். எந்த வகுப்புகளிலுமே இவன் தேறுதிருந்தது கிடையாது. தன்னுடைய மகன் இப்படி படிப்பில் வெற்றிமேல் வெற்றியடைந்து வருவதைக்கேட்டு உள்ளுக்குள்ளேயே பூரித்துப்போவார் செல்லக் கண்ணுப்பிள்ளை. அவன் கஷ்டப்பட்டு உருப்போட்டுப் படித்து பாஸ் செய்தானுங்கூட, தன்னுடைய மகன் மிகவும் அதிருஷ்டசாலியென்று சொல்வதிலே நிரம்பவும் பெருமையடைவார். ஆனால் பாவம், பி. ஏ. பாஸ் செய்துவிட்டான் தன்

னுடைய மகன் என்ற நல்ல செய்தியைக் கேள்வியுறும் பாக்கியத்தை அவர் செய்யவில்லை போலும்! பரமசிவன் பி. ஏ. தேறிவிட்டான். தன்னுடைய சந்தோஷத்தை அதற்கு முதல் வருஷத்திலேதான் தனக்கு வாழ்க்கைத்துணைவியாயமைந்த தன்னுடைய இளம்மனைவி மீனாட்சியிடம் இதைச் சொல்லிக் கொள்ள முடிந்தது. தன்னுடைய படிப்புக்காக பிதுரார்ஜித சொத்தாயிருந்ததில் ஏழு ஏக்கர் நிலம் தங்களுடைய கையை விட்டுப்போய் விட்டதைப் பற்றிக்கூட அவன் கவலைப்படவில்லை. தன்னுடைய தந்தையின் பிரிவுதான் அவனை மிகவும் கவலைக்குள்ளாக்கியது. சொத்து எப்பொழுதும் சம்பாதித்துக் கொள்ளலாம். மனிதர்கள் கிடைக்க மாட்டார்களல்லவா?

ஆங்கிலம் படித்த எல்லா மாணவர்களையும்போல் பரமசிவனும் உத்தியோகம் தேட முற்பட்டான். மனுக்கள் போடாத இடமில்லை உத்தியோகம் கிடைத்தால்தானே! நான்கு வருஷங்களை இப்படிக் கழித்தான். தன்னுடைய புருஷன் இப்படி, உத்தியோகம் கிடைக்காது தவிப்பதைப் பார்த்து அதே கவலையில் மீனாட்சியும் நாளுக்கு நாள் இளைத்துப் போனாள்.

தை மாதம் முதல் தேதி. சங்கராந்தி விசேஷ தினம். இந்த நன்னாளில் அந்த ஜமீன் கிராமத்து விவசாயிகள். எலும்புந் தோலுமாயிருக்கும் தங்களுடைய மாடுகளைத் தேய்த்துக் குளிப்பாட்டுகிறார்கள். அவைகளுக்குப் பொட்டிட்டு, கொம்புகளுக்குக் காவிபூசி அலங்கரிக்கிறார்கள். அந்தச் சமயத்தில் மீனாட்சிக்கு தபாற்காரன் ஒரு லெட்டரைக் கொடுத்தான்.

மீனாட்சி அந்த லெட்டரைப் படிக்கச் சொல்லிக் கேட்டாள். "அன்புள்ள மீனாட்சி! நான் உன்னை விட்டுப் பிரிந்து இன்று பத்து நாட்களாகின்றன. கடைசி முறையாக இந்த லெட்டர் மூலம் உன்னைச் சந்தித்துவிட வேண்டுமென்று என் மனம் நினைத்தது. அதனாலேயே இதை எழுதுகிறேன். நான் என்னைப்பற்றி அதிகமாகக் கவலைப்படவில்லை. ஆனால் உன்னைப்பற்றியே நான் கவலைகொண்டேன். என் விசாரத்தால் நீ மிகவும் மெலிந்து விட்டாய். இந்த உலகம் என்னை ஏமாற்றி விட்டது. நான் படித்த படிப்பு எனக்கு உதவி செய்யும் என்று நம்பினேன். ஆனால், மீனாட்சி, நீ என்னை விட்டுப் பிரிவதற்குள் விடை பெற்றுக் கொள்ளுகிறேன். நம்முடைய ராமுவை நீ அறிவாளியாக்க வேண்டாம்; ஆனால் அவனை ஒரு மனிதனாக ஆக்கு. அது என்னால் முடியாது. உன்னால் முடியும்."

இந்த வார்த்தைகள் மீனாட்சியினுடைய காதுகளில் விழுந்துகொண்டிருக்கின்றன. அவளுடைய கண்கள் நீரை தாரை தாரையாகக் கொட்டிக்கொண்டிருக்கின்றன. ஜனங்கள் கூடிவிட்டார்கள். மறுநாள் பகல் ஒன்பது மணிக்கு செம்பராங்கரை போலீஸ் ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டர் மாட்டு வண்டியில் வந்து காட்சியளித்தார். கூட இரண்டு மூன்று போலீஸ்காரர். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பரமசிவத்தினுடைய பிணத்தின் மடியிலிருந்த லெட்டரிலிருந்து தெரிந்து வந்திருக்கிறார்கள் அவர்கள். விசாரணைகள் நடந்து ஒருவாறாக முடிந்தன. பாவம், பிணத்தைக்கூட மீனாட்சி தன்னுடைய கண்களால் பார்க்கவில்லை.

இந்தச்சம்பவங்கள் நடந்து இப்போது ஐந்து வருஷங்கள் முடிந்துவிட்டன. ராமுவுக்கு எட்டு வயது பூர்த்தியாகிறது. அந்தப்பிரபலமாயிருந்த குடும்பத்தில் இப்போது மீனாட்சியும் ராமுவுந்தான் உலவிக்கொண்டிருக்கிறார்கள். ராமுவைப் படிக்கவைக்க வேண்டுமென்பதில் மீனாட்சிக்கு அளவு கடந்த ஆசை. இதனால் அவனுக்கு ஐந்து வயது நடக்கும்போதே பள்ளிக்கு வைத்தாள். ஆனால் அந்தச்சிறிய குடும்பப் பொறுப்பை அவளுடைய தனித்தோள்களால் தாங்க முடியவில்லை. கூலிவேலை செய்து ஜீவனம் நடைபெற வேண்டும். இதோடு மீதமிருக்கும் நிலத்தை விவசாயம் செய்து ஜமீன்தாருக்கு வாரம் வரிக்கட்ட வேண்டும்! என்ன செய்வாள் பாவம்! கிராமங்களில் கூலிவேலையென்றால் எல்லாக் காலங்களிலும் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைக்கும் காலத்தில் நாளொன்றுக்குக் கூலியென்ன தெரியுமா? ஆறு காலணா. இதைக்கொண்டு இரண்டுபேர் வயிறுவளர்க்க முடியுமா? ராமுவும் மீனாட்சியும் களையெடுத்தால் கூலி மூன்றணா கிடைக்கும்.

கிராமங்களிலே இந்த ஒரு மீனாட்சியும் ராமுவுந்தான் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? இல்லவே இல்லை. அநேகமாக கிராமங்கள்தோறும் எத்தனையோ மீனாட்சிகளையும் ராமுக்களையும் நீங்கள் பார்க்கலாம். ராமுவும் மீனாட்சியும் அரிசிச் சாதம் சாப்பிடுவது அமாவாசைக்கு ஒருமுறைதான். அன்று விரததினமல்லவா! கேப்பைதான் அவர்களுடைய முக்கிய தினசரி ஆகாரம். அதையுங்கூட மாவாக்கி களிக்கிண்டிச் சாப்பிடுவதில்லை. களிக் கிண்டுவதானால் அதற்கு மாவு ஜாஸ்தி செல்லும். கூழாகத்தான் ஆக்கிக்கொள்வது வழக்கம். குளத்திலிருக்கும் தண்ணீருக்கும், அந்தக் கூழுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டென்பதை நீங்கள் அறிவீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அந்த ஏழைகளுடைய வயிறு நிறைவதற்கு இந்தத் தண்ணீர் மிகுந்த உதவி செய்கிறது! பாவம், அவர்களுடைய ஆனந்தமான உயிர் அவர்களுடைய உடலில் தரித்திருப்பதற்கு இதைவிட வேறு என்ன உபாயத்தைத்தான் அவர்கள் கையாளமுடியும்? தாங்களும் தலைவர்களாகவேண்டுமென்ற ஆசையில சில பேர், கிராமங்களில் "கட்டாயக் கல்வி முறையை" அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று பேச நான் கேட்டிருக்கின்றேன். கிராமவாசிகள் ஒவ்வொருவருடைய வீட்டிலும் அட்சயபாத்திரமிருப்பதாகக் கனவு காண்கிறார்களா என்ன இவர்கள்?

வைகாசி மாதம். காலை ஒன்பது மணியிருக்கும். ஜமீன் உத்தியோகஸ்தர் ஒருவர், சேவகன், அந்த ஊர் கணக்குப்பிள்ளை, அம்பலகாரர், தலையாரி இத்தனைபேரும் முத்துலிங்காபுரம் மீனாட்சியினுடைய வீட்டு வாசலில் வந்து நிற்கிறார்கள். எதற்காக? வரி வசூலுக்கு. இதற்கு முந்திய வருஷத்தில மீனாட்சி தன்னுடைய மூன்று ஏக்கர் நன்செய் நிலத்திலும் கேப்பை சாகுபடி செய்திருந்தார்கள். கார்த்திகை மாதம் பெய்த அடைமழையினால் கேப்பை குணமில்லை. மொத்தம் மூன்று ஏக்கர் நிலத்திலும் நாலுகலக் கேப்பைதான் வந்தது.

அதற்காகச் செலவுசெய்த விவசாயச் செலவுக்கே அது காணவில்லை. அந்த மூன்றுஏக்கர் நிலத்திற்கும் சராசரிவரி ஏக்கர் ஒன்றுக்கு பதினெட்டு ரூபாய் வீதம் ஐம்பத்து நான்கு ரூபாய். இது தவிர, ரோட்டு வரி, ரெயில் வரி, கல்வி வரி எல்லாமாகச் சேர்ந்து அறுபது ரூபாய்க்குக் கொஞ்சம் குறைவு. மீனாட்சி தன்னுடைய கதையையெல்லாம் சொன்னாள். ஆனால் பாக்கியை மட்டும் இல்லையென்று சொல்லவில்லை. உத்தியோகஸ்தர்கள் என்ன செய்வார்கள்? கடமையைச் செய்யவேண்டியவர்கள் அவர்கள். சட்டம் அவர்களுக்கு வழி காட்டுகிறது. அதுவோ உறுதியான சட்டம்.

“பாக்கி போடாத” விவசாயிகளுடைய வீட்டுக் கதவைப் பிடுங்குவது ஜமீன் உத்தியோகஸ்தர்கள் அனுஷ்டிக்கும் முறை. கதவைப் பிடுங்குவதை விவசாயிகள் தங்களுடைய மரியாதையைப் பிடுங்குவதாக நினைப்பார்கள் என்பதை அவர்கள் நன்றாகத் தெரிந்துகொண்டிருப்பவர்கள். தலையாரி மீனாட்சியினுடைய தலைவாசல் கதவைப் பிடுங்க ஆரம்பித்தான். பக்கத்திலிருக்கும் மேலதிகாரி உத்திரவு செய்கிறார். தலையாரி நிறைவேற்ற வேண்டியவன்தானே.

“ஐயா, எஜமான்களே, என்னிடத்திலே இப்போது ஒரு பைசாகூட இல்லை. என்னுடைய வீட்டுக்கதவைப் பிடுங்காதீர்கள். அதற்கு என்னுடைய உயிரைப் பிடுங்கிவிடுங்கள் என்று சொல்லிக்கொண்டே உள்ளே ஓடிய மீனாட்சி திரும்பவந்து, இதோ இருக்கிறது. இதுதான் என்னிடமிருக்கும் ஆஸ்தி. அரைப் பவுன் தாலியிது. இதைத் தவிர என்னிடத்தில் வேறே எந்தச் சொத்துமில்லை எஜமான்களே” என்று கையை நீட்டிக் கெஞ்சிக் கெஞ்சிச் சொன்னாள். உத்தியோகஸ்தர்களுக்கும் மனம் கசியத்தான் செய்தது. அவர்களால் என்ன செய்ய முடியும்? பிடுங்கிய கதவு தெருவுக்குப் போய்விட்டது.

மறுநாள் அதிகாலை. முத்துலிங்கபுரத்துக்கு தெற்கே ஒரு பர்லாங்குத் தூரத்தில் ஒரு ஆறு ஓடுகிறது. மீனாட்சி தன்னுடைய சேலையை வரிந்து இடுப்பிலே கட்டிக்கொண்டாள். தன்னுடைய ஒரேமகன், ஆம், அவளுடைய குல விளக்கு ராமுவைத் தூக்கி தோளிலே வைத்தாள். ஆற்றில் இறங்கிவிட்டாள்.

“மீனாட்சி! ஏ மீனாட்சி! என்ன காரியம் செய்கிறாய்? உன்னுடைய காய்ந்துபோன இதயம் சூன்யமாகிவிட்டதா? குல மரியாதை யென்ற அம்பானது, தரித்திரம் நிறைந்த உன் இதயத்தைத் துளைத்து விட்டதா? இல்லை. வேண்டாம். ராமுவையுங்கூடவா உன்னோடுசேர்த்துக்கொள்ளுகிறாய்? அவன் உன்னுடைய குல விளக்கல்லவா? இல்லை. அவனைப் பிரிந்து உன்னாலிருக்க முடியாது. அவன் கஷ்டப்படுவானே என்று நினைக்கவே உன்னால் முடியாது. இது நல்லதுதான். நல்ல யோசனைதான் உன்னுடையது. உன்னுடைய துக்கக் கண்ணீர் இந்த ஆற்று ஜலத்தோடு சமுத்திரத்திலே போய்க் கலக்கட்டும். ஆனால், ராமு! ராமு! என்று அந்த அலைகள் மாத்திரம் ஒலித்துக் கொண்டிருக்கும்.”